# விவேகி

VIVEKI 1.8.67 40 சதம்




“என்ன ரீட்டா!... உமக்கு இந்த புராதன சிற்பங்களில் இவ்வளவு இன்டறஸ்ரிங் இருக்கே... என்றால் நம்ப முடியவில்லையே?”

விவேகி

மலர்: 8 இதழ்: 8

கௌரவ ஆசிரியர்;
மு. வி. ஆசீர்வாதம் ஜே. பீ.

நிர்வாகி:
மாட்டின்

ஆசிரியர்கள்:
செம்பியன் செல்வன்
செங்கை ஆழியான்

# கலையும், நிலையும்

'ஈழத்தில் தமிழ் நாடகக்கலை வளரவேயில்லை' — என்ற அபிப்பிராயம், எமது சகோதர இனத்தவர்களிடையே நிலவி வருகின்றது. இவர்களின் இந்த அபிப்பிராயம் உருவாகிய பின்னணிதான் என்ன?

எந்த மொழியிலும் நாடகம் என்னும் துறையின் வளர்ச்சி – கடிகார முள்ளின் மென்மையான நகர்வாகவே இருந்திருக்கின்றது. ஆயினும், அத்தகைய நகர்வைக் கூட அவதானிக்கக் கூடியதாக பிற மொழியினருக்கு சாதகமாக பல நாடக மேடைகள் நிரந்தரமாக இருந்திருக்கின்றன. இத்தகைய நிரந்தர நாடக மேடைகள் பிரதான நகர்களில் அமைந்திருந்ததாலும், தொடர்ச்சியான நாடக அரங்கேற்றங்களைக் கொண்டிருந்தகாலும் நாடகத்தின் போக்கை விமர்சகர்கள் அவதானிக்கவும், நடிகர்களுக்கு பயிற்சியளிக்கவும், இரசிகர்களிடையே நாடக உணர்வை ஏற்படுத்தவும் முடிந்தது. ஆனால் –

ஈழத்திலோ தமிழ் நாடகங்களை அரங்கேற்ற ஏற்ற நாடக மேடைகள் இல்லை. நாடகங்கள் எல்லாம் தற்காலிக மேடைகளிலேயே நடைபெறுகின்றன. அத்துடன் இந்த நாடகங்கள் பல திக்குகளிலும் எந்த விதமான மக்கள் தொடர்புமில்லாமல், மிகக் குறுகிய நோக்கங்களுக்காக அரங்கேற்றும்போது 'பொறுப்பான பெரியவர்கள்' பார்க்க முடியாது போகின்றது. மேலும், புதிதாக வரும் பிற இனத்தவரும் சனசமூகங்களும், சிறு கிராமச்சங்கங்களும் தங்கள் ஆண்டு விழாவில் ஓர் உப நிகழ்ச்சியாக நடத்தும் சில்லறை நாடகங்களையே பார்க்க முடிகின்றது. அல்லது-

கொழும்பில் நம் பண்பாடுகளுக்கு முரண்பட்டதாகவும், ஏதோ மக்கள் சிரித்தால் போதும் என்ற மனப் பக்குவத்தில் பொறுப்பற்றவர்களால் நடாத்தப்படும் சிறு பிள்ளைத்தனமான நாடகங்களையே பார்க்கின்றனர். இவற்றின் மூலம் தங்கள் அபிப்பிராயத்தைப் பிரகடனப்படுத்தி விடுகின்றனர்.

ஆனால், அவர்கள் நாடகத்திற்கென வாழ்ந்து கொண்டிருக்கும் சிறந்த தமிழ்க் கலைஞர்களின் நாடகங்களைப் பார்ப்பதுமில்லை; அல்

லது பார்க்க வசதியுமில்லை, இதனால் இவர்கள் கருத்து இவ்வாறு உருவாகிவிட்டது.

ஆனால் இக் குறைபாடுகள் நீங்கவும் தமிழ் நாடகத்தின் போக்கை தெளிவாக அறியவும் ஏற்ற ஒரு நிலையை வடபகுதி ஐக்கிய மேற் பார்வைச் சபையினர் இன்று உருவாக்கி வருகின்றனர் என்பதனை அறியும்போது நாம் மகிழ்ச்சியடைகின்றோம். வடபகுதி ஐக்கிய மேற் பார்வைச் சபையினர் தற்போது ஏராளமான பொருட் செலவில் உருவாக்கிவரும் தமது காரியாலயக கட்டிடத்தின் கீழ்ப் பகுதியில் ஒரு சிறந்த பொதுமண்டபத்தை அமைத்துவருகிறார்கள். இம் மண்டபம் பொது நிகழ்ச்சிகளுக்கு ஏற்றதாயினும், சிறப்பாக நாடக அரங்கேற் றங்களுக்கு ஏற்றதான பல நவீன வசதிகளையும் கொண்டு விளங்கும். இம் மண்டபம் இவ்வருட முடிவிற்குள் பாவனைக்கு விடப்படும் எனவும் தெரிகின்றது.

நல்ல நாடக மேடையான இது நமக்குக் கிடைத்துவிடும்போது தமிழ் நாடகங்களைப் பற்றிக் கூறும் தவறான கருத்துக்கள் நிச்சயம் மாற்றப்படும் என நம்புகிறோம். இதன் மூலம் தமிழ்மக்களின் பண்பாட்டு வளர்ச்சிக்கு வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபையினர் மாபெரும் பணியை ஆற்றியுள்ளனர் எனக் கூறுவதில் பெருமைப்படுகின்றோம்.

## வாழ்த்துகின்றோம்

அல்வாயூர்க் கவிஞர் செல்லையாவின் குடும்பத்தினருக்கு, அவ் வூர் மக்கள் ஐயாயிரம் ரூபாய் கொண்ட பண முடிப்பை அளித் துள்ளனர். இதன் மூலம் நம் நாட்டு கவிஞரையும், சமூகத்தொண் டர்களையும் மக்கள் கௌரவித்துள்ளனர். கவிஞரின் நெஞ்சம் வானு லகில் பெருமிதத்தால் நிச்சயம் விம்மும்.

**கலைஞன் என்பவன் எல்லாக் காலத்தும் எல்லார்க்கும் உரிய கலங்கரை விளக்கம்.**

**— கார்லைல்**

# யுக்திப் புதிர்

சென்ற மாத யுக்திப் புதிருக்கு மொத்தம் 205 விடைகள் வந்தன. அவற்றில் 9 விடைகளே சரியாக இருந்தன. அவற்றில் சரியான விடை எழுதி இம் மாதப் பரிசைப் பெற்றவர்—

ஏச். எம். ஏ. ஹுஹாப்டீன்
82, பசல்ஸ் லேன்,
வெள்ளவத்தை, கொழும்பு.

சரியான விடை : இருவரும் தத்தம் குதிரைகளை மாற்றிக் கொண்டனர். முதலாவது குதிரையில் வருபவன் குதிரை இரண்டாவதாக வரும்.

சரியான விடை எழுதிய இவர்களுக்கு இம்மாத விவேகி அனுப்பப்பட்டுள்ளன.

அ. வள்ளிநாயகி, உடுவில், எம். ஏச். எல் ஏ. நூகூர், வெலிகாமம் வி. அலெக்ஸாண்டர், யாழ்ப்பாணம் அ. கனகசூரியர், ஊரெழு ச. விநாயகரத்தினம், அட்டன் மு. உம்முசல்மா, மூதூர் செல்வி. மேரி. ரதீன், சுன்னுகம் ம. மனோகரன், பரந்தன்,

இம்மாதப் புதிர் :

ஒரு அர்ச்சகர் மூன்று கோவில்களுக்குப் பூஜை செய்பவர். அவர் காலை எழுந்தவுடன் கோயில் நந்தவனத்திற்குப் போவார். பூக்களைப் பறித்துக் கொள்வார். முதல் கோவிலுக்குப் போய் பூக்களின் மேல் மந்திர நீரைத் தெளிப்பார். பூக்களின் எண்ணிக்கை இரட்டிப்பாகும். கொஞ்சப் பூக்களை அங்கு சுவாமிக்குச் சாத்திவிட்டு, மிகுதிப் பூக்களுடன் அடுத்த கோவிலுக்குப் போவார். முதல் கோவிலில் செய்த மாதிரியே அங்கும் செய்வார். பின் மூன்றும் கோவிலிலும் அவ்வாறே செய்துவிட்டு மொத்தப் பூக்களையும் சாத்திவிட்டு வருவார். ஆனால்—

வெளியே வந்தால் அவர் மூன்று கோயிலுக்கும் சாத்திய பூக்கள் ஒரே எண்ணிக்கையாக சமமானதாக இருக்கும். ஆகவே—

அர்ச்சகர் பறித்த பூக்கள் எத்தனை ? கோயில்களுக்குச் சாத்திய பூக்கள் எத்தனை ?

விடையை ஒரு தபால் அட்டையில் எழுதி கீழேயுள்ள முகவரியை கத்தரித்து ஒட்டி அனுப்பவும்.

யுக்திப் புதிர்—3
விவேகி
29, கண்டி வீதி
யாழ்ப்பாணம்.

# ஒலிவர் ருவிஸ்ட்

ஏ. ரி. பொன்னுத்துரை B. A.

பிணம் போல காட்சியளிக்கும் அந்த கள்ளம் கபடமற்ற ஒலிவர் மலைத்தான்; செய்வதறியாது தவித்தான். அந்த வீட்டில் வசிக்கும் குடும்பத்தின ருக்கு நேர இருக்கும் அவலத்தை, மரணமே ஏற்பட நேரிடினும் கூறுவதே தர்மம் என்றது அவன் உள்ளத்தில் பளிச்சிட்ட சிந்தனை. நல்ல எண்ணத்துடன் காலடி எடுத்து வைத்த ஒலிவர் ஸ்தம்பித்தான். "திரும்பி வா; திரும்பி வா" என்று சைக் எழுப்பிய கள்ளக் குரலே இதற்குக் காரணம். அமைதியான இரவில் தோன்றிய திடீர் சப்தம் அதனைத் தொடர்ந்த பேரிரச்சல் அவனைத் திகிலுறச் செய்தன.

பேரிரச்சல் மீண்டும் ஒலித்தது; வெளிச்சம் பளிச்சிட்டது. அரை உடுப்புக்களுடன் இரு பயங்கர உருவங்கள் அந்த மேல் மாடியை நோக்கிச் செல்லும் படிகளின் மேல் நீந்துவது போல ஒலிவரின் கண்களுக்குத் தென்பட்டன. திடீர் ஒளி – பேரிரச்சல் - புகை - வெடிச்சப்தம் எங்கேயோ தொலைவில். தப்பியோடும் இருவரை நோக்கி தனது பிஸ்ரலால் சுட்டவண்ணம் கொலரை பற்றியபடி ஒலிவரைத் தூக்கினன் சைக். ''என்னை இறுகப் பிடித்துக் கொள்'' என்று கூறிய படி யன்னலுக்குடாக ஒலிவரை வெளியே இழுக்கிறுன். இரத்தம் வடிந்த நிலையில் ஒலிவர் இருந்ததால் ரொபியிடம் ஒரு துண்டு தரும்படி கேட்கின்றுன் சைக். பிஸ்ரல்களின் சப்தத்துடன் மணி ஒலியும் கேட்கிறது ஒலிவருக்கு. வேகமாக தன்னை இழுத்துச் செல்கிறுர்கள் என்ற உணர்வு ஏற்படுகிறது. கேட்ட சப்தத்தில் ஒருவித குழப்பம். அவனுல் காணவோ அன்றி கேட்கவோ முடியவில்லை. ஆமாம். அவனோர் உணர்ச்சியே அற்ற மரக்கட்டையாகிவிட்டான்.

## 9

பேரிரச்சல் கேட்கிறது; கேற்றைத் தாண்டி பாய்ந்து வருகின்றுர்கள் மூவர். அவர்களுக்கு முன்னே இரண்டு நாய்கள் வருகின்றன. 'ஒலிவரை விட்டு விட்டு ஓடவேண்டியதுதான்" சொல்லி முடிப்பதற்குள் வாயு வேகத்தில் ஓடுகிறுன் கிறக்கிற். அங்குமிங்கும் ஒரு கணம் நோட்டம் விட்ட சைக், ஒரு சால்வையால் ஒலிவரை மூடிவிட்டு, செடிகளின் ஓரமாக ஓடி இறுதியில் அதனைப் பாய்ந்து மறைந்து விடுகிறுன்.

அங்கே வந்த மூவரும் தமது நாய்களைத் திரும்ப கூப்பிடுகின்றனர். ''உடனடியாக நாங்கள் வீட்டுக்கு திரும்புவதுதான் நல்லது" வந்தவர்களுள் கொழுத்து பருத்தவரின் புத்திமதி இது.

"நீ கூறுவதை நான் ஒத்துக் கொள்ளுகிறேன் மிஸ்டர் கில்ஸ்" (Mr. Giles) பதிலிறுக்கிறுர் பிறிரறில் (Brittle) என்ற ஒரு கட்டைப் பேர்வளி, பயத்தால் வெளிறிப் போய் இருந்த மூவரும முதலில் தமது கோழைத்தனத்தை ஒப்புக்கொள்ள வெட்கமுற்றனர்.

திருட்டு நடாத்த எத்தனிக்கப்பட்ட வீட்டுச் சொந்தக்காரியான ஒரு முது பெண்ணின் பிரதம வேலைக்காரன்தான்மிஸ்டர்கில்ஸ்என்பவர். குழந்தைப்

பருவத்திலேயே வேலைக்கு சேர்ந்த பிறிரில் பல வேலைகளைப் புரிந்தாலும், முப்பது வயதைத் தாண்டிய போதிலும் இளம் பையனுகவே கருதப்பட்டான். கள்வர்களைப் பிடிக்கும் முயற்சியில் இவர்களுடன் தனது இரு நாய்களையும் கொண்டு வந்தவர் இடம் பெயர்ந்து வேலைசெய்யும் ஒரு தகரத் தொழிலாளி. சம்பாஷணையால் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு ஒட்டினுற் போல சேர்ந்து நடந்தபடி வேகமாக மூவரும் வீடு போய்ச் சேர்ந்துவிட்டார்கள்.

காற்று குளிர்ந்து கொண்டு வந்தது. அடர்ந்த பனி எங்கும் கொட்டியது. சைக்கிளுல் விடப்பட்ட இடத்திலேயே ஒலிவர் அசைவற்று நினைவற்றுக் கிடக்கிருன். விடியற்காலை காற்று உக்கிரமாகத் தாக்கியது. சோனுவாரியாக மழை கொட்டியது. குளிர் காற்றும் கொட்டும் மழையும் ஒலிவரைத் தாக்கியும் அவன் உணர்ந்தால்தானே. இப்போதும் அந்த களி மண் தரையில் கால் கைகளை நீட்டியபடி உணர்வற்றவனுய் உதவியற்றவனுய் கிடக்கிருன் ஒலிவர். நோவை வெளிப்படுத்தும் மெல்லிய முனகலுடன் அவன் விழிக்கிருன். சால்வையினுல் கட்டப்பட்ட அவனது டது கை பாரமாக உதவாததாக தொங்குகிறது. எழும்பவே சக்தியற்றவனுக இருந்தான். இறுதியாக அவன் ஒருமாதிரியாக எழுந்து மெல்லென நடந்து தெருவை அடைந்தான். சிறிது தூரத்தில் ஒரு வீட்டை கண்ட அவன் அங்கே சென்று உதவி கோரலாம் என்று பூரித்தான். வீட்டின் முன்னே உள்ள பச்சைப் பசுந்தரையைத் தாண்டி படிக்கட்டுகளில் ஏறி மெல்லென கதவில் தட்டினுன். இளைத்து களைத்து சக்தியற்று காட்சியளித்த ஒலிவர் வாயிற்படியில் தொப்பென இருந்து விட்டான்.

இந்த வேளையில்தா[illegible] மிஸ்டர் கில்[illegible] பிறிரில் மற்றும் தகர தொழிலாளி ஆகிய மூவரும் குசினியில் 'ரீ' அருந்திக் கொண்டிருந்தார்கள் அங்கே நின்ற பலருக்கு மிஸ்டர் கில்ஸ் திருட்டுப் பற்றிய முழு விபரங்களையும் திகிறும்படிலு வர்ணித்துக் கொண்டிருந்தார். கதவில் ஒலிவரால் தட்டப்பட்ட சப்தம் உள்ளே நின்றவர்களுக்கு பீதியைக் கொடுத்தது. மிஸ்டர் கில்ஸ்சும் மற்றும் சகபாடிகளும் பயந்தாங் கொள்ளிகள் ஆயிற்றே! ஆனுல் தாங்கள் அசகாய சூரர்கள் எனத் தம்பட்ட மடிக்க தயங்காத பேர்வளிகள். மிஸ்டர் கில்ஸ் அந்த கதவை திறக்கும்படி மற்றையவர்களைக் கேட்ட போது அவர்கள் முன்வந்தால் தானே.

தகரத் தொழிலாளி நித்திரை செய்வது போலவே பாசாங்கு செய்தான். இறுதியாக நாமுடன் இருந்த இருவரையும் சேர்த்து ஐவராக கதவண்டை பலமாக கதைத்தபடி சென்றுர்கள். மிஸ்டர் பிறிரில் கதவை மெல்லெனத் திறந்தார். ஐவரின் கால்களும் தந்தியடித்தன. பய உணர்வால் அவர்கள் பட்டபாடு! எதிர்க்கக் கூடிய உருவம் ஒன்றையுமே காணவில்லை. களைப்புடன் பேச்சு மூச்சற்ற ஒரு உருவம் தனது விழிகளை மேலே பாய்ச்சியது. கருணை காட்டும்படி அமையாதிகக் கேட்டது. தகரத் தொழிலாளியை ஒரு பக்கத்துக்கு தள்ளியபடி வீராதி வீரனுக காட்சி தந்த மிஸ்டர் கில்ஸ் ஒலிவரை உள் மண்டபத்துள் இழுத்தபடி "ஒரு பையன்" என எக்காளமிட்டான். "இதோ இங்கே இருக்கிறுன்! இவனும் அந்தத்திருடர்களில் ஒருவன்! இதோ காயங்களுடன் இருக்கிறுன். ஆமாம் இவனைச்சுட்டது நான்தான்"–மிஸ்டர் கில்ஸின் எக்காளமிது.

"மிஸ்டர் கில்ஸ்" மாடிப்படிகளின் மேல் படியில் நின்ற ஒரு நங்கையின் ஓசைதான் இது.

(வளரும்)



# தருமத்தின் காவலர்

இ. சுந்தரலிங்கம்

மிகவும் கம்பீரமான தோற்றம். பார்ப்போரை ஓரே பார்வையில் கவரும் தன்மையும், அதே நேரத்தில் தனது பார்வையில் முன் நிற்போரைக் கட்டுப்படுத்தும் தன்மையும் நிறைந்த விழிகள். பொது நிறம்; தோற்றப் பொலிவிற்கு ஏற்ற உயரம்.

அவர் தான்–

யாழ்ப்பாணத்தின் புதிய பொலீஸ் சுப்பிரீண்டன் இ. சுந்தரலிங்கம் அவர்கள்,

"...ம்... வாருங்கள்..." என்ற அழைப்பினை ஏற்று உள்ளே நுழைந்தோம். நுழையும்போது எம்மை அறியாது கால்கள் சிறிது தயங்கவே செய்தன. அத் தயக்கம் சில கணப்பொழுதுகளில் மறைந்துவிட்டன.

—எவ்வளவு நல்ல மனிதர் மிகமிக நல்ல மனிதர்.

ஆத்மஜோதி எனும் சமய ஏட்டின் ஆசிரியரான திரு. இராமச்சந்திரனின் மகன் தான் நமது பொலீஸ் சுப்பிரீண்டன் சுந்தரலிங்கம் ஆவார்; கண் வைத்தியத் துறையிலே ஆசியாவிலேயே மிகச் சிறந்தவர் எனப் போற்றப்படும் டாக்டர் பரராசசேகரர் இவரின் சகோதரர். 37 வயது நிரம்பியவரான திரு. சுந்தரலிங்கம் தனது இளம் வாழ்வினைக் கூறினார் :

"நான் நுகெகொடவிலுள்ள சென். ஜோன்ஸ் கல்லூரியில் தான் சிறுவயதில் கல்வி கற்றேன். அதன்பின் யாழ்ப்பாண மத்திய கல்லூரியில் கல்வி கற்று, சர்வகலாசாலையில் பட்டம் பெற்றேன்."

''பட்டம் பெற்றதன் பின் நீங்கள் ஏன் பொலீஸ் துறையில் சேர்ந்தீர்கள்?''

''பொலீஸ் துறையில் சேர வேண்டும் என்ற ஆசை எனக்கு ஆரம்பத்தில் இருக்கவில்லை. நான் பட்டப் பரீட்சை எழுதி விட்டு, வீட்டில் இருக்கும் போது எனது உறவினர் ஒருவர் எனது சாதகத்தைப் பார்த்துவிட்டு, 'நீ சாதகப்படி இராவணுத் துறையில் சேர்வாய்' என்று கூறினார். நான் பொலீஸ் துறையில் சேர்ந்தேன். 1955 ஆம் ஆண்டு என்று நினைக்கின்றேன். எங்களது 'இன்ரவியூ' நடந்த நாள் அது. ஏழு பேர் நேர்முகப் பரீட்சைக்குச் சென்றிருந்தோம். அதில் நான் 400 புள்ளிகளுக்கு 350 புள்ளிகள் பெற்றேன்! நான் நினைக்கிறேன். இதுதான் மிகக் கூடிய புள்ளிஎன! நான் இவ்வாறு கூடிய புள்ளிகள் பெற ஒரு இரகசியமுளது... உங்களுக்குக் கூறினல் என்ன...? நான் நன்ருகப் பாடமாக்குவதில் கெட்டிக்காரன்... நேர்முகப் பரீட்சைக்குப் போவதற்கு முன் பொலீஸ் ஆண்டறிக்கையை நல்லாய் பாடமாக்கிக் கொண்டு போனேன்... வெற்றி எனக்கே........'' என்று சிரித்தார்.

''உங்களுக்கு ஜாதகத்தில் நம்பிக்கை இருக்கின்றது என நினைக்கிறோம்?''

''சாதகத்தில் நம்பிக்கை இருக்கோ, இல்லையோ எனக்குத் தர்மத்தில் நிறைய நம்பிக்கை இருக்கிறது...... சட்டம் என்பது சட்டத்துள் அடங்கிய முறையில் தான் தீர்ப்பை வழங்குகிறது... அத் தீர்ப்புச் சிலவேளை தவருகவும் அமைந்து விடலாம்... தர்மம் அப்படியல்ல...... சரியான தீர்ப்பையே அது எப்போதும் வழங்குகின்றது...... உங்களுக்கு ஒரு அனுபவம் கூறுகின்றேன்... 1961-ஆம் ஆண்டு, நான் அம்பலாங்கொடையில் ஏ. எஸ். பியாக இருந்தேன். போட்டின் என்ற ஒரு முதலாளி வீட்டில், சொய்சா என்பவர் கொலையுண்டு கிடப்பதாகச் செய்தி கிடைத்து அங்கு போனேம். அங்கே - சொய்சா கோடாரியொன்றினுல் தாக்கப்பட்டு இறந்து கிடந்தார். போட்டினின் மகனின் முதுகில் கத்திக்குத்தும் இருந்தது! போட்டின் சாட்சியமளித்தார். சொய்சா, தனது மகனைத் துரத்தி வந்து கத்தியால் குத்தியதாகவும் தனது மகன் தற்காப்பிற்காகக் கோடரியால் வெட்டியதாகவு கூறினுர். வழக்கு நடந்தது! இக் கொலை நடந்த மூன்ரும் நாள், இரவு பியதாசா என்பவன் எனது வீட்டிற்கு வந்து, சொய்சா கொலை சம்பந்தமாக உண்மைகளைக் கூறுவதாகக் கூறினுன். அவன் கூறிய செய்திகள் திகைப்பைத் தந்தன. போட்டின் முதலாளி சொய்சாவை வீட்டிற்கு விருந்துக்கு அழைத்திருந்தாராம். சொய்சாவை வீட்டிற்கு அழைத்து வந்தவன் இந்தப் பியதாசா தானும். அங்கு சொய்சாவிற்குச் சாராயம் பொரித்த ருல் தேங்காய்ச் சொட்டு எத பன வழங்கப்பட்டனவாம். பின், அவரைப் போட்டின் கோடரியால் வெட்டிக் கொலை செய்தாராம். கொலை செய்துவிட்டு தனது மகனின் முதுகிலும் கத்தியால் குத்திவிட்டு, வழக்கை இவ்வாறு சோடித்தாராம். தன்னைப் பயமுறுத்தி ஒருவருக்கும் கூறக் கூடாது என்றும் அனுப்பினுராம். நான் இந்த வாக்கு மூலத்தைக் கோர்ட்டில் தாக்கல் செய்தேன்! இந்த வாக்கு மூலத்திற்கு ஆதாரமாக, சொய்சாவின் உடலைப் பரிசோதனை செய்த டாக்டர், ருல், தேங்காய்ச்சொட்டு என்பன இறப்பதற்கு முன் சொய்சா சாப்பிட்டுள்ளார் என்று கூறி

ஞர்! போட்டின் சார்பில் ஜி ஜி பொன்னம்பலம் வாதாடி ஞர்! பியதாசாவின் சாட்சியத் தைக்கோர்ட்டில்ஏற்றுக்கொள்ள வில்லை போட்டினும் மகனும் விடுதலை செய்யப்பட்டார்கள்! விடுதலை 4 மணிக்கு நிகழ்ந்தது! 6 மணிக்குப் போட்டின் யாராலோ சுடப்பட்டு இறந்த தாக எனக்குச் செய்தி வந்தது... தர்மம்வென்றது என்றே எண்ணு கின்றேன்......"

'நீங்கள் எங்கெங்கு பதவி வகித்தீர்கள்?"

"மாத்தளை அம்பலாங்கொடை மட்டக்களப்பு, எனுமிடங் களில் ஏ. எஸ். பி யாக இருந் துள்ளேன்

''யாழ்ப்பாணத்தில் தான் நீங்கள் முதன் முதல் எஸ். பி. யாகப் பதவி ஏற்றீர்கள்?''

'ஓம்...... இங்கு நான் பதவி ஏற்றபோது, எனது மனதை வருத்தியது ஒன்றுதான்......... நமது வருங்கால இளை ஞர்கள் சைக்கிள்களில் காவா லித்தனமான சேஷ்டைகளோடு வீதியளப்பதைக் கண்டேன்...... அதனைக் குறைக்க விரும்பி னேன்...... வெற்றியும் பெற் றேன்......''

திரு. சுந்தரலிங்கம் அவர்க ளுக்கு. ஒன்பதுவயதில் ஒரு மகன் இருக்கின்றான்; அவனை பொலீஸ் துறையில் ஈடுபடுத்துவீர்களோ எனக் கேட்டோம்.

"எதிர்காலம்தான் பதில்கூற வேண்டும்!" என்றார், சிரித்தபடி

''இப்போது உங்களது பிரச் சனை...?''

''சாதிப் பிரச்சனை, வல் வெட்டித்துறைப் பிரச்சனை என்பன தலையீடியைக் கொடுக் கத்தான் செய்கின்றன... யாழ்ப் பாணத்தில் படித்தவர்கள் பலர். படித்த நாடு நமதுபூமி... ஆனால் சாதிப் பாகுபாடு இங்குதான்... சமூகம் திருந்த வேண்டும்...''

"அரசியல் உங்களது வாழ் வில்...?"

குறுக்கிட்டார், சுந்தரலிங்கம்:

''நமது உத்தியோகத்தில் அரசியல் என்பதற்கே இட மில்லை... கட்டுப்பாடு, அமைதி என்பவற்றோடு சட்டத்தைப் பாதுகாப்பதுதான் நமது தொழில்! சொந்த விருப்புக ளுக்கு இங்கு இடமில்லை..."

''உங்களால் மறக்க முடியா தது...?''

''ஒன்று உண்டு- 1965-ல் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் நிகழ்ந்த மாணவர் ஆர்ப்பாட் டத்தில் நான் சட்டத்தின் பங்கி னனாகப் பங்கு கொண்டது... நான் மாணவர்களை எவ்வளவோ வேண்டினேன்... நானும்பல்கலைக் கழக மாணவர் சங்கத்தலைவனாக இருந்தவன்!... இதை எல்லாம் எடுத்துக் கூறி அமைதியாகக் கலைந்து போகும்படி வேண்டி னேன்... மாணவர்கள் கேட்க வில்லை... அதனால்தான் அந்த கைய துரதிர்ஷ்டம் நிகழ்ந்தது. கல்வி என்பது எதுவென்று மாணவ சமூகத்திற்கு இன்று புரியவில்லை... ஒழுக்கந்தான் கல்வி என்று கருதுகிறேன்!...... சமூகம் வேறு, பொலீஸ் வேறு என்று சிலர் நினைக்கிறார்கள்... எவ்வளவு தவறு.. சமூகத்தின் ஒரு அங்கந்தான் பொலீஸ்- பொலீஸ் மக்களுக்காகவே இருக் கிறது......''

'இறுதியாக 'விவேகி' மூலம் மக்களுக்கு நீங்கள் விடும் அழைப்பு என்ன?"

"நாங்கள் உங்களுக்காகத் தான் இருக்கின்றோம்! எங்களது கடமையைச் சரிவரச் செய்ய உங்களது பூரண ஒத்துழைப் பைத் தாருங்கள்..."

இறுதியாக அவருக்கு நன்றி கூறி விடை பெற்றோம்.

—நமது நிருபர்

# அப்பா பாவம்

—சாந்தன்—

இரண்டு நாட்களுக்கு முன்பு தான், யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பிற்குத் திரும்பினோம் நாங்கள். நாங்களென்றால், நான், அப்பா, அம்மா எல்லோரும்தான். நான், இப்போதுதான் முதல் முதல் யாழ்ப்பாணம் போனேன். ஏன், அம்மாகூட இப்போதான் முதல் முறையாக யாழ்ப்பாணம் வந்தாராம, நான்தான் சின்னவன்; அம்மா இவ்வளவு நாட்களும் ஏன் அங்கே போகவில்லை? அப்பாவிடம் இதைக்கேட்டேன். அப்பா சொன்னார், "உன்னைப் போலத்தான் உன்ர அம்மாவும் இங்க பிறந்து வளர்ந்தவ" என்று.

அப்பாவுக்குத்தான் சொந்த ஊர், யாழ்ப்பாணம். அவருடைய அப்பா, அம்மா எல்லோரும், அங்கேதானிருக்கிறார்களாம். ஆனல், தான் பத்து வருஷமாக அங்கே போகவில்லை என்று அப்பா சொன்னார். அப்பாவிற்கு இப்போது கூட அங்கே போக விருப்பமில்லையென்று எனக்குத் தெரியும். ஆனல், பாலா மாமாதான் அடிக்கடி வந்து, "ஒருக்காப் போட்டு வாடா, சிவா" என்று தொல்லைப்படுத்துவார். பாலா மாமா, நல்ல 'பிள்ளை'. அப்பாவின் தங்கச்சியுடைய 'புருஷ'ராம். அவர். எங்களுடைய சொந்தக்காரரில் அவர் ஒருதரைத்தான் எனக்குத் தெரியும்.

பாலா மாமாவுக்காக, அப்பா யாழ்ப்பாணம் புறப்பட்டார். அம்மா, அப்பா, நான், பாலா மாமா நாலு பேரும் போனோம். போகும் பொழுது, "அங்கை எப்பிடியும், இரண்டு கிழமை நிண்டிட்டுத்தான் வரவேணும்" என்று பாலா மாமா சொன்னதற்கு, அப்பா தலையாட்டினர், ஆனல், அங்கே இரண்டு நாள் நின்றவுடனேயே ஏன் திரும்பினோம்?

ரயிலில் போவதுதான் எவ்வளவு சந்தோஷம்? அதற்கு முதல், நான் ஒருதரம் கண்டியிலிருந்து கொழும்பிற்கு வந்திருக்கிறேன், ரயிலில். யாழ்ப்பாணப் பாதை, கண்டிப்பாதையைப் போல அவ்வளவு அழகில்லைத்தான். ஆனல்ரயில் நல்லவேகமாக ஓடியது. எனக்கும் நல்ல சந்தோஷம். வழி நெடுக, அப்பாவும், பாலாமாமாவும் 'யாழ்ப்பாணம் போன பிறகு என்ன செய்வது' என்று பேசிக் கொண்டு வந்தனர். ரயிலுக்குள்ளே அம்மா சொன்னார், "இளங்கோ அங்கே உன்னோடை விளையாட கனக்க அண்ணை, மச்சான்மார், எல்லாம் இருக்கிறான்கள்..." என்று. ஆனல், அங்கே ஒருதரும் என்னுடன் விளையாட வரவில்லை.

போகும் பொழுது, அப்பாவிற்குப் பயம்; அம்மாவிற்கும் பயம். நானும் பாலா மாமாவும், என்னென்னவோ யோசித்துச் சந்தோஷப்பட்டுக் கொண்டு போனோம். வரும் பொழுது, எல்லோருக்குமே கவலை.

'ஸ்ரேஷ'னுக்கு, ஒருதரும் வரவில்லை. மாமா, ஒரு கார் பிடித்து எங்களை அப்பா வீட்டிற்குக் கூட்டிக் கொண்டு போனார். அப்பா ஸ்ரேஷன் கட்டிடத்தைப் பார்த்து, ''அட ..எப்படிக் கட்டிப் போட்டான்கள், இப்ப..'' என்றார். பாலாமாமா சொன்னார், ''பத்து வருஷமெல்லே? வந்துபார் . இன்னும் எத்தினை புதினங்களெண்டு...''

கார் ஓட ஓட, புதுப்புது விதமான இடங்களைப் பார்த்தேன். கொழும்பைப் போல இல்லை மாமா, எனக்கும் அம்மாவுக்கும் எல்லாவற்றையும் விளங்கப் படுத்திக் கொண்டு வந்தார். அப்பா, ஒன்றும் பேசாமல், அங்குமிங்கும் திரும்பித்திரும்பிப் பார்த்துக் கொண்டு வந்தார். அம்மா, ''தம்பி...அங்க போய்க் குழப்படி பண்ணக் கூடாது .. நல்ல பிள்ளையாயிருக்க வேணும்' என்று சொன்னார். உடனே பாலாமாமா, ''ராசாவுக்கு அங்க ஒரு பாட்டா, ஒரு பாட்டி. ஒரு சித்தப்பா, இரண்டு மாமி எல்லாரும் இருக்கினம்; வந்து பாரேன்...'' என்று என்னைக் கொஞ்சினார், கார். ஒரு ஒழுங்கைக்குள்ளே போய், ஒரு பெரிய 'கேற்'றுக்குமுன்னே நின்றது.

**பெ**ரிய பழைய வீடு. ஒருவருமே வெளியில் இல்லை. இருந்தாற்போல, ஒரு கிழவி ஓடிவந்து, ''எட வந்திட்டியே... வந்திட்டியே . ?'' என்று கேட்டுக் கொண்டு அப்பாவின் கன்னத்திலே 'பளார் பளார்' என்று அடித்தாள். எனக்குக் கோபங் கோபமாய் வந்தது. என்றால் ஒன்றுமே செய்ய முடியவில்லை. மாமாதான் தூக்கி வைத்திருந்தாரே? அம்மா தலையைக் குனிந்து கொண்டு நின்றார்.

அடித்த கிழவி, இருந்தாற் போலஅழுதாள். அழுதுகொண்டு அப்பாவைக் கட்டிப் பிடித்துக் கொஞ்சினாள்– அப்பா என்னைக் கொஞ்சுவது போல. அப்பாவும் அழுதார். ''என்ர ராசா இவ்வளவு நாளா எங்கபோனனீ...'' என்று அந்தக் கிழவி விம்மினாள்.

''இவதான் ராசான்'ர பாட்டி'' பாலா மாமா, காதுக்குள்ளே மெல்லமாகச் சொன்னார். ''பாட்டியெண்டால் .....''– எனக்கு விளங்கவில்லை. ''அப்பாவுடைய அம்மா...''. அப்பாவும், அவருடைய அம்மாவும், இன்னும் அழுது கொண்டுதானிருந்தனர். எனக்குச் சிரிப்பு வந்தது? ஏன் அழுகிறார்கள்?

முன்புற அறையின் ஜன்னலிலிருந்து என்னைப் போன்ற நாலைந்து முகங்கள் எட்டிப் பார்த்தன. அம்மாவைப் போலவும், யாரோ நின்றார்கள். 'டக் டக்' கென்று சத்தங் கேட்டுத் திரும்பிப் பார்த்தேன். ஒரு கிழவர் வீட்டுக்குள்ளிருந்து வந்தார். வெள்ளைத் தலை. அப்பாவைப்போல முகம் அப்பாவின் அப்பாவோ? மாமாவைக் கேட்டேன்.

''கெட்டிக்காரப் பயலடா நீ'' என்றார்.

பாட்டா, பாட்டியைப் போல அப்பாவுக்கு முன்னே போய் நிற்கவில்லை. நேரே அம்மாவிடம் போய் நின்று, உற்றுப் பார்த்தார். அம்மா, அவருடைய காலில் வீழ்ந்து வணங்கியதும், தலையைத் தடவி

''எழும்பு'' என்றூர். பிறகு, மாமாவுக்குப் பக்கத்தில் நின்று, என்னைப் பார்த்தார். எனக்கு ஒரே வெட்கம். பாட்டாவைப் பார்த்துச் சிரித்தேன்.

பாட்டி, அப்பாவை விட்டு அம்மாவின் கையைப் பிடித்து, ''உள்ளுக்கு வா......'' என்று சொல்லி, முன்னே போனூர். எல்லோரும் உள்ளே போனேம். எங்களுடைய கொழும்பு வீட்டைப் போல வடிவில்லைத்தான்; ஆனூலும் பென்னம் பெரிய வீடு.

சிறிது நேரங் கழித்து, அப்பாவின் தம்பியும், தங்கையும். அவர்களுடைய பிள்ளைகளும் வந்து எங்களைச் சுற்றி வளைத்துக் கொண்டனர். மாமா, ஒவ்வொருவரும் யார் யாரென்று மெதுவாகச் சொன்னூர். எல்லோரும் அப்பாவைத்தான் கேள்விகள் கேட்டார்கள். அம்மாவைக் கவனிக்கவில்லை.

அன்று பின்னேரம், யார் யாரோவெல்லாம் வந்தார்கள், அப்பாவைப் பார்க்க. ஒரு பெண் பாட்டியைக் கேட்டாள், ''இவன் தானே சிவசுப்பிரமணியத்தின்ர பெடியன் ?''

பாட்டி, தலையசைத்தாள்.

''நல்ல சிவலையாயிருக்கிறுன்... தேப்பன் கரிக்கட்டை மாதிரி!... தாயைப் போலே...... என்ன ?''

''ம்ம்...''

''என்னவாம், மருமகள் ?''

''போ போ........ நீதான் போய்க்கேள். அவளுக்குத் தமிழுந் தெரியுமோ, என்ன இழவோ ?'' அம்மாவுக்குத் தமிழ் தெரியாதா ? பாட்டி என்ன கதைக்கிறுர் ? நான் எழுந்து ஓடினேன்.

கூடத்திற்குள் ஏதோ சத்தங்கேட்டு ஓடிப் போனேன். அப்பாவுஞ் சித்தப்பாவுஞ் சண்டை போட்டுக் கொண்டிருந்தார்கள் சித்தப்பா, கத்தினூர்.

'பத்து வருஷத்துக்கு இந்தப் பக்கம் எட்டிப்பாராம இருந்திட்டுப் பிறகு இப்ப ஏன் வந்தாய்...?''

அப்பாவும் பதிலுக்கு கத்திஞர்.

''டேய், பாலா 'வாவா' என்டு கூப்பிட்டுத்தான் வந்தனுன். அம்மா — அப்பாவைப் பார்க்க வந்தனுன், உன்னையும் உன்ர தங்கையையுமில்லை ..?''

''பத்து வருஷமா இல்லாத அம்மா அப்பா, இப்ப எப்பிடி வந்தவை? சொத்துப் பிறிக்கப் போறியோ?''

''டேய், மடையா...''— அப்பாவுக்கு கோபத்தில் என்ன செல்வதென்று புரியவில்லையோ?

''சின்னண்ணே, நீ இஞ்சை வா'' 'பெரியமாமி' வந்து சித்தப்பாவைக் கூட்டிக் கொண்டு போனூர். பாலா மாமா, தங்களுடைய வீட்டுக்கும்—சின்னமாமி வீட்டுக்கும் — போய்விட்டாரோ? அவரிருந்தால் இவர்கள் சண்டை போட்டிருக்க மாட்டார்கள். அம்மாவையுங் காணவில்லை, எனக்குப் பயமாயிருந்தது. தேடிப் போனேன்.

## 3

காலையிற்கண்ட பையன்கள் 'அண்ணைமார், மச்சான் மார்' என்று மாமாசொன்னது இவர்களைத் தானே எதிரே வந்தார்கள். சித்தப்பாவின் மூத்த மகன், என்னிலும் சின்னவன், முன்னே வந்தான்.

'டேய் சில்வா... இங்கே வாடா"

மற்றவன், அவனை இடித்துக் கொண்டு முன்னால் வந்தான்,

''சில்வா இல்லை? பெர்ரரா, டேய், பெரரா இங்கே வாடா...'

இரண்டு பேரும், என்னைத் தான் கூப்பிட்டார்கள்.

''என் பெயர் இளங்கோஎன்றேன்.

''இளங்கோ... கிழங்கோ! என்ன பேரடா இது?'' எல்லோருஞ் சிரித்தார்கள். எனக்கு அழுகை வந்தது; அழுதேன். ''இளங்கோ!... கிழங்கோ?...'' என்று எல்லோருங் கூவினார்கள்.

பெரியமாமி, அங்கே வந்தாள்.

''ஏனடா கத்துறீங்கள் ?... அவனுக்குக் கிழங்கெண்டா என்னண்டு தெரியுமோ ... அரைத் தமிழன்! ஒடுங்கடா அங்கே..."

மாமி, போய் விட்டாள்.

அழுது கொண்டே அம்மாவிடம் போய், நடந்ததைச் சொன்னேன். அம்மா, என் கண்களைத் துடைத்து விட்டுத் தன் கண்களையுந் துடைத்துக் கொண்டாள்.

அம்மா எழுந்து, என்னையுங் கூட்டிக்கொண்டு, அடுக்களைக்குப் போனாள். பாட்டி அங்கில்லை. பெரிய மாமியும், சின்னம்மாவுந் தான் இருந்தார்கள்.

''ஏதாவது வேலை இருக்கா? நானும் செய்யிறேன்?'' அம்மா கேட்டாள்.

''ஒண்டுமில்லை... வெளியிலே இருங்களேன் ..'' சின்னம்மா, சிடுசிடுத்தாள். வெளியே வந்து விட்டோம்.

## 4

இரவு, சாப்பிட்டபின் அப்பா என்னையுங் கூட அழைத்துக் கொண்டு, கை கழுவக் கோடிப் பக்கம் போனார். பின் பக்க அறைக்குள், பெரிய மாமியும், சின்னம்மாவும் பேசிக் கொண்டிருந்தார்கள்.

''அவள்சரியான 'கெறுக்கு'ப் பிடிச்சவள் எண்டு நீங்க சொன்னது சரிதான் மச்சாள்...''

''பின்னே ? சரியான சிங்களத்தி! அண்ணையும் 'அள்ளிக் கொண்டு' வந்தார் எங்கயிருந்தோ?......'' அப்பா, உள்ளே பாய்ந்தார்.

''எடி தங்கச்சீ...... என்ன பேசுகிறாய்? உனக்கென்ன பைத்தியமே...?''

மாமி, திடுக்கிட்டுத் திரும்பினாள்.

''பின்னையென்ன...... நான் சொன்னதிலை, என்ன பிழை ? அவள் சிங்களத்திதானே ?"

சண்டை பலத்து விட்டது. சித்தப்பா, பாட்டா, பாட்டி, எல்லோரும் வந்து கூடினார்கள். அம்மா மெதுவாக என்னைத் தூக்கிச் சென்று படுக்க வைத்தாள். தூக்கம் வரவில்லை.

இரு பெண்களை ஒரு நண்பன் வீதியில் சந்தித்தான்.

''இவ உங்கள் தங்கையா?''

''இல்லை.. என் மகள், ஏன் நான் அவ்வளவு இளமையாக இருக்கிறேனு.

"இல்லை உங்கள் மகள் அவ்வளவு வயதானவளாகத் தெரிகிறது."

''.................."

'அம்மா, சிங்களத்தியா? அம்மாவா...? இது என்ன இது? சிங்களத்தியென்ருல், எங்கள் வீட்டுக்குப் பக்கத்திலிருக்கும் பீரிஸ் மாமாவின் பெண்சாதியல்லவோ? அங்கே, 'மார்க்கற்' றுக்குள்ளே கடைவைத்திருக்கும் அலிஸ் அல்லவோ?...அம்மா சிங்களத்தியெண்டா கவுணும் போடவில்லை? 'சர'முங்கட்டவில்லையே? பாட்டியைப்போல, பெரியமாமியைப்போல; சின்னம்மாவைப் போல, சேலை தானே கட்டியிருக்கிரு; நெத்தியிலை குங்குமப் பொட்டிருக்கு?... அம்மா தமிழல்லவோ பேசுரு? அதிலே என்ன பிழை?......'

'சரி, சிங்களத்தி யெண்டு தான் இருக்கட்டும். அதிலே குறைவு என்ன? ஏன் ஏசினம் எல்லாரும்? சிங்களவரெண்டாலும் இரண்டு கால், இரண்டு கை தானே? கொழும்பிலை, 'தமிழரெண்டா, சிங்களவர் பகிடி பண்ணினம்; இங்கே 'சிங்கள' வரெண்டா, ஏசினம்! நல்ல முசுப்பாத்திதான்......'

எனக்கு, அது புதுமையாக விருந்தது—அம்மா 'சிங்களத்தி'! அதற்கென்ன? ஆனல், நான் என்ன இனம்? தமிழனு, சிங்களவனு?

அப்பா உள்ளே வந்தார்.

''நாளை விடிய வெளிக்கிட வேண்டியது தான். லீலா..."

'லீலா!' – இது சிங்களப் பெயரோ? அப்போ, சிவசுப்பிரமணியம்?...பேரிலை என்ன...?.

நான் தூங்கிப் போனேன்.

## 5

**அ**டுத்த நாட் காலை நான் எழும்ப முன்னமே பாலாமாமா வந்திருந்தார். அதர் பெண்சாதி சின்னமாமியும் வந்திருந்தா.

'அண்ணை... அண்ணை... மச்சாள்... மச்சாள்..' எண்டு அம்மாவையும் அப்பாவையும் சுற்றிச்சுற்றி வந்தா. என்னைக் கொஞ்சியதுதான் அவருடைய வேலை அன்று முழுவதும்.

''எல்லாம் வீணய்ப்போச்சே அண்ணை" என்று அழுதா..

அப்பா சொன்னூர்... ''பாலா .. இப்பநான்உங்கவீட்ட வாறன். பின்னேர மெயிலுக்குப் புறப்பட்டாச் சரி .."

மாமா மெல்லத் தலையசைத் தார்.

'டேய்... பாலா... நீசொன்னதுக்காகவும் அப்பா அம்மாவைப் பார்க்கிறதுக்காகவுந்தான் வந்தேன். ஆனு அவையள் சரியா முகங்கூடக் கொடுத்துக் கதைக்க இல்லையே ....அப்பா .. அம்மாவோடைதான் ஆறுதலாகக் கொஞ்சம் கதைக்க ஆசைப்பட்டன். சரிவராது போலிருக்கு..."

—அப்பாவின் தொண்டை கம்மியது. கண்களிலே நீர் வழிந் தோடியது. பாலா மாமா, மாமி, அம்மா, நான் எல்லோருமே அழுது விடுவோம் போலிருந்தது.

அப்பா விம்மினர்.

பாவம் அப்பா.!

‘மகாகவி’யின்



# கலட்டி

வாகை

திங்கள் அன்றைக் குமாலே
திட்டத்தின் படி ஓர்கூட்டம்
துங்கத்தார் தலைமைமீது
கழகத்தார் துவக்கினர்கள்.
“சங்கமாய் ஒன்றுபட்டுச்,
சாமான்கள் வாங்கிப்போட்டுத்,
தங்கள் பால் தாமேவிற்றல்
தகும்!” என்ற கொள்கை கூறி—

நிலையம் ஒன்றமைப்பதென்று
நிச்சயித்திடுங்கால், “இங்கே
புலையரும்சேரலாமா ?” –
கடை முதலாளி கேட்டார்!
“இலை என் பான் இருக்கின்ருனு ?”
என அங்கோர் இளைஞன் செப்பத்,
தலைமையர் இவன் சார்பாகச்
சாற்றிடப், பலர் உரப்ப—

நிலைமையோ களை கட்டிற்று!
நீள் உரை செயலாய்மூண்டு,
தலைமயிர் பிடிக்கும் கட்டம்
தனை அடைந்தது “செல்லையன்
சில சிறுமியர் தம் கற்பைச்
சீண்டினுன்!” என்று சொல்லிப்
பல அடி உதைகள் பட்டுப்
பஞ்சலிங்கருமே வீழ்ந்தார்!—

இளையவர் எவரும் ஒன்று திரண்டதால்,
பழைய அக்கீழ்மையின் பலங்கள்
அழிந்தும் சிதைந்தும் அற்ருெழிந்தனவே!

## ஏற்பாடு

உயனைக் கலட்டியிலே ஒன்பது நாட்களாக
ஒவ்வொன்ருகப் பலதும் தேடினர்.
மயனைப் பழிக்க மணப் பந்தல் எடுப்பதற்கே
“மரந்தடி கிடுகு!” என ஓடினர்.
உயரக் கமுகுகள் வே ரோடு தறித்து வண்டி
ஏற்றி இழுத்து வந்து நாட்டினர்.
சயனித் தலை மறந்தே சட்டுப்புட் டென்று பல
சாதித்தோர் மண்டபத்தைக் காட்டினர்.

பச்சைத் தழை குழைகள் பாக்கிள நீர்க்கு லைகள்
பந்தல் முழுவதுமே தேக்கினர்.
“அச்சா!” எனினும் படியாய் ஐநூறு வாழை நட்டார்;
ஆருயிரம் தோரணம ஆக்கினர்
‘கொச்சி வெளி’க்கிரண்டு வண்டிகள் கொண்டு சென்று
கொண்டு வந் தே தாளங்காய் தூ க்கினர்
“மெச்சத் தகுந்தது!” என்று மெச்சிக் கிழவர்களும்
மேலும் கீழும் நின்று நோக்கினர்.

“கச்சேரி செய்வதற்கு யாரை அழைப்பது?” என்று
காரசா ரத்தொடு வி வாதித்தார்.
“பிச்சையப் பாகுழுவைக் கூப்பிடல் வேண்டும்!” என்று
பிறகொரு மாதிரித் தீர் மானித்தார்.
பச்சடி பத்து வகை பண்ணப் படுவதற்கே
பற்பல திட்டம் அவர் தீட்டினர்.
உச்சச் சுவை அமைய உண்பவர் வாய்கமழ
ஓராயிரம் திருத்தம் கூட்டினர்.

## அறுவடை

கழகத்திளைஞர் முன்னின்று நடத்தக்
கண்மணி என்ற அக்கரும்பைச்
செல்லையன் சடங்கு செய்தனன் இனிதே.

வாயிலில் நின்று, வருகை புரிந்தோர்
வரவினை ஏற்க இருபது பேர்;
ஆயிரம் அன்பர் குந்திய பந்தல்;
அங்கிசை வெள்ளம் பொங்கியது.
தீயை விளைத்தோர் ஐயர் இருந்து
சிந்துகிருர் நெய், திவ்வியமாய்;
கோயில் விழாவைப் போல எடுக்கும்
கொள்கை விளக்கும் நல்விழவு.

சப்பர காரச் சரவணை கட்டித்
தகதக என்னும் மணவறையில்,
எப்பொழுதும் போல் இனிய முகத்தோடு
எய்தி இருந்தான் செல்லையன்.
கப்பல் கொணர்ந்து கொட்டும் நிதிக்கும்,
கவிதை மொழிக்கும் ஒப்புடையாள்,
எப்புறமும் காணுது முகில் மேல்
ஏறி மிதந்தாள் கண்மணியாள்;

மேள முழக்கம் மிஞ்ச, ''அனைத்தும்
மேவி உயர்க!'' என்றதவை.
''வாழ உனக்கென் ஆவி!'' எனத்தன்
வஞ்சி கழுத்தில் அஞ்சல் இலாக்
காளை எழுந்து மங்கல நாணைக்
கட்ட, அவள் தன் கண்ணிறைவாள்.
ஈழம் முழுத்துக்கும் கண நேரம்
மாவை தலை நாடு ஆயிற்று!

### முத்தாய்ப்பு

ஆருமே உயர்வானவர் மக்கள்; எல்
லாருமே உறவானவர் ஆவார்!
மேலவர் கீழவர் என்று சொல்லும்
வேடிக்கைப் பேச்சுக்கள் நின்று-புதுக்
காலை விடிந்த தங் கொன்று பல
காரணங்கள் நூறு கறிகள் எடுத்தனர்.
"ஏலாதே லாது!" எனச் சோறு படைத்தனர்.
ஏழெட்டுச் சாதிக் குழம்பு 'துடைத்தனர்.'
வாழை திராட்சைப் பழங்கள் படைத்தனர்.
வந்தவர் ஒன்ருகக் குந்திப் புசித்தனர்—

ஆருமே உயர்வானவர் மக்கள்; எல்-
லாருமே உறவானவர் ஆவார்!

சந்திக் கடைமுதலாளி —பட்டுச்
சால்வை அணிந்த காராளி- கூட
வந்துற்றனர்கள். "நீ வாழி!''—என
வாழ்த்தும் மொழிந்து, வயிறு குளிர்ந்தனர்!
பந்திக் கெந் நாளிலும் பிந்தாதமைகிற
பஞ்சலிங்கர், "திறம் பாயசம்!" என்றபின்,
''சிந்திக் கத்தகது செய்தனை நீ,'' என்ருேர்
சின்னப் பிரசங்கம் பண்ணத் தொடங்கிஞர்!—

ஆருமே உயர் வானவர் மக்கள்; எல்-
லாருமே உறவானவர் ஆவார்!.

''எல்லாருமே ஒரு சாதி—எனில்
என்னை மதிப்பதும் நீதி!" -என்று
செல்லையன் காதில் ஓதி— 'இன்று
செய்துவந் தேன் ஓர் அந்தாதி; அவைக்கிதைச்
சொல்ல அமைதி வேண்டும் தம்பீ, இந்தச்
சுப்பையாப் பாவலனுக்கு!'' என்று கோரவும்,
"நில்லும்!'' என்றார்பலர்; 'செல்லும்!'' என்றார்சிலர்;
''கொல்லும்!'' என்றே பிறர் கூறிச் சிரித்தனர்—

எல்லாருமே ஒரு சாதி—நாம்
எல்லாருமே ஒரு சாதி!

ஆருமே உயர் வானவர் மக்கள்; எல்—
லாருமே உறவானவர் ஆவார்!

முடிவுரை

கற்பனை கொண்டு செய்த
கதை இது. இதிலே நூறு
சொற் பிழை இருத்தல் கூடும்.
சுவை பல குறைதல் கூடும்.
''அற்புதம்!'' என்று சொல்லும்
அளவிலா திருக்கு மேனும்,
நற் பயன் விளைத்தல் கூடும்
என்று நான் நம்பித் தந்தேன்.

ஊரிலே உள்ளார் யாரும்
உத்தமர்! எனினும் பாட்டின்
சீரிய உருவம் நோக்கிச்
சிலபேரைக் குறைத்துச் சொன்னேன்.
ஆரையும் அவமதிக்கும்
ஆசையோ இல்லை, நல்லோர்,
நேரியர், நிமிர்ந்தோர் நீங்கள்;
நிச்சயம் மன்னிப்பீர்கள்!

செல்லையன் என்ற இந்தச்
சிறுகவிக் குரியோன் நம்மூர்
எல்லையுட் பிறந்து வாழும்
எவனும் போல் ஒருவன் ஆவான்-
புல்லல்ல! வளரவிட்டால்
புது நெல்லாய்ப் பொலிவான்—அல்ல,
நெல்லல்ல-நெல்லினுள்ளே
நிறைகின்ற உயிரே என்க.

முற்றும்

# எதிரொலி

கலைவாணர் நாடக மன்றம்

புதிய கருத்துக்கள், புதிய எண்ணங்கள் ஆக்க பூர்வமாகஇடம் பெற வேண்டும். இதனால் ஈழத்துக் கலாரசனை உயர்நிலை எய்த வேண்டும்.—என்ற எண்ணங் கொண்ட நடிகர்களினதும். கதாசிரியனதும் மனக் குரலாக எழுந்த ஒலியே—

## எதிரொலி

**கதை :** தன் மைந்தனுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்க வந்த 'ரீயூசன் மாஸ்'டரிடம் தன் கற்பை இழக்கிறாள்—விதவை வசந்தி. காலம் ஓடுகிறது...

வசந்தியின் மகன் படித்து இன்ஸ்பெக்டர் வேலைக்குமனுப் போட்டு, அதுகிடைத்து விடும் சந்தர்ப்பத்தில் அவன் தாயின் ஒழுக்கக்கேடு வெளியாகிறது. இதனால் அவனுக்கு வேலை கிடைக்காமல் போகிறது. தாயின் நடத்தைப் பிசகின்

எதிரொலி—

மகனின் வாழ்வைப் பலிவாங்கி விடுகிறது.

கதையில் கனம் உண்டு. ஆனால் நாடக மேடைக்கு ஏற்ற சம்பவங்கள் குறைவு. இதனால் நாடகத்தின் 'ரெம்போ மிகக் குறைவாக உள்ளது.

**வசனங்கள் :** இந்த நாடகத்தின் மூலம் சிறந்த வசனகர்த்தா ஈழத்து நாடக உலகிற்கு கிடைத்துளது. கதையின் சில குறைபாடுகளை கருத்தாழமிக்க வசனங்கள் ஈடுசெய்கின்றன. வசன கர்த்தா மு கனகராசன் தனது பொறுப்பினை திறமையாகச் செய்துள்ளார்.

**நடிப்பு :** ரீயூசன் மாஸ்டராக நடித்த எஸ். டி. அரசுவின் நடிப்பு பண்பட்டதாகவும், நாடக மேடை என்றால் உடலை அலட்டிக் கொள்வதுதான் என்ற தவறான எண்ணத்திற்கு சாட்டையாகவும் அமைந்திருந்தது.

அவரின் தந்தையாக நடித்த லோகநாதன் நடிப்பும் உண்மையில் சிறப்பானதாக விளங்கியது. நாடகத்தில் கல கலப்பை ஊட்டி விறுவிறுப்பை ஏற்படுத்தியதில் இவரின் பணி மிகப் பெரியது. கொடுத்த பாகத்தை குறையின்றிச் செய்தார்.

கதையை நகர்த்திச் செல்பவராக வந்த பற்குணம்-தனது நகைச்சுவை நடிப்பால் ரசிகர்களைக் கவர்ந்தார்.

கதாநாயகி—சாந்தியாக நடித்த சரஸ்வதியின் நடிப்பும் ஓரளவுக்கு நன்றாக அமைந்திருந்தது. அவரிடம் இன்னும்


எவ்வளவோ வளர்ச்சியை ரசிகர்கள் நிச்சயம் எதிர்பார்க்கிறார்கள்.

ஒலி அமைப்பு : இரவு போய், காலை மலரும் காட்சியில் ஒளி அமைப்பு நன்றாக இருந்தது. ஆனால் கதாநாயகன் கதாநாயகி சந்திக்கும் கட்டங்களில் ஏனோ முகங்கள் இருட்டடிக்கப்படுகின்றன.

ஒலி அமைப்பு : ஆரம்பக்கட்டங்கள்—ஏதோ மௌன நாடகமாக விளங்கின. ஒன்றுமே புரியவில்லை.

மொத்தத்தில்—

'எதிரொலி'—கனமான நல்ல நாடகமாக விளங்கிய போதும் இன்னும் பல ஒத்திகைகளையும், உணர்ச்சிக்கட்டங்களில் தேவையற்ற வாதங்கள் நடத்தப்படுவதையும் குறைத்து, விறுவிறுப்பை ஏற்படுத்தினால்—பட்டைதீட்டப்பட்ட வைரமாக விளங்கும்.



## ஒரு வானொலியின் நிகழ்ச்சி நிரல்

| | | | |
|---|---|---|---|
| காலை:- | 6. 45 — 7. 00 | மணி | — சித்திரகானம் |
| | 7. 00 — 7. 45 | ,, | — திரை இசை |
| | 7. 45 — 8. 15 | ,, | — நேயர் விருப்பம் |
| | 8. 15 — 9. 00 | ,, | — நான் விரும்பியவை |
| | 9. 00 | | — காலை ஒலிபரப்பு முடிவு |
| நண்பகல்:- | 12. 00 — 12. 30 | | — மாதர் கேட்டவை |
| | 12. 30 — 1. 30 | | — ஒலிச்சித்திரம் |
| | 1. 30 | | — ஒலிபரப்பு முடிவு |
| பிற்பகல்:- | 5. 00 — 5. 30 | | — திரை உலகு |
| | 5. 30 — 6. 15 | | — அன்றும் இன்றும் |
| | 6. 15 — 7. 00 | | — திரும்பிப்பார் |
| | 7. 00 — 7. 30 | | — ஒரு படப்பாட்டு |
| | 7. 30 — 9. 00 | | — நேயர் விருப்பம் |
| | 9. 00 — 10. 30 | | — மெல்லிசை |
| | 10. 30 | | — ஒலிபரப்பு முடிவு |

குறிப்பு : சினிமாப் படப்பாட்டுக்களை வைத்து வியாபாரம் நடாத்துகின்ற ஒரு வானொலியின் நிகழ்ச்சி நிரல் இது. இந் நிகழ்ச்சி நிரல் தமிழறிஞர்களால் வகுக்கப்பட்டது.

தகவல்:—இராஜகுலேந்திரன்.

# முப்பானூல் மொழியும் உவமைகள்

## அறத்துப்பால்

செல்வி. இரா. சரசுவதி

1. ''குழந்தைகளின் மழலை மொழிகளைக் கேட்காதவர்களுக்குக் குழலின் இசை, யாழின் இசை இன்பம் நல்குவதைப் போன்று இருக்கும்.''
2. ''அகத்தில் அன்பு இல்லாதவர்களின் வாழ்க்கை செழிப்பற்ற பாலை நிலத்தில் பட்டமரம் தழைத்தாற் போன்றது''
3. ''முகம் மலர்ச்சியின்றி விருந்தினர்களை வரவேற்றால் அனிச்சம் பூவைப் போல் விருந்தினர்கள் வாடி நிற்பர்.''
4. ''இன் சொற்களை இயம்பாது, வன்சொற்களை வழங்குவது கனியை விட்டுக் காயை உண்பதைப் போன்றது"
5. 'நடுநிலைமை நின்று செயல்புரியும் சான்றோர்கள், சமமாகப் பொருளைச் சீர்தூக்கும் துலாக்கோல் போன்றவர்."
6. ''வாழ்க்கைக்கு மேன்மையளிக்கும் ஒழுக்கத்தை இழந்தவர்கள், போன உயிர் திரும்பி வராததைப் போன்றவர்கள்''
7. ''பிறர் தம்மை இகழ்ந்தும் பொறுமைப்பண்பைக் கைக்கொள்வோர், தன்னை வெட்டுவோரையும் தாங்குகின்ற நிலநங்கைக்கு ஒப்பாவர்.''
8. "பயன் நீங்கிய மொழிகளைப் பன்முறை மொழிபவன் மக்களுள் பதர் போன்றவன்''
9. ''ஒருவனுடைய நிழல் அவனைப் பின் தொடர்வதைப் போல, தீயசெயல்கள் செய்பவர்களை பின் தொடர்ந்து தீது வரும்.''
10. ''உதவி செய்து வாழ வேண்டும் என்று விரும்புகின்ற பேரறிவாளியிடம் சேருகின்ற செல்வம் பயன்தரும் பழமரத்தைப் போன்றது."
11. ''தவம் செய்கின்றவரைத் துன்பம் வருத்தினாலும், புடமிட்டுச் சுடச்சுட ஒளி வீசும் பொன்னைப் போல் மெய்யுணர்வுமிகும்''
12. ''மனத்தை அடக்கும் வல்லமையற்றவனின் தவக்கோலம் பசு புலித்தோலைப் போர்த்திக்கொண்டு பயிரை மேய்ந்தாற் போன்றது."
13. ''செல்வமானது கூத்தாடுமிடத்தில் மக்கள் கூடுவதைப்போல் வந்து சேரும். பின் அஃது நீங்கிப் போதல், கூத்து முடிந்து மக்கள் கலைவதைப் போன்றதொக்கும்."
14. ''உடம்பிற்கும் உயிர்க்கும் உள்ள தொடர்பு, பறவை கூடு விட்டுப் பறந்தாற் போன்றது."

ஊதுபத்தியின் நறுமணமும், சாம்பிராணிப் புகையின், மனதை மயக்கும் சுகந்தமும் தம்முள் ஓர் ஒற்றுமையை ஏற்படுத்திக்கொண்டு வீடெல்லாம் நிறைந்து பரவி நின்றன.

இன்று பவானியின் சிரார்த்த தினம்!

மனதையே எங்கோ அள்ளிச் செல்வது போன்ற நிலை! கையில் மாலையுடன், நடு அறை வாசலில் மாட்டியிருந்த பவானியின் படத்தையே பார்த்துக் கொண்டு நின்றாள் சரசு!

கையில் வைத்திருந்த மாலையை அவளின் கண்கள் நோக்கின. நல்ல வெண்மையான ஜாதி மல்லிகைப் பூவைக் கொண்டு தொடுத்த மாலை வலது கையில் இருந்த மாலை இடது கையுக்கும், பின் வலது கையுக்குமாக மாறியது.

ஏன் மாலை பலமாகக் கனக்கின்றதா?

மாலை கனத்ததோ, இல்லை சரசுவின் இதயம்தான் கனத்ததோ தெரியாது!

கண்கள் இரண்டும் கனிவையே தம்முள் கொண்டிருக்க பூவும் பொட்டுமாக, மங்கல மான தோற்றத்தில் காட்சி அளித்த பவானியின் படம் அந்த



து. வைத்திலிங்கம்

# தவறுகள் வாழ்கின்றன!

இடத்துக்கே ஒரு தனிச் சோபையைக் கொடுத்தது. படத்தையே சிறிது உற்று நோக்கிய சரசு, மாலையை இரண்டு கைகளிலும் ஏந்தி அப்படத்தின் மேல் சாத்தினாள்.

''மாலை பவானிக்கு எவ்வளவு பொருத்தமாய் இருக்கிறது; அதுவும் மல்லிகை என்றாலே அவளுக்கு உயிராச்சே!"—சரசு தனக்குள் சொல்லிக் கொண்டாள்.

ஏன் வீட்டின் முன் வாசலில் மதமதவென்று வளர்ந்திருக்கும் இரண்டு நந்தியாவட்டை மரங்களும், பவானி தன் கையால் நட்டு தண்ணீர் பாய்ச்சி வளர்த்தவை தானே!

ஒற்றை, அடுக்கு என்று, இனத்துக்கு ஒரு மரம் என்று நட்டவளாயிற்றே!

முற்றத்தில்போட்டி போட்டு வளரும் மல்லிகையும் முல்லையும் பவானியின் கை வண்ணம் தானே!

காலையில் குளித்து விட்டு அந்த வெண் மலர்களைப் பறித்து கூடையில் எடுத்து வந்து, அம்மன் படத்துக்கு மாலை கட்டும் பவானியின் முகத்தைப் பார்க்க வேண்டும்!

மலர்களைப் போலவே மலர்ந்த அவளின் முகமும், அம் முகத்தின் அழகும், அந்த அழகுக்கு அழகூட்டும் பால் வெண்மைப் பற்களையும், சலியாது பார்த்து வியந்திருக்கின்றாளே சரசு!

''சரசு, இந்த நந்தியாவட்டைப் பூவைப் பார்! எவ்வளவு வெண்மை! எவ்வளவு மென்மை! பார்த்தாயா?" கண்களில் வியப்புத் தோன்ற பவானி கூறுவாள்.

ஆனால் சரசுவின் பதிலை அவள் எதிர்பார்க்க மாட்டாள். மலர்களையே உற்றுப்பார்ப்பாள்.

அவளுக்குத்தான் அந்த வெண்மையில் எவ்வளவு ஈடுபாடு!

வெள்ளையான உள்ளம் கொண்டிருந்தபடியால்தான் அந்தத் தலை போகிற நேரத்திலும் தன் முகத்தில் எவ்வித உணர்ச்சியையும் காட்டாமல் விரக்தி கலந்த புன்னகையுடன் நின்றாளோ?

ஒருத்தி இன்னொருத்தியை வினவுகிறாள்:

''நீ எப்படி இவ்வளவு நிலைக்கு உயர்ந்தாய்?''

''நான் ஒருவரைக் கலியாணம் செய்து கொண்டேன். அவரிடம் பணம் இருந்தது. என்னிடம் அனுபவம் இருந்தது''

''இப்ப......''

''என்னிடம் பணம் இருக்கிறது. அவரிடம் அனுபவம் இருக்கிறது.''



பொறுமையின் இருப்பிடம் தான் பவானி! எந்தப் பெண்ணுக்குமே இதயம் உடையும் நிகழ்ச்சிதான் அது! சீறிப்பாயும் புலியாக மாறுவாள் பவானி என்று சரசு எதிர்பார்த்தற்கு மாருக, ஆடி அடங்கும் பாம்பு போலல்லவா நின்ருள்! குமுறிக் கொந்தளிக்கும் உணர்ச்சிக் குவியல்களை தன்னுள் அடக்கிக் கொண்டு எவ்விதம்தான் மரமாய் நின்ருளோ – அது அவளுக்கே வெளிச்சம்!

"உண்மையில் பவானிக்கு உள்ளம் மலரைப்போல் வெள்ளையானதுதான்!"— சரசு தனக்குள் முணுமுணுத்தாள்.

மாலையைச் சாத்திவிட்டு, தன் இரு கைகளால் படத்தைத் தொட்டு தன் கண்களில் ஒற்றிக் கொண்டாள்.

" க்கா என்னை மன்னித்துவிடு! உன் மன்னிப்பில்தான் என் வாழ்வு தங்கியிருக்கிறது!"

அவளின் உதடுகள் தம்முள் பேசிக் கொண்டன. கண்களிலிருந்து கண்ணீர் தாரையாக வடிந்தது

காலையில் தோய்ந்திருந்தபடியால் கேசக்கற்றைகள் காற்றுடன் கலந்து முன் நெற்றியில் வந்து விழுந்தன. சரசு தன் கைவிரல்களால் கேசத்தை ஒதுக்கிவிட்டுக் கொண்டாள். அப்பொழுது முன் பக்கத்துத் தலையில் இருந்த ஒரு சிறு பள்ளமான பகுதியை அவளது விரல்களில் ஒன்று ஸ்பரிசித்த உணர்ச்சியை அடைந்தாள்.

அந்தப் பள்ளம்......

அது ஆறிய ஒரு காயத்தின் அழியாத வடுதான். தலைக்கேசம் என்னவோ அந்த இடத்தை – அந்த அழியாத வடுவை மறைக்கத்தான் செய்கின்றது. ஆனல் மற்றவர்களின பார்வைக்கு மறைந்தாலும் சரசுவுக்கு, இடைக்கிடை தான் இருப்பதை நினைவு படுத்திக் கொண்டேயிருக்கும்!

சரசுவின் மனதில் ஒரு மின்னல் கீற்று தோன்றி மறைந்தது ......

"அக்கா, அந்த ஜடைபில்லையைக் கழட்டி எனக்குத் தாவன்!" – சரசு கெஞ்சினுள்.

அம்மன் கோவில் திருவிழாவுக்குப் போவதற்காக, பவானியையும், சரசுவையும் அவர்களது தாய் அலங்காரம் செய்து விட்டிருந்தாள். பவானியின் அலையென வாரி விடப்பட்ட கூந்தலில் அந்த வெள்ளி ஜடைபில்லை பளிச்சென மின்னியது. அது அவளின் தந்தை மார்கழித் திருவாதிரை உற்சவத்துக்காக, இந்தியாவுக்கு ஸ்தல யாத்திரை சென்றபோது வாங்கிக்கொண்டு வந்தது. சரசுவுக்கு ஒரு தலைக் குஞ்சம் வேண்டியிருந்தார்..

"உனக்கு வேண்டாம் சரசு! அவள்தான் பெரியவள் போடட்டும்!" — இது அவர்களது தாய்.

'ஏன் எனக்குப் மாட்டிவிட்டால் என்ன!"– சரசு எப்பவுமே பிடிவாதக்காரி.

"எனக்கு வேண்டாம் அம்மா! சரசுவுக்கே மாட்டி விடு!" –பவானி அதைக் கழட்ட முயன்ருள்.

"நீ சும்மாயிரு பவானி! சரசு, உனக்கு வேண்டாமென்ருல் சும்மாயிருக்க மாட்டியே?" – தாய் கோபத்துடன் கூறிஞள்.

ஜடைபில்லேயை தனக்கு மாட்டவில்லே என்று சரசுவின் சிறு பிள்ளேத்தன ஆசை, பிடிவாதம் இரண்டும் சேர்ந்து அவள் ஆத்திரப்படுகிருள்.

பவானியின் தலேயில்கைவைத்து அதைக் கழட்ட முயற்சிக்கின்ருள்; எங்கே தன் தலேப் பின்னல் குலேந்துவிடுமோ என்றெண்ணி, பவானி அங்கும் இங்கும் நகர்கிருள்; இருந்தாற்போல், பவானியின் தலேப் பின்னலே சரசு பிடித்து இழுக்க பவானி ஓட, இருவருமே நிலே குப்புற விழுகின்றனர். வாசற்படி முனே சரசுவின் முன் தலேயைப் பலமாகத் தாக்கிவிட்டது. அடிபட்ட இடத்திலிருந்து இரத்தம் குபுகுபு என்று பாய்ந்தது. சிலேயென திக்கித்து நின்ருள் பவானி!

அதன் பின் அந்த வெள்ளி ஜடை பில்லேயை அவள் தன் தலேயில்சூடிக்கொள்ளவேஇல்லே. அது இன்றும் சரசுவிடம் தான் இருக்கிறது.

பழைய நினேவுகள் மனதை வாட்டின கண்ணீர் தடையின்றி மீண்டும் பெருகின. கண்ணீர் திரையின் மங்கலில் .....

"அக்கா உன் பிரிவை நான் எப்படித் தாங்கப் போகின்றேனே? தெரியாது!"-நான் பவானியைக் கட்டிக்கொண்டு அழுதேன்.

"சரசு, அழாதே! எனக்கு மட்டும் உன்னேப் பிரிந்து போவதில் ஆசையா என்ன?......

"உன் காதலன் எப்படி உள்ளார்"

"எவரைக் கேட்கிருய்?"

என்ருலும் நான்......... போகத்தானே வேண்டும்!" சிவந்த அவளது முகம், இதைக் கூறும்போது மேலும் குங்கும வர்ணம் அடைந்தது. கண்கள் பூமியுடன் உறவாடின. அவள்தான் எவ்வளவு அழகுடன் மிளிர்ந்தாள். பவானியின் சங்குக் கழுத்தில் அப்புதுத்தாலி ஏறி இன்றுடன் ஒரு வாரமாகிவிட்டது. சரசரக்கும் புதுப் பட்டுப் புடவை கணுக்காலேமறைக்க புதுமணப் பெண்ணுக்குரிய அழகுடன் அவள் நின்ருள். கல்யாணமானவுடன் இப் பெண்களுக்கு இந்தத் தனி அழகு எப்படித்தான் வந்து விடுகிறதோ தெரியாது.

'அக்கா, நீ அத்தானின் அன்பில் மயங்கி என்னே மறந்து விடமாட்டியே?'' – நான் விம்மினேன்.

"அடி அசடே! அப்படியென்ன என் மனம் கல்லா?" சிரிப்புடன் கூறிஞலும் அவள் உள்ளத்தை உணர்த்தும் வகையில் அவளின் கன்னத்தில் இரு முத்துக்கள் உருண்டன.

"சரசு, அக்கா புறப்படும் போது இதென்ன அழுகை?" அம்மா கடிந்து கொண்டாள். அவள் எப்பவுமே இப்படித்தான். சும்மா இல்லாததற்கெல்லாம் எரிந்து விழுவாள். இருந்தாலும் அவள் அக்கா, தங்கை என்றில்லாமல் தனிப்பிறவியாய் வளர்ந்தவள்தானே!

"பாக்கியம் நீ ஏன் அவளே வெருட்டுருய்?'' அப்பா கூறிஞர்.

''நான் ஒன்றும் வெருட்டவில்லை. அவள் புறப்படப் போகிருள். இவள் சரசுவைப் பாருங்கோ...!'' அம்மாவுக்குக் கோபம் அவளின் குரலில் தெரிந்தது.

''பாக்கியம், உன்னையும் என்னையும் போல எலியும் பூனையுமாய் அதுகள் இருந்தவையே? ஒட்டுறவாய்இருந்தால் இப்பிடித்தான் இருக்கும்! நீ உன்னுடைய அலுவலைப்பாரன்! அக்கா, தங்கை பட்ட பாடு!'' சிரிப்புடன் கேலியாகக் கூறினர் அவர்.

'சரசு, பவானி இன்னும் இரண்டு மாதங்களில் வருவாள் தானே!" என்னைச் சமாதானம் செய்யும் வகையில் கூறினர் போலும்!

அக்கா என்னதான் சிரித்துக் கதைத்தாலும், வண்டி ஏறும் போது என்னைக் கட்டிக்கொண்டு அழுதே விட்டாள்.

'அப்படியானல் பவானி இங்கேயே இருக்கட்டும். நான் மட்டும் தனியே போகின்றேன்! அக்கா தங்கையைப் பிரித்த பாவம்எனக்கெதற்கு!''அத்தான் பரிகாசமாய்க் கூறினர்.

நான் நாணம் மேலிட அம்மாவின் முதுகுக்குப் பின் இடம் தேடிக் கொண்டேன்.

''நல்ல குறும்புக்காரர்'' நான் எனக்குள் சொல்லிக் கொண்டேன்.

அக்காவின் அழகுக்கும், அத்தானின் அழகுக்கும்தான் எத்தனை பொருத்தம்! நன்ருகத்தான் ஜோடி சேர்த்திருக்கின்றனர்.

வண்டி சென்று மறைந்தது. பிறந்ததிலிருந்தே என்னை விட்டுப் பிரியாத அக்கா, கொழும்புக்கு புறப்பட்டு விட்டாள் தன் கணவனுடன் புதுக் குடித்தனம் பண்ணுவதற்கு!

சரசுவைப் பொறுத்த வரையில் அவள் இன்னும் ஒரு பள்ளி மாணவிதான். என்ருலும் அவள் சிறு பெண்ணில்லையே!

வசந்தத்தின் செழுமையும் பருவத்தின் பூரிப்பும் நிறைந்து பூரணமுழுநிலவாய் சரசுபோகும் போதும் வரும் போதும் எல்லோரினதும் இதயத்தையும் கொள்ளை கொண்டு விடுவாள். வண்ணச் சிறகடித்து வட்டமிட்டுப் பறக்கும் வண்ணத்திப் பூச்சியவள்! சதா புன்னகையும், குதூகலமும் நிறைந்த சரசு, வாழ்க்கையின் சுவையான ஏடுகளைப் படிக்க, தன் உள்ளத்தே சித்திரங்களைத் தீட்டும் பாவையாய் நிறைந்திருந்தாள்.

ஆனல் அவளின் பெற்ரோரோ......?

''என்ன நீங்கள் சும்மாயிருக்கிறீர்கள்? இவள் சரசுவுக்கும் ஒரு இடம் பார்த்தாலென்ன?''

— இடைக்கிடை பாக்கியம் தன் கணவரை நச்சரிப்பாள்.

''சரசுவுக்கு கல்யாணத்துக்கு இப்பொழுது என்ன அவசரம்? படிக்கிறவள் இன்னும் கொஞ்சக் காலத்துக்கு தொடர்ந்து படிக்கட்டும்! கல்யாணம் ஆறுதலாய் செய்தால் போச்சு!'' - சரசுவின் அப்பா.

''படிப்புப் படிப்பென்று வயது ஏறிக் கொண்டே போகிறது. நீங்கள் விளையாடுகிறீர்கள், நான் வயிற்றிலை நெருப்பையல்லவா கட்டிக்கொண்டுஇருக்கிறன்,

"உன்னை யார் கட்டச்சொன்ஞர்கள்? சரசு ஒன்றும் தெரியாதவளா என்ன ?''

''எல்லாம் தெரிந்தபடியால் தான் சொல்லுகிறேன், ஒரு குமரை வீட்டில் வைத்திருப்ப தென்ருல் சும்மாவே?'' - பாக்கியம் தன் முகத்தை தோள் பட்டையில் இடித்துக் கொண்டாள்.

''பாக்கியம் நீ ஒன்றுக்கும் யோசிக்காதே! அதெல்லாம் சரசு கவனமாய் இருப்பாள்!'' -அவளின் அப்பாவின் நம்பிக்கை கலந்த வார்த்தை !

ஆனல் அந்த நம்பிக்கை....!

கண்ணுக்கு நிறைந்த கணவன்; கை நிறையச் சம்பளம்; நிறைவாகத்தான் பவானியின் வாழ்க்கைப்படகு குதித்தோடியது.

'' சரசு, வாழ்க்கை எனக்கு இனிக்கிறது. அத்தான் என்னில் உயிரையே வைத்திருக்கின்ருர்.'' -இப்படி அடிக்கடி வரும் பவானியின் கடிதம்.

' அக்கா அதிஷ்டக்காரி! " - சரசு தனக்குள் நினைத்துக் கொள்ளுவாள். கூடவே அவளின் இளமை எண்ணங்களும் சுழித்தோடும்! எதை எதையோ எண்ணித் தனக்குள் சிரித்துக் கொள்ளுவாள். ஆனல் பவானீயின் அதிஷ்டம் எவ்வளவு தூரத்துக்கு இருந்தது......?

வருடத்துக்கொருதரம் நடக்கும் அம்மன் கோவில் திருவிழா, பவானியின் கல்யாணத்துக்குப் பின் ஐந்து தரம் நடந்தேறிவிட்டது. பவானியின் அம்மாவின் பேச்சில் இடைக்கிடை ஒரு வித ஆயாசம் தென்படும்!

''வீட்டில் ஒரு குழந்தைப் பிள்ளை இருக்க வேண்டும்! வீடே வெளிச் சென்று கிடக்குது !''

''ஏன் அம்மா நானில்லையா? நான் இன்னும் உன் குழந்தை தானே!''-சரசு ஆசையுடன் தன் தாயின் கழுத்தைக் கட்டிக் கொள்ளுவாள்.

''விடடி, விடடி ! குழந்தையாம் குழந்தை ! வயதைப் பார், இன்னும் புத்தி தெரியவில்லை!'' - ஒரு பொய்க் கோபத்துடன் பாக்கியம் சரசுவின் கைகளை விடுவித்துக் கொண்டாள்.

''இவள் கண்ணம்மாவின் மகள் தவமும் அல்லவோ இரண்டு குழந்தைகளைப்பெற்றுவிட்டாள்! அதுவும் பவானிக்குப் பிறகு தானே அவளுக்கு கல்யாணமாகியது! எங்கடை பவானிக்கு...'' அவள் வார்த்தையைமுடிக்காமல் சப்புக் கொட்டினுள்.

''அக்காவுக்கென்னம்மா ?" சரசு குறும்புடன் கேட்டாள்,

"என்னவோ? ஒரு குழந்தை குட்டி பிறந்தாலல்லோ சந்தோஷம்!"

''அம்மா, கல்யாணமாகி ஐந்து வருடங்களுக்கு குழந்தையே பிறக்கக்கூடாது! அதன் பின் பிறந்தால்தான் நல்லது!',

''போடி போ! உனக்கு என்ன தெரியும் இதைப் பற்றி? வந்து விட்டா கனக்கக் கதைக்க!''- பாக்கியத்தின் கோபம் சரசுவின் மேல் தாவியது.

சரசுவுக்குப் புரிந்தும் இருந்தது. புரியாமலும் இருந்தது!

அம்மாவின் குறை எவ்வளவு பெரிது என்று அறியும் சந்தர்ப்பம் சரசுவுக்கும் வந்தது. கல்யாணமாகி ஐந்து வருடமாகியும் குழந்தையில்லையே என்ற குறை பவானியின் மனதிலும் இடம் பெற்றுவிட்டது. இது அவளின் கடிதத்தில் அடிக்கடி வெளிப்படும்.

''சரசு, வாழ்க்கை ஒரே மொட்டு மொட்டென்று இருக்கிறது. ஆரம்பத்தில் புதிதாகத் தோன்றியதெல்லாம் சலித்து விட்டன!''

''சரசு நீயென்றாலும் கொழும்புக்கு வந்து சில நாட்கள் என்னுடன் இருந்தால் என்ன? எனக்குப் பொழுது போகும்; அத்தானும் உன் வரவை எதிர்பார்க்கின்றார்"—இடைக்கிடை பவானி இப்படி எழுதுவாள்.

''அம்மா, சரசுவைஒருமுறை அனுப்பி வை!" - அம்மாவுக்கும் பவானி கடிதங்கள் எழுதுவாள்.

''இஞ்சேருங்கோ பவானி சரசுவை அனுப்பச் சொல்லி இதோடை பத்துத்தரம் எழுதி விட்டாள். என்ன செய்யலாம்?'' —பாக்கியம் தன் கணவரைக் கேட்டாள்.

''அதற்கென்ன அனுப்பிவிட்டால் சரி! சரசுவும் சும்மா தானே இருக்கிறாள். போய் கொஞ்ச நாள் இருக்கட்டுமன்!'

''என்ன விளையாடுகிறீர்களே? இவள் என்னமாதிரி அங்கு போய் இருக்கிறது? அங்கு பவானியும் கணேசனும் தானே! இவள் ஒரு குமர்ப்பிள்ளை அவையோடு இருக்கிறது சரியே?''

> ''பிரமச்சாரிகளுக்குப் பெண்களைப் பற்றி என்ன தெரியும்?"
>
> ''நிறையத் தெரிந்தபடியால் தான் பிரமச்சாரிகளாக இருக்கிறார்கள்"

''பாக்கியம் சும்மா கத்தாதே! நீ சொல்வது புரிகிறது; உன்னுடைய மருமகன் சரசுவை கடிச்சு விழுங்க மாட்டான்! சும்மா அனுப்பு பயமில்லாமல்! பவானிக்கும் பொழுது போகும்!" - சரசுவின் அப்பா முடிப்பார்.

'உன்னுடைய மருமகன் கடித்து விழுங்க மாட்டான்!' சரசுவின் தந்தையின் கேலியான வார்த்தை...!

ஆனாலும் சரசுவின் தாயார் பாக்கியம் அவ்வளவு தீர்க்கதரிசியா...?

"அக்கா என்ன இது? உன் கோலமென்ன?" — நான் கத்தி விட்டேன். பின்னே இருக்காதா என்ன ?

மொழு மொழுவென்றிருந்த அழகுச்சிலை பவானியின் அப்போதைய தோற்றம்...!

பொலிவிழந்து, கண்களில் ஒரு களைப்புத்தோன்ற, மேனி வெளிர்த்து ஈர்க்குச்சி போல் ஒரு போலிச் சிரிப்புடன் நின்ற என் அக்காவைக் கண்டதும் நான் அழுதேவிட்டேன்.

"என்ன அத்தான் இது? அக்காவுக்கு என்ன நடந்தது? சுகவீனம் பற்றி ஏன் எழுதவில்லை?"

''நான் என்ன செய்வது சரசு? குழந்தையில்லையே என்ற ஏக்கம் அவளுக்கு! சரியாகச் சாப்

பிடுவதுமில்லே. நானும் எவ்வளவோ சொல்லிப் பார்த்து விட்டேன். இனி நீ தான் வந்து விட்டாயே! உன்பாடு—உன் அக்கா பாடு!"

''நீங்கள் சும்மாயிருங்கள்! எனக்கொன்றுமில்லே!"

இதைத்தான் பவானியால் சொல்ல முடிந்தது.

எனக்குப் புரிந்தது. என் அக்காவின் ஏக்கம் சாதாரணமானதல்ல! ஆனாலும் பரிகாரம் நம் கையிலா இருக்கிறது? அப்போதைய அவளின் நிலே... மிகவும் பயங்கரமாய் இருந்தது. என் இடைவிடாத நச்சரிப்பின்பேரில் ஒரு டாக்டரிடம் சென்று பரிசோதனே செய்விக்க உடன்பட்டாள். டாக்டர், அவளே குறைந்தது ஒரு மாதமாவது தன் நர்சிங் ஹோமில் இருக்க வேண்டும் என்று சொல்லிவிட்டார்.

''அப்படியானல் ஊருக்குக் கடிதம் எழுதி உன் அம்மாவைக் கூப்பிட்டால் என்ன?'' - அத்தான் அக்காவிடம் கூறினர்.

''ஆமாம் அக்கா, அதுதான் சரியான யோசனே! இன்றே நான் அம்மாவுக்குக் கடிதம் எழுதுகின்றேன்'' - நான் கூறினேன்.

"தயவுசெய்துஇரண்டுபேரும் சும்மாயிருங்கள். அம்மாவுக்கு இதுபற்றி ஒன்றுமே எழுதாதீர்கள். எழுதினல் மிகவும் கவலேப்படுவாள். எனக்கொன்றுமில்லே! எல்லாம் சரியாகிவிடும்!'' - அம்மாவை வரவழைப்பதில் அக்காவுக்கு விருப்பமில்லே.

வீட்டில் நானும் அக்காவின் கணவரும்தான். வீட்டு வேலேகளேக் கவனிப்பதும், ஒவ்வொரு நாளும் அக்காவைப்பார்ப்பதற்கு மருத்துவ மனேக்குச் செல்வதும் என் தினசரி வேலேயாய்இருந்தது.



அவன் : உனது ஒரு வார்த்தைதான் என்னே இந்த உலகில் மகிழ்ச்சியாக வாழ வைக்கும். நீ என்னே மணந்து கொள்கிருயா ?
அவள் : மாட்டேன்.
அவன் : அதுதான் அந்த வார்த்தை ! ! !

---

சுருங்கக் கூறின் ஒரு தற்காலிக வீட்டுத் தலேவி! எனக்கே தெரியாத ஒரு உற்சாக நிலேயில் காரியங்களே இழுத்துப்போட்டுக் கொண்டே செய்வதை அத்தானே பார்த்து வியந்தார்.

''என்ன சரசு, நீ வீட்டுக் காரியங்களேப் பார்ப்பதில் உன் அக்காவையே மிஞ்சி விடுவாய் போல் தெரிகிறதே!'' – அவர் குறிப்புரை வழங்கும் போது நாணத்தினல் முகம் குனிவேன்.

'சரசு, பவானியும் காப்பி போடுவாளே - நீ போடும் காப்பிக்கு ஈடாகுமா ? எங்கே இன்னெரு கப் கொடு பார்க்கலாம்!" காலேயில் காப்பி குடிக்கும் வேளேயில் அத்தான் கூறுவார்.

என் காரியங்களேப் பற்றி அத்தான் புகழ்ந்து கூறும் போதெல்லாம் மகிழ்ந்த நான்...

(அடுத்த இதழில் நிறையும்)

# நங்கிக் கூடல்

## 'செங்கை ஆழியான்'

''பெண்கள் அழகாக வளர்வதில் அதிசயம் ஒன்றுமில்லையே. தேவி! அதுவும் அரசமாதேவி உண்மையிலேலே அழகானவள் ..''

இவர்களுடைய பேச்சினால் யாவரும் ஈர்க்கப்பட்டனர். என்றுமே காணாத அதிசயம் போல ஒரு கணம் எல்லாரது கண்களும் அரசமாதேவி மீது நிலைத்தன. சங்கிலிகுமாரன் சர்வசாதாரணமாகத் தனது விழிகளை அவள் மீது படரவிட்டான்.

'சிறுமியாக என்னோடு விளையாடிய அரசமாதேவியா, இவள்?' என்ற வியப்பு அவனை ஆட்கொண்டது.

வள்ளியம்மைதேவியார் அடுத்துக் கூறியவற்றைக் கேட்ட அரசமாதேவி விருட்டென எழுந்து வெட்கத்தோடு, உள்ளே ஓட முயன்றாள்; பரவை கரம் பற்றி இழுத்து இருத்தினாள்.

சங்கிலிகுமாரன் திக்பிரமை பிடித்தவன் போலானான்.

''சுவாமி, எனக்கு நீண்ட நாளாக ஓர் ஆசை ..''

''என்னவென்று ..?''

''அரசமாதேவியை நம்முடைய மருமகளாக்கிக் கொள்ள வேண்டுமென ...''

''ஏன் இப்போதும் அவள் நம் மருமகள்தானே?''

''அதல்ல... சங்கிலிகுமாரனின் பட்டத்துராணியாக அவளை...''

''செய்தால் போகிறது...'' எனப் பரராசசேகரர் அமைதியாகத்தான் கூறினார். ஆனால், அவை அங்கிருந்தவர்களது உள்ளங்களில் பலவித உணர்ச்சிகளை ஏற்படுத்தின. அரசகேசரி தனக்குள் சிரித்துக் கொண்டார்;

பரவையின் கண் முன் கண்ணீரும் கம்பலையுமாக உதயவல்லி தோன்றியது போலவே சங்கிலிகுமாரனுக்கும் தோன்றினாள். 'இளவரசே...' என உதயவல்லி பயத்தோடு அழைப்பது போன்ற பிரமை.

சங்கிலிகுமாரன் விருட்டென எழுந்தான். அவன் எழுந்த வேகம் அவனது மன நிலையை நன்கு உணர்த்தப் போதுமானதாக இருந்தது.

''குமாரா...'' என எழுந்த தந்தையின் குரல் அவனைத் தடுத்தது: ''அவசரப்பட்டு எந்த முடிவிற்கும் வந்துவிடாதே! ஆறுதலாகச் சிந்தித்துப் பார்! அரசமாதேவி அழகானவள்; அடக்கமானவள். உனக்கு எவ்வகையிலும் குறைந்தவளல்லள்......''

வேதனை நெஞ்சோடு சங்கிலி அமர்ந்தான்; அரசமாதேவியின் விழிகளில் முத்துக்கள் பனித்திருப்பதைப் பரவை கண்டாள்; நீண்டதொரு நெடுமூச்சு அரசமாதேவிக்குரியது.

அரசமாதேவியைத் தவிர ஏனையோர் கூடியிருந்தனர்.

"குமாரா, உன் முடிவுதான் என்ன?" என்று கேட்ட தந்தையைச் சங்கிலிகுமாரன் ஏறிட்டு நோக்கினுன்.

"ஐயா, உதயவல்லியை நான் மனதார நேசிப்பதாகக் கூறினேன். 'உன்னை நிச்சயமாக மணப்பேன்' என அவளுக்கு வாக்குமளித்துள்ளேன். என் எண்ணப்படி அவளை மணக்க அனுமதி தாருங்கள்! அவளைப் பட்டத்துராணியாக ஏற்க உரிமை தாருங்கள்!"

"குமாரா, அப்பாமுதலி மகளை நீ விரும்புவதை நீ கூறிய பின்பே நானறிவேன்! நீ சாதாரண குடிமகனுகவோ, இளவரசனுகவோ இருந் திருந்தால் மந்திரி மகளை மணக்க உனக்கு அனுமதி தந்திருப்பேன். இப்போது நீ இந்த அரசின் எதிர்கால மன்னன்! இராஜ சம்பிரதாயங் களுக்கு உட்பட்டவன்... ஆதலால்......" பரராசசேகரர் தொடர்ந்து பேசினுர்: "மந்திரி மகளை அரசியாக ஏற்க மக்கள் விரும்பமாட் டார்கள். அரசமாதேவி அரசகுலத்தைச் சேர்ந்தவள்... அவளை அரசியாக ஏற்க மக்கள் விரும்புவார்கள்! குமாரா காதலின் மேன்மையை உணரா தவனல்ல நான்! காதலுக்கு மதிப்பளிப்பவன். நான் கூட உன் தாத்தாவிடம் என் காதலை வெளியிட்டபோது அவர் என்ன கூறினுர், தெரியுமா? 'அரச குடும்பத்தில் பிறந்தவர்களுக்கு எவ்வித ஆசா பாசங்களும் கூடாது! தன் விருப்பப்படி மன்னன் நடக்கக்கூடாது, மக்களது விருப்பப்படியே நடக்க வேண்டும்! இராஜ சம்பிரதாயங் களுக்குக் கட்டுப்பட்டு நடப்பவனைத்தான் மக்கள் விரும்புவார்கள்! அரச சம்பிரதாயங்களுக்கு உட்பட்டு நடப்பதுதான் நீ எனக்குச் செய்யும் கைமாறு!' என்ருர். அதையே நானும் உன்னிடம் கேட்கி றேன். உன் காதலை நாட்டின் நலனுக்காக நீ தியாகம் செய்யவே கூடாதா......?"

"என்னுல் முடியாது.........! வேண்டுமானுல் யாழ்ப்பாணத்தின் முடியைத் துறப்பேன். உதயவல்லியை ஒருபோதும் துறக்க என்னுல் முடியாது...!" சங்கிலிகுமாரனின் குரலில் ஒலித்த திடத்தை அங் குள்ள யாவரும் உணர்ந்தனர். ஒருவரும் பேசாதிருக்கப் பரநிருப சிங்கர், "தம்பி!" என அழைக்கவே சங்கிலி தமையனுக்காகத் திரும்பி னுன், ஏனென்று கேட்பது போல.

"உதயவல்லியை மணப்பதற்காக முடியைத் துறக்க வேண்டாம்! நீ உதயவல்லியை மணந்து கொள்வதில் எமக்கொரு ஆட்சேபமுமில்லை! ஆனுல்......"

"ஆனுல் என்ன அண்ணு?"

"அரசமாதேவியை உன் பட்டத்துராணியாக நீ ஏற்றுக் கொள்ள வேண்டும்!"

பரநிருபசிங்கர் கூறியவழி யாவருக்கும் பிடித்தமான வழியாகவே இருந்தது. சங்கிலி குமாரன் துன்பத்தோடு ஏதோ கூற முயல அரசகே சரி குறுக்கிட்டார்:

''இரு பெண்களைத் துணைவிகளாகப் பெறுவதில் தவறில்லை, சங்கிலி! மன்னர்கள் பலரைப் பத்தினிகளாக ஏற்பதில் ஒன்றும் அதிசயமில்லை......''

''இதுவும் ஒரு அரச சம்பிரதாயமா ?''

''சம்பிரதாயமன்று, குமாரா! சிக்கலைத் தீர்க்கும் வழி.........'' என்றார் வள்ளியம்மை தேவியார்.

அவனது மூளை குளம்பியது போலிருந்தது.

''குமரா உன் முடிவென்ன......? உன் தமையன் கூறியபடியே செய்வோம்...... அரசமாதேவி உன்பட்டத்து ராணியாவாள்! உதய வல்லி மனைவியாவாள்......''

சங்கிலிகுமாரன் திண்டாடிப் போனான். அவனுக்குச் சிந்திக்க அவகாசம் வேண்டும் போலிருந்தது.

''எனக்குச் சற்றுச் சிந்திக்க அவகாசம் கொடுங்கள்''

அவன் அமைதிதேடி நந்தவனம் நாடிவந்தான். அங்கே கொடிகளோடு கொடியாக, மலர்களோடு மலராக அரசமாதேவி விண்ணின்று இறங்கி வந்த எழில் மங்கை என நின்றிருப்பதைக் கண்டான் காலடி கேட்டுத் திரும்பிய அரசமாதேவியின் கண்கள் சங்கிலி குமாரனின் விழிகளோடு இரகசியம் பேசுவது போதாதென்று, உதடுகளும் பிரிந்தன. துன்பத்தினால் அவள் குரல் தத்தளித்தது.

''இளவரசே! என்னை மறந்து விட்டீர்களா ?......''

சங்கிலிகுமாரன் எச்சிலை மென்று விழுங்கியபடி, ''மறக்கவில்லை, அரசமாதேவி! உன்னோடு சிறு வயதில் ஒன்றாக விளையாடியதை எப்படி மறக்க முடியும்—?'' என்றான்.

''மறக்கவில்லையென்றால் நான் பாக்கியசாலி! இளவரசே! என்றும் நானுங்களை மறந்ததில்லை. என் பிஞ்சு உள்ளத்தில் காதல் நினைவுகளை அன்று மூட்டினீர்கள்!......... அன்றிலிருந்து என் இதயத்தில் தெய்வமாகக் குடி கொண்டு விட்டீர்கள்! பொன்பற்றியூரில் உங்கள் இனிய நினைவோடேயே வாழ்ந்தேன்!— உங்களை என்னால் மறக்கவே முடியவில்லை; இளவரசே! என்னை உங்களுக்குப் பிடிக்கவில்லையா? அப்படியாயின் அன்று ஏன் 'என்னை மணப்பதாக வாக்களித்தீர்கள் ?''

''என்ன பேசுகிறாய், மாதேவி! நானா...... உனக்கா...... வாக்குத் தந்தேனா ?''...சங்கிலியின் குரலிலே திகைப்பும், மயக்கமும் காணப் பட்டன.

''மறந்து விட்டீர்களா? ஒருவருடப் பிறப்பன்று – சங்கிலித் தோப்பிலே நாங்கள் விளையாடிக் கொண்டிருக்கும்போது ......!'' அரசமாதேவி பேசிக்கொண்டே போனாள். 'மறக்கவில்லை. மறக்கவில்லை' என்பதற்கு அறிகுறியாகச் சங்கிலி குமாரனின் தலையாடியதோடு அவனது மனக்கண்முன் பழைய சம்பவங்கள் சில விஸ்வரூபம் எடுக்கத் தொடங்கின,



# சங்கிலித் தோப்பு

நல்லூர்க் கந்தன் ஆலயத்திற்கும் அரண்மனைக்கும் இடையில் இருக்கும் பரந்த பரப்பில் எழில் கொஞ்சும் தோப்பு ஒன்று அமைந்திருந்தது. தென்னம் பிள்ளைகள் வரிசை வரிசையாக வளர்ந்து தோப்பிற்கு அழகு கொடுத்தன. மாங்கன்றுகள் கொத்துக் கொத்தான கனிகளோடும், தோடை, எலுமிச்சை என்பன கிளை தாங்காக் காய்களோடும் நிரம்பிக் கிடந்தன. தோப்பின் எல்லையாக வானளாவிப் பனை மரங்கள் வளர்ந்து இளம் நுங்குகளைத் தாங்கியபடி காட்சி தந்தன.

தோப்பின் காவலர்கள், தோப்பின் ஒரு பக்கத்தில் தங்கள் குடும்பத்தோடு குடிசை போட்டு வாழ்ந்தனர். இத் தோப்பை மன்னர் மங்கத்தம்மாளுக்கு அளித்திருந்ததால், அவர் இத்தோப்பிற்குத் தனது மகன் பெயரைச் சூட்டிச் சங்கிலித் தோப்பு என அழைத்து வரச் செய்தாள்.

காய்கனிகளை அளித்துவரும் தோப்பாக மட்டுமிது இருக்கவில்லை. மாலையில் அரண்மனைச் சிறுவர்களின் விளையாட்டு இடமாகவும் இருந்தது. பல ஆண்டுகளுக்கு முன்பு இத்தோப்பில் ஒத்த வயதுடைய அரண்மனைச் சிறுர்கள் பலர் சேர்ந்து விளையாடி வந்தார்கள்.

ஒருநாள், சுகந்தமான மாலை வேளை, சிங்கபாகு, வீரபண்டாரம், பரநிருபன் ஆகியோர் வாட் பயிற்சியிலும், சங்கிலி, பரவை, அரசமாதேவி, வடிவம்மை போன்றோர் கெந்தியடிப்திலும் ஈடுபட்டிருந்தனர்.

தற்செயலாகத்தான் அச்சம்பவம் நிகழ்ந்தது. சங்கிலிகுமாரனுல் வடிவம்மை தட்டுப்பட்டு நிலத்தில் விழுந்தாள். நிலத்தில் விழுந்த வடிவம்மை பெரிதாக அழத் தொடங்கவே வாட் பயிற்சியில் ஈடுபட்டிருந்த தமையன்மார் மூவரும் விரைந்து ஓடி வந்தனர்.

''என்ன நடந்தது?'' முன்னே ஓடிவந்த வீரபண்டாரம் தங்கையைத் தூக்கியபடி கேட்டான்.

''சங்கிலி என்னைத் தள்ளி விட்டுவிட்டான்'' என வடிவம்மை விம்மினுள்.

வெகு விரைவில் உணர்ச்சிவசப்படக் கூடியவன் வீரபண்டாரம். சங்கிலியைப் பிடித்துக் கன்னத்தில் 'பளார் பளார்' என அறைந்தான்.

''இவருக்குள்ள தைரியத்தைப் பார்!'' என இகழவும் செய்தான். அந்த இகழ்ச்சியின் உட்பொருளை சங்கிலி என்ற அச்சிறுவனுல் உணர முடியாமலில்லை. தம்பி என்ற உரிமையோடு தன்னேடு அவர்கள் பழகுவதில்லை என்பதை அவனுணர்வான். எதையும் பொறுக்கும் அவனுக்குத் தன்னை அவ்வாறு இகழ்வது ஏதோ பெருங்குறைபோலவும், தான் அவர்களிலும் தாழ்ந்தவன் என்ற எண்ணத்தையும் உணர்த்தியது.

தனிமையில் இருந்து மாருத வன்மத்தை இதயத்துள் தேக்கி விம்மி விம்மி அழத்தான் அவனுல் முடிந்தது.

அவன் அரச மகன் அல்லன்.

அடுத்த நாள் வழக்கம்போல எல்லாரும் சங்கிலித் தோப்பிற்கு விளையாட வந்த போதிலும், அவர்களோடு கலந்து கொள்ளாது, தனிமையில் ஒரு மரத்தடியில் அமர்ந்து கொண்டான், சங்கிலிகுமாரன். பரவை, கனகராயன் ஆகியோர் எவ்வளவு வற்புறுத்தி அழைத்தும் பயன் கிடைக்கவில்லை. தோப்பிற்கு வருவதும், பலத்த சிந்தனையோடு மரத்தடியில் அமர்வதும், எல்லாரும் விளையாடி முடிந்ததும் அவர்களோடு அரண்மனைக்குத் திரும்புவதும் சங்கிலிக்கு வழக்கமாகிவிட்டது போலவே, மற்றவர்களுக்கும் அவனை விட்டுவிட்டு விளையாடுவதும் வழக்கமாகிவிட்டது.

அன்று புதுவருடப் பிறப்புத் தினம். வழக்கம் போல விளையாடுவதற்காக எல்லாரும் தோப்பிற்கு வந்தார்கள். மூத்தவர்கள் ஏனே அன்று வரவில்லை. நெல்லி மரத்தடியில் அமர்ந்து சிந்தனையோடு இருந்தபோது, தன்னருகே 'கலீர் கலீர்' எனச் சலங்கை ஒலி கேட்டதினுல் திரும்பிய சங்கிலிகுமாரன், அரசமாதேவி தன்னருகே நின்று கொண்டு தன்னைப் பார்த்தபடி நிற்பதைக் கண்டான்; தன்னேடு அன்பாகப் பழகுபவர்களில் அரசமாதேவியும் ஒருத்தி என்பதை அவனறிவான். இன்று என்றுமில்லாத புதுமையாகத் தன்னைத் தேடி, விளையாடாது அவள் வந்து நிற்பதைக் கண்ட சங்கிலி, ''நீ விளையாட வில்லையா ?'' என வினவினுன்.

''இல்லை... நீங்கள் ஏன் விளையாட வருவதில்லை...... ?''

''எனக்குப் பிரியமில்லை!...''

''பிரியமில்லை என்பதல்ல. மனம் சரியில்லை என்று சொல்லுங்கள்!'' என்றவளை ஏறிட்டுப் பார்த்துவிட்டுக் கலீரெனச் சிரித்தான் சங்கிலி.

''ஏன் சிரிக்கிறீர்கள்...''

''ஒன்றுமில்லை......... எனக்கு மனம் சரியில்லை என்பதை எப்படி உணர்ந்தாய் ?'' இப்போது அரசமாதேவி கலீர் என நகைத்தாள்.

''இது கூடவா தெரியாது! அன்று அவர்கள் அடித்ததிலிருந்து நீங்கள் விளையாட வராது ஒரு மாதிரியாக இருக்கிறீர்கள்...''

''அடித்திருந்தால் விளையாட வந்திருப்பேன்! ஏசினுர்களே.....'

''ஏசினால் என்ன?'' சிறுபிள்ளைத் தனமாக அரசமாதேவி கேட்பதாக அச் சிறுவனுக்குத் தெரிந்தது; மௌனமாகவிருந்தான்.

''என்னவென்று ஏசினார்கள்!"

"உனக்குக் கூறினால் புரியாது, மாதேவி!...... நான் பட்டத்து ராணியின் பிள்ளையில்லையாம்! அதனால் — அவர்களிலும் பார்க்கத் தாழ்ந்தவனும்..........''

''அப்படியா அவர்கள் கூறினார்கள்...!'' என்ற அரசமாதேவியின் குரல் கரகரப்பதையும், அவளது விழிகளில் நீர் சுரப்பதையும் கண்ணுற்ற சங்கிலி திடுக்கிட்டுவிட்டான்.

''மாதேவி, நீ ஏன் அழுகிறாய்?''

அவனருகே மௌனமாக அமர்ந்து கொண்டாள், அச் சிறுமி.

"நீங்கள் அன்று அழுதீர்களே?''

''எனக்காக அழுதேன்! நீயேன் அழவேண்டும்''

''உங்களுக்காக அழுகிறேன்! அன்று உங்களை அவர்கள் அடித்த போது என்னை அடித்தது போலவிருந்தது...!'' தனக்காக கண்ணீர் விடும் அவளுக்காக இரக்கப்பட்டான், சங்கிலி. அவளே தொடர்ந்து பேசினாள்.

''நாளை நாங்கள் பொன்பற்றியூருக்குப் போகப் போகிறோம்!...... தெரியுமா?"

அவர்களது பேச்சு வேறு வழியில் திரும்பவே, தன் மன வேதனைகளையெல்லாம் கணப் பொழுதில் மறந்து கலகலப்பாக உரையாடத் தொடங்கினான் சங்கிலி.

''தெரியாதே? ஏன் போகிறீர்கள்?"

"அப்பா வரும்படி ஓலையனுப்பியுள்ளார்! மற்றது...... சின்னம்மாவிற்குக் கலியாணம்......"

''உனக்கில்லையா?'' எனக் குழந்தைத் தனமாகச் சங்கிலி கேட்டது, அச் சிறுமியை வெட்கப்பட வைத்ததோடு பொய்க் கோபத்தையும் மூட்டியதால், அவனை முழித்துப் பார்த்தாள்; அவள் தன்னை முழித்துப் பார்ப்பதைக் கண்டு அவன் சிரித்தான்.

''உங்களுக்கு எப்போது......?'' என அவள் பதிலுக்குக் குறும்புத் தனமாகக் கேட்கவே, சங்கிலி குமாரன் மேலும் அவளை வெட்கப்பட வைக்க எண்ணி, ''நீ பெரியவளானதும்!'' என்றான்.

அரசமாதேவி இப்பதிலை எதிர்பார்க்கவில்லையாதலால் முதலில் திக்குமுக்காடி பின் விருட்டென்றெழுந்து ஓடமுயன்றவளைக் கையில் பற்றி ''சும்மா சொன்னேன், மாதேவி! கோபிக்கிறாயா?" எனக் கேட்டான். 'இல்லை' என்பதற்கறிகுறியாகத் தலையாட்டி விட்டு அரசமாதேவி மற்றவர்கள் விளையாடும் இடத்திற்குத் துள்ளி ஓடிவிட்டாள்

நறுமலர்களைத் தழுவி விரைந்த மென்காற்று சங்கிலிகுமாரனின் உடலையும் உள்ளத்தையும் ஒருங்கே தழுவியது. மறந்து விட்ட நினை

வுகள் தென்றலாக எழுந்தன. ஒருவரால் மறக்கப்பட்ட நிகழ்ச்சி இன்னொருவரின் வாழ்வாக மலர்ந்து நிற்பதை அவனுணர்ந்தான்.

''மாதேவி! அவற்றை நீ மறக்கவே இல்லையா எனத் தளுதளுத்த குரலில் கேட்டவன் அவளை நிமிர்ந்து நோக்கினன்.

அவள் விழிகளிலே ஏக்கம் படர நின்றாள்.

அலையலையாக வாரி விடப்பட்டிருந்த கூந்தல், பிறை போன்ற அகன்ற நெற்றி, பளிச்சிடும் திலகம், கனவுலகில் சதா மிதக்கும் விழிகள், விழிகளுக்கு எல்லையிட்டது போன்று அதிகமாக வளைந்த புருவங்கள், செவ்வானத்தைப் பழிக்கும் மாதுளை உதடுகள், சிவந்த எழிற் கன்னங்கள், சங்குக் கழுத்து என்பன அவள் மதி முகத்திற்குச் சோபையைக் கொடுப்பதையும் தன்னையறியாமல் தன் மனம் சலன மடைவதையும் அவனுணர்ந்தான். உணர்ந்த அதே நேரத்தில் கோமள விழிகளில் நீர்த்திரையிட, அவன் கண்களின் முன் உதயவல்லியின்பால் வடியும் அழகிய முகம் தோன்றியது.



## அரசமாதேவியின் காதல்

நிலவுக் கதிர்களின் தண்ணொளியில் தன்னை அர்ப்பணித்துவிட்டு, மோன நிலையில்கிறங்கிப்போயிருந்த யாழ்ப்பாணவரசின் அழகிய அரண்மனையின் மேன் மாடியொன்றில், நித்திரையின்றி மஞ்சத்தில் சாய்ந்து படுத்திருந்த சங்கிலிகுமாரனின் நினைவு பல வழிகளில் இழுபட்டதால், அமைதியின்றித் தவித்துக்கொண்டிருந்தான்; அரண்மனையே ஆழ்ந்த தூக்கத்தில் ஆழ்ந்திருந்த அவ்வேளையில் சங்கிலிகுமாரன் முக்கிய ஒரு பிரச்சனைக்குத் தீர்வுகாண முயன்று கொண்டிருந்தான்; தன் மனம் அரசமாதேவியின்பால் இழுக்கப்படுவதையும். அதே நேரத்தில் உதயவல்லியின் அன்பினல் கவரப்படுவதையும் நன்குணர்ந்ததினல், இருவரையும் இழக்க விரும்பாதவனைப் போல அவனது உள்ளம் தத்தளித்தது.

சங்கிலிகுமாரன் மீது தவறிருப்பதாகக் கூற முடியாது; ஏனெனில், உதயவல்லியின் காதல் கிடைக்குமுன், இளம்வயதிலே, விளையாட்டுப் பருவத்திலே, அரசமாதேவியுடன் கூடிவிளையாடும்போது தன்னையறியாமல் அவள் மேல் அவனுக்குத் தனியானதோர் அன்பு ஏற்பட்டிருந்ததை அறிவான்; ''உங்களுக்காக நான் அழுகிறேன்...' என்று அன்று அவள் கூறியதிலிருந்து அவளுக்காக அவன் எதையும் செய்யச் சித்தமாயிருந்தான்; அவனது இதயத்தின் ஒரு மூலையில் அவனையறியாமலே அவளுக்காக ஓர் இடம் இருந்ததையும், அது உதயவல்லியின் காதல் தீயின் முன் மறைந்திருந்ததையும், பின் அரசமா

தேவியின் வார்த்தைகளினுல் திரும்பவும் ஒளி பெற்றதையும் அவனுல் அறிய முடிந்தது; 'என்னுள்ளத்தின் ஓர் இருண்ட மூலையிலாவது தனக்கோர் இடத்தைத் தரும்படியல்லவா, அரசமாதேவி வேண்டினுள்,

"மாதேவி! இவற்றை நீ மறக்கவேயில்லையா?" எனத் தளுதளுத்த குரலில் சங்கிலி கேட்டபோது அவள் தன் இதயத்தின் கனவுகளையே கொட்டிவிட்டாள்:

"எப்படி மறக்கமுடியும்? அன்று உங்களிடம் விடைபெற்றுப் பொன்பற்றியூருக்குச் சென்றேனே தவிர, என்னுள்ளம் இங்கேயே தங்கிவிட்டது! அந்தப் பிஞ்சு வயதிற்கூட உங்கள் நினைவே என்னுள் என்றும் எழுந்து என்னை வேதனைப்படுத்தி வந்தது! இளவரசே! நீங்கள் எனக்காகக் காத்திருப்பதாகவும், உங்களுக்காக நான் வளர்வதாகவும் என் மனதில் அன்றிலிருந்து எழுந்த எண்ணத்தை என்னுல் மாற்றவே முடியவில்லை! 'உங்களுக்கெப்போ...?' என நான் கேட்டபோது, 'நீ பெரியவளானதும்...!' என நீங்கள் கூறினீர்களே, அந்த வார்த்தைகளை என் மனம் பலமுறை நினைவு கூர்ந்து மகிழும்! உங்களுக்காகவே நான் பிறந்தேன்' எனப் பல முறைகள் எனக்குள் கூறிக்கொள்வதில் ஆனந்தம் கண்டேன். இளவரசே! உங்களை என்னிதயத்தில் தெய்வமாகப் பூசிக்கின்றேன்! உங்களைத் தவிர வேறெருவருடனும் என்னுல் இணைந்துவாழமுடியாது...வாழ்ந்தால் உங்களுடன் என்ற திட முடிவுடனேயே, உங்கள் இதயத்தில் எனக்கு ஓர் சிறு இடத்தையாவது தாருங்கள் என வேண்டுகிறேன்! என் கனவுகளை— நான் கட்டிய மனக்கோட்டைகளை இடித்துத் துகள் துகளாக்கிவிடாதீர்கள்! இளவரசே!... என்னை ஏமாற்றிவிடாதீர்கள்!" என்று உணர்ச்சியோடு பொழிந்த அரசமாதேவியின் கண்களிலிருந்து தாரைதாரையாக முத்துக்கள் வழிந்தன; அவளது கண்ணீர் முன் தன் திட எண்ணம் படிப்படியாகக் கரைவதையும் சங்கிலி கண்டான்.

"அரசமாதேவி!......" என அழைத்தவன் சிறிது முன் சென்று அவளது கைகளைச் சிறைபடுத்திக்கொண்டு, "உனக்காக நான் இரக்கப்படுகிறேன்!..." என்றவன் தொடர்ந்து பேச முடியாது தவித்தான்; சங்கிலியின் வைரம் பாய்ந்த கரங்களில் தன் மென்மையான கைகளைப் பற்றியதால், சுய நினைவை இழந்து, மயங்கிய நிலையில், "உங்கள் இரக்கம், என்னை உங்கள் மனைவியாக்குமா?" என்றுள்.

"அரசமாதேவி! நான் ஏற்கனவே ஒருத்தியைக் காதலிப்பதை நீ அறிவாயா"

அரசமாதேவி படீரெனத் தன் கைகளை உதறி விட்டுவிட்டு ஆத்திரமும் அழுகையும் போட்டி போட ஏதாவது கூறுவாள் என எதிர் பார்த்தவன், ஏமாந்தான்.

"அறிவேன்! அப்பெண் அப்பா முதலியின் மகள் என்பதையும் அறிவேன்!" என்று அமைதியாகக் கூறினுள்.

"அறிந்த பின்புமா நீ என்னை விரும்புகிறுய்...?"

(தொடரும்)



# சிலம்பு சிந்தும் பரல்கள்



எம். சிவபாலபிள்ளை பீ. ஏ.

சிலப்பதிகாரத்தை மணிப்பரல், முத்துப்பரல் கொண்டெழுந்திலங்கும் ஒரு காவியம் என்பர். ஆனால் அதை ஆழ்ந்து. உற்றுநோக்குமிடத்து அது வேறு இரு பரல்கள் கொண்டு சுடர்விடுவது புலனாகும். அதாவது ஊழ்வினையும், உரைசால் பத்தினியும் சிலம்பின்கண் சிறப்பாக ஒலித்துக்கொண்டிருக்கும் பரல்கள் எனலாம். சிலப்பதிகாரம் என்னும் மாலையில் பல்வேறு பூக்கள் கோக்கப்பட்டிருக்கினும் ஊழ்வினையும், உரைசால் பத்தினியும் அவற்றில் தலையாய பூக்களாக கோக்கப்பட்டு மணம் வீசுகின்றன.

**ஊழ்வினைப்பரல்**

சிலப்பதிகாரத்தினூடே ஊழின் வலி ஊடுருவிச் செல்கின்றது. காப்பியத்தின் ஒவ்வொரு திருப்பத்திற்கும் இளங்கோ ஊழையே பிரதானமாகக் கையாண்டிருக்கின்றார்.

"ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று சூழினுந் தான்முந்துறும்" என்று வள்ளுவப்பெருந்தகை காட்டிய ஊழின் வலியை சிலப்பதிகாரமும்—

"ஊழ்வினை உருத்துவந் தூட்டும் என்பதூஉம்
சூழ்வினைச் சிலம்பு காரணமாகச்
சிலப்பதிகாரம் என்னும் பெயரால்
நாட்டுதும் யாம் ஓர் பாட்டுடைச் செய்யுள்" என்று கூறிவிடுகின்றது.

இவ் ஊழின் வலியை பதிகத்தில் கண்டதுபோக சிலம்பின்கதைத் திருப்பங்களுக்கு, அதன் போக்கிற்கு எவ்வளவிற்கு ஊழ் சிறப்பாகப் பயன்படுகிறது என்பதை ஆராய்வதுசிறப்புடைத்தாம். சிலம்பில் விண்மீன்களிடை சந்திரன் விளங்குவதுபோல் முக்கிய இடம்பெறுவது "கானல்வரி". இவ்வரி மாதவி– கோவலனது இன்பப் பட்கை மட்டுமா திருப்புகிறது? அறுதியிட்டு நோக்கின்சிலப்பதிகாரத்தையே வேறு திசையில் திருப்பிச் செல்கின்றது. கோவலன் பாடுகின்றான், மாதவி பாடுகின்றாள். சாதாரணமாக நோக்கின் பாடல்களும் சாதாரணமாகத்தான் தென்பட்டிருக்கும். ஆனால் இருவரும் வெவ்வேறுபட்ட கருத்துக்களைக்

கொள்ளுமளவுக்கு பாடல்கள் அமைந்துவிடுகின்றன. கோவலன் பெரிதுபடுத்தாது நினைந்திருக்கலாம். ஆனால் அங்கு ஊழ் வேலை செய்கின்றது. அவன்மனம்தன்மேல் எப்படி மாதவி அன்பு கொண்டாளோ அதே அன்பை வேறொருவன் மேல் செலுத்துகின்றாள். அவனை நினைந்தே பாடுகின்றாள் என்று எண்ணத் தொடங்குகின்றது. இங்கு ஆசிரியர் கோவலனையோ அல்லதுமாதவியையோ குற்றமாகக் காண வில்லை. ஊழையே காட்டுகின்றார்,

''மாயப் பொய் பலகூட்டு மாயத்தாள் பாடினாள் எனை
யாழிசைமேல் வைத்துத்த றூழ்வினைவந் துருத்ததாகலின்"

என்று கோவலன் மாதவியைப் பிரிந்தமைக்கு ஊழ்தான் காரணமாக இருந்திருக்கின்றது என்பதைக் காட்டுகின்றார். கோவலன் பிரிவு இப்படி நேர்ந்திருக்கின்றமையால் கதைத்திருப்பத்திற்கு ஊழ் எவ்வளவுக்கு காரணமாக இருந்திருக்கின்றது என்பது புலனாகும்.

கோவலன் மாதவியைப் பிரிகின்றான். பிரிந்த அவன் ''மாசறு பொன்னே வலம்புரி முத்தே' என யாரை வர்ணித்து அவளைக் கண்ணீரும் கம்பலையுமாக விட்டுவந்தானே அந்தக் கற்பரசியிடம் செல்கின்றான். அவளிடம் திரும்பிச் சென்றது ஒரு புறமிருக்க மதுரை செல்லவேண்டும் என்ற நோக்கம் கொண்டானே அங்குதான் ஆசிரிய தன் எண்ணத்தை வலியுறுத்துகின்றார். அவன் அந்த எண்ணம் கொண்டிராமல் இருந்திருப்பானேயாகில் சிலம்பே வேறுவிதமாக ஒலித்திருக்கலாம். அவளிடமிருந்து சிலம்பு பெற்ற அவன்,

''கேடலர் கோதர யெழுகென்று நீடி
வினை கடைக்கூட்ட வியங்கொண்டான்." இங்கும் அவன் தான் போகவேண்டும் என்று எண்ணியதற்கு இளங்கோ ஊழினையே காட்டுகின்றார். அந்த வினையின் ஏவலைத்தான் கோவலன் மேற்கொள்கின்றானேயொழிய தன் எண்ணம் எதற்கும் பொருந்த நடக்கவில்லை என்பது போல் இருக்கின்றது.

பழைய தீ வினையின் காரணமாகத்தான் கோவலன் கொலைக் களம் செல்ல நேர்கின்றது என்று கூறும் ஆசிரியரை நோக்கி கோவலன் அப்படி முற்பிறவியில் செய்த தீவினைதான் என்ன என்ற கேள்வி எழுவது இயற்கையே. இக் கேள்விக்கு விடையிறுப்பதுபோல் மதுரைக் காண்டம், கட்டுரைக் காதையில்,

''சங்கமன் என்னும் வாணிகன் தன்னை
முந்தைப் பிறப்பிற் பைந்தொடி கணவன்
வெந்திறல் வேந்தற்குக் கோத் தொழில் செய்வோன்
பரதனென்னும் பெயரெனக் கோவலன்
விரத நீங்கிய வெறுபின னாதலின்
ஒற்றன் இவனெனப் பற்றினன் கொண்டு
வெற்றிவேல் மன்னற்குக் காட்டிக் கொல்வுழிக்

கொலைக்களப் பட்ட சங்கமன்'' என்று நடந்த நிகழ்ச்சியினைக் கூறி விடுகின்றார். முற்பிறவியில் சங்கமனை பரதனாக இருந்த கோவலன் அநியாயமாகக் குற்றம் சாட்டியே கொல்விக்கின்றான். இதே தன்மையை இதே நிலையை இங்கு கோவலன் அடைகின்றான். கோவலன் குற்றமற்றவனாக இருந்திருக்கலாம். ஆனால் முற்பிறவியில் அவன் தீ னைசெய்திருந்த காரணத்தால் எப்படியும் கொலையுண்டே ஆகவேண்டும். ஊழுக்கு முக்கியம் கொடுத்து வந்த ஆசிரியர் முற்பிறவியில் கோவலன் அநியாயமாகக் கொலை செய்வித்ததை அதே வடிவில் கோவலன் அநியமாக் கொலைப்படுவதாகக் காட்டி விடுகின்றார்.

சிலம்பின் ஓட்டத்திடை பலவாறு ஊழைக் காட்டிய ஆசிரியர் கொலைக்களக் காதையில் ஒரு படி முன்னேறி விடுகின்றார் பாண்டியன் என்கோதையாளது காற்சிலம்பை அக்கள்வன் வைத்திருந்தானாயின் என்று தான் கூறுகின்றான். எனவே அவனுக்கு தன் மனைவியது தானா என்று ஓர் ஐயப்பாடு தோன்றியே இருக்க வேண்டும். ஐயத்திற்கிடை ஆராயாது செய்திருப்பானா என்பது கேள்விக்கு இடமானது. இதுமட்டுமின்றி ''நித்தியவரம் கோர'' எண்ணி இருந்த கும்பகர்ணண் ''நித்திரை வரம்" கோரியது போல், "கொல்ல அச்சிலம்பொடு இங்கு கொணர்க' என்று கூறுவதற்குப் பதிலாக தடுமாறி தீவினை சூழ்ந்ததன் பயனாக ''கொன்று" அச்சிலம்பு கொணர்க" என்று கூறிவிட்டான் என்றும் கூறுவர். இதையே அடியார்க்கு நல்லாரும் எடுத்துக்காட்டியிருப்பதுநோக்குதற் பாலது. இதைத்தான்இளங்கோ,

''வினை விளைகால மாதலின் யாவதும்
சினையலர் வேம்பன் தேரா னாகி
ஊர்க்காப் பாளரைக்கூவி ஈங்கென்
தாழ்பூங்கோதை தன்காற் சிலம்பு
கன்றிய கள்வன் கைய தாகில்
கொன்றச் சிலம்பு கொணர்க" என்கின்றார். மேலும்,

'தீவினை முதிர்வலைச் சென்றுபட் டிருந்த கோவலன்'

என்று கோவலன் தீவினை வலைக்குள் சிலந்திக்கூட்டில் அகப்பட்ட பூச்சியினம் போல் சிக்கி இருக்கின்றான். எனவே அதில் அகப்பட்ட அவன் மீண்டிருக்க முடியாது. எனவே அவன் இறந்ததற்கு ஊழ் காரணமாக இருந்திருக்கிறதேயொழிய அவன் உள்ளத்தில் ஏற்பட்ட தடுமாற்றமோ, அல்லது பாண்டியன் உள்ளத்தில் ஏற்பட்ட தடுமாற்றமோ காரணமில்லை என்பது தெளிவு.

ஐ......ய......கோ ?

பல்கலைக்கழக விரிவுரையாளர் ஒருவர் மாணவனைக் கேட்கிறார்:

''நீ ஏன் என் விரிவுரைக் குறிப்புகளை எழுதாது இருக்கிறாய்?"

''தேவையில்லை, சேர். எனது தந்தைக்கு முன்பு நீங்கள் அளித்த இதே குறிப்புகள் என்னிடமுள''

பத்தினி எனும் பரல்

சிலப்பின் இன்னொரு புறம் உரைசால் பத்தினி என்னும் பரல் ஒலிக்கின்றது. ஆசிரியர் இளங்கோ உரைசால் பத்தினி என்று ஒருமையில் கண்ணகியைக் குறிப்பிட்டாரே ஒழிய மாதவியையோ, பாண்டிமாதேவியையோ குறிப்பிட்டாரில்லை. ஆனால் சிலம்பினை நுணுகி ஆராயுமிடத்து கண்ணகியோடு மாதவி, பாண்டிமாதேவி ஆகியோரும் உரைசால் பத்தினியராக விளங்கி இருக்கின்றனர் என்பது தெளிவு. ஆசிரியர் தன் தொடர் நிலைச் செய்யுளின் தலைவியாகக் கண்ணகி விளங்க வேண்டும் என்ற நோக்கில் உரைசால் பத்தினியென்று கண்ணகியை மட்டும் கருதி இருக்கலாம். எந் நூலிலாவது ஒருவரைத் தலைவராகவோ, தலைவியாகவோ காட்டுவதற்கு அவருடன் சேர்ந்த, நிகர்த்த மற்றப் பாத்திரங்களின் பெருமையினையோ, சிறப்பினையோ மிகைபடுத்திக் கூறுது விடுவது வழக்காக இருந்தமையால் ஆசிரியர் இளங்கோவும் இதே வழியை நோக்கி இருக்கலாம்.

இளங்கோ காட்டிய உரைசால் பத்தினி, கற்புக்கடம் கண்ணகியை முதலின் நோக்குவது சிறப்புடைத்தானது. மங்கலமாக மண வாழ்க்கையுடன் ஆரம்பமாகும் கண்ணகி — கோவலன் வாழ்க்கையின் ஆரபக் கட்டத்தை காட்ட வந்த புலவர்,

''தயங்கிணர்க் கோதை தன்னொடு தருக்கி
வயங்கிணர்த் தாரோன் மகிழ்ந்துசெல் வுழிநாள்"

என்று கூறும் போதே ''தயங்கிணர்க்கோதை" என்று கண்ணகியைக் காட்டி விடுகின்றார். இதே கட்டத்தில் மேலும் கோவலனே கண்ணகியின் பண்பினை, அவள் சிறப்பினை,

''மாசறு பொன்னே வலம்புரி முத்தே
காசறு விரையே கரும்பே தேனே" என்று கூறுவதன் மூலம் எடுத்தியம்புகின்றான்.

''அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது'' என்று பொய்யாமொழிப் புலவர் புகன்றரே, அதே இல்லறச் சிறப்புக்கு இணையாக இத் தம்பதிகள் வாழ்ந்தனர். இல்லறத்தில் மட்டுமா கண்ணகி சிறப்புக் கண்டாள் இல்லை, சிலம்பில்தான் தோன்றும் ஒவ்வொரு கட்டங்களிலும் சுடர் விட்டுப் பிரகாசிக்கின்றாள்.

பிறந்தகமான காவிரிப்பூம் பட்டணத்தில் மட்டுமின்றி, பைந் தமிழ் பாண்டி நாட்டில் மட்டுமின்றி, தெய்வமாகும் சேர நாட்டில் மட்டுமின்றி, காட்டில் வாழும் வேட்டுவரிடையேகூட அவள் பெருமை சாற்றப்படுகின்றது. வேட்டுவரியின் கண் சாலினித் தெய்வம் அவளை வாழ்த்துகின்றது.

''கொங்கச் செல்வி குடமலையாட்டி
தென்றமிழ்ப் பாவை செய்த தவக்கொழுந்து
ஒருமாமணியாய் உலகிற் கோங்கிய
திருமா மணி......" என்று போற்றுமிடத்து கண்ணகி தமிழ்

நாட்டின் ஒப்பற்ற சுடராகின்றாள். அது மட்டுமின்றி உலகம் இவளைப் பெற என்ன தவம் செய்ததோ என்று உலகமே பெருமைப்படும் படியாக உள்ளது.

கண்ணகி கோவலனுடன் மதுரையை நோக்கிச் செல்கின்றாள். அவளுடைய மென் அடிகளைப் போல மண் மகள் கூட முதலில் அறியவில்லை அவ்வடிகள் நோக, தன் வருத்தத்தைப் பெரிதாகக் கருதாது, தன் காதலன் துயர் கண்டு தன் துயரைப் பெரிதாகக் கருதாது, அவன் பின் செல்கின்றாள். வெயிலின் கொடுமையோ வாட்டுகிறது, நா வரள்கிறது, இத்துயர்களையெல்லாம் பொருட் படுத்தாது அப் பூங்கொடி செல்கின்றாள். இவ்விடத்து இளங்கோ,

''கற்புக்கடம் பூண்ட இத்தெய்வமல்லது
பொற்புடைத் தெய்வம் யாங்கண் டிலமால்'' என்று கவுந்தி யடிகள் வாயிலாக கற்புக் கடமாகக் காட்டியது பொருத்தமுடைத்தே.

''வானம் பொய்யாது வளம் பிழைப் பறியாது
நீணில வேந்தர் கொற்றம் சிதையாது
பத்தினிப் பெண்டிர் இருந்த நாடென்னும்'' என்று கூறுவ தன் வாயிலாக வெளிப் படையாக பத்தினிப் பெண்ணென உணர்த்தி விடுகின்றார். கண்ணகி அரசனும் காடும் வாழக் கூடக் காரணமாக விளங்குகின்றாள் என்று கூறுவதன் மூலம், வலியுறுத்தப் படுகின்றது.

மதுரையை அவள் எரித்ததை நோக்கு மிடத்து அங்கு அவள் கற்பின் திண்மை, தமிழ் நாட்டுப் பெண்டிர் பெருமை மேலோங்கி நிற்கக் காணப்படுகின்றது. மதுரையை எரிக்குமுன் அவள் கூறும் ஒவ்வொரு வஞ்சின வசனங்களிலும் அவள் பெருமை ஒலிக்கின்றது



குடும்பி: என் மகன் வேலை கிடைத்த சந்தோஷத்தில் எல்லோருக்கும் சாப்பாடு போடுகின்றான்.

குடை: அப்படியா! என்னவேலை?

குடும்பி: சரவண பவானில் சப்பளையராக இருக்கிறான்

குடை: ! ! ! ! !

''பட்டாங்கி யானுமோர் பத்தினியே யாமாகில்
ஒட்டே னரசோ டொழிப்பேன் மதுரையு'' மென்று சூழுரைத்த அவளை ஒரு பத்தினிதான் – கற்புக்கரசி தான் என்பதை ஏற்பதுபோல் மதுரை மாநகரில் பற்றி எரிந்த தீச்சுடரின் ஒவ்வொரு பொறியும் பலமாய் தெறித்துப் போயின.

இவ்வண்ணம் உரைசால் பத்தினியாகக்கண்ணகி விளங்குவதுபோல் மாதவியும் விளங்குகின்றாள் என்பதை மறுப்பதற்கில்லை. கோவலன் இறந்தபின் அவள் கொண்ட துறவுக் கோலம் அவள் தூய உள்ளத்தை பரத்தையர் குலத்தில் பிறந்தும் ஒருவனுக்காக வாழ்ந்த தனித் தன்மையை பறை சாற்றுவது போல் இருக்கின்றது. மேலும் தான் மட்டும் துறவியானதோடு நில்லாது தன்மகள் மணிமேகலையைக் கூட அத்துறைக்கு இழுத்து மக்கள் நன்மைபெற வழிவகுக்கிறாள். சிலம்பின் இணைக்காப்பியமான மணிமேகலையின் கண்,

''காதல ரிறப்பிற் கனையெரி பொத்தி
யூதுலைக் குருகி னுயிர்த்தகத் தடங்கா
தின்னுயி ரீவ ரீயாராயி
னன்னீர்ப் பொய்கை னளியெரி புகுவர்
நளி யெரி புகாஅ ராயி னன்பரோ
டுடனுறை வாழ்க்கைக்கு நோற்றிடம் படுவர்
பத்தினிப் பெண்டிர்" (ஊர: 42-48) என்று பத்தினிப் பெண்டிரின் நிலையைக் கூறும் மாதவியைக் கோவலன் இறந்ததும் துறவிக் கோலத்தில் காணுமிடத்து அவளை உரைசால் பத்தினியாகக் கொள்வதில் தவறுண்டாகுமா?

கண்ணகி கோவலனைப் ''போறறு ஒழுக்கம் புரிந்தீர்'' என்று ஒரு முறையாவது குற்றம் சாட்டுவதுபோல் பேசி இருந்தாள், அது கூட மாதவியிடம் காணப்படவில்லையே. இது மட்டுமா, கோவலன் தன்னை விட்டு பிரிந்ததும் மீண்டுவரும்வரை அவனை இணைக்க முயற்சிக்காத நிலையில் கண்ணகியைக் காண்கின்றோம். ஆனால் மாதவியோ தன் காதலனைத் தன்னோடு இணைக்க தூதுக்கு மேல் தூது அனுப்புகிறாளே. இவ்விடங்களிலெல்லாம் கண்ணகியைவிட மாதவி உயர்ந்தவளாகும் ஓர் தன்மை துலங்கவே செய்கின்றது.

மேலும் புறஞ்சேரி இறுத்த காதையின்கண் மாதவிக் கொடிக்கு உதாரணமாக வந்து பெருமை பெறுகிறாள். கோவலன் அவளைவிட்டுப் பிரிந்த பின்னர் அவள் அடைந்த துயரத்தை எவ்வகையில் காட்டினும் முடியாது, இவ்வகையிலாவது காட்டுவோம் என நினைத்து இக் கதையின் கண்காட்ட முற்பட்டார்போலும். கௌசிகன் என்பன்வெயிலின் வெம்மை தாளாது, வதங்கிய நிலையில் இருந்த மாதவிக் கொடியை பார்த்து,

''கோவலன் பிரியக் கொடுந்துய ரெய்திய
மாமலர் நெடுங்கண் மாதவி போன்றிவ்
அருந்திறல் வேனிற் கலர்களைந் துடனே

வருந்தினை போலுநீ மாதவி" என்கின்றான். இதிலிருந்து மாதவி கோவலன் பிரிந்ததும் அடைந்த துயரின் பிரதிபலிப்பைக் கண்டு தெளியலாம். மாதவிக் கொடி போல் வாடி வதங்கிய மாதவியின் மனப்பான்மையை அவள் தூய உள்ளத்தை, பத்தினித் தன்மையை மேலும் வேறு நிலைகளிலும் காட்ட வேண்டிய அவசியம்தானு?

சிலம்பொலித்த உரைசால் பத்தினி என்னும் பரலில் கண்ணகி மாதவி மட்டும் சுடர் விடவில்லை, பைந்தமிழ் வேந்தன் பட்டத்து ராணி, பாண்டிமாதேவி கூடத்தான் சுடர் விடுகின்றாள். கணவன் இறந்ததும் உடன்கட்டை ஏறிய இந்தக் கற்பரசி சிலம்பினை மட்டும் இறக்கச் செய்யவில்லை, பண்டைய தமிழகத்தின் பத்தினிப் பெண்டிர் பெருமையின் இலக்கணமாகவும் திகழ்கின்றாள். மாதவி பத்தினிப் பெண்டிர்பற்றி,

''காதல ரிறப்பிற் கனையெரி பொத்தி
யூதுலைக் குருகி னுயிர்த்தகத் தடங்கா
தின்னுயிரீவர்'' என்று கூறிய வரைவிலக்கணத்திற்கு பொருளாக விளங்குகின்றாள். எனவே பாண்டிமாதேவியையும் உரைசால் பத்தினி என்று கூறுவது பொருத்தமுடையதே.

இவ்வண்ணம் ''தமிழ்த் தாயின் திருவடிகளுக்கு இளங்கோவடிகள் அணிந்த சிலம்பு இது' என்றும். ''சிலப்பதிகாரம் என்றோர் மணி ஆரம்படைத்த தமிழ்நாடு'' என்று பாரதியாராலும் போற்றப்பட்ட சிலம்பின் கண் ஒலித்திடும் பரல்களான ஊழ்வினையும், உரைசால் பத்தினியும் அறிந்திடும் ஒவ்வோர் உள்ளத்திலும ஒலித்துக் கொண்டே இருக்கின்றது.

★


உங்கள் அச்சுவேலைகள்

★ தமிழ்

★ සිංහලම්

★ ENGLISH

★ संस्कृतम्

எந்தமொழியில் செய்யப்பட வேண்டும்?

ஆசீர்வாதம் அச்சகம்

32, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

அல்லது

61, பெரியகடை ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்

என்ற விலாசத்தில் விசாரியுங்கள்

சிறுகதை

# உண்மை சுடும்!

பூரணி

''புறப்படு மனமே! காலம் போக்கினுய் தினமே...''

பாடலுக்கேற்பக் குதித்துக் குதித்து ஆடியபடி வந்தான் சீராளன்.

''என்ன சீராளா? பாட்டும் கூத்துமாய்? தாண்டகவேந்தன் அப்பர் வழியிலே கிளம்பிவிட்டாயோ?''

எதிரே கேள்வியுடன் வந்தான் மாணிக்கம்.

''ஓ! நீங்களா மாமா! நான் சும்மா... அப்படி...'' முகத்தில்வெட்கம்கவிழத் தயங்கி நின்ருன் சீராளன். குனிந்த பார்வை மாணிக்கத்தின் கால் விரல்கட்டில் படிந்தது.

''என்ன மாமா காலிலே கட்டுப்போட்டுக்கொண்டிருக்கீங்க?''

''அதுதான் பாரடா, நேற்றுப் பகல் ஒரு கல் இடித்துவிட்டது. நகம் பிளந்துபோச்சு...... அட! உனக்குச் சிரிப்பாயிருக்கிறதோ?''

சீராளன் சிரித்தான்,

''என்ன மாமா நீங்கள் கல் இடித்து விட்டதென்கிறீர்கள்?'' அவன் மீண்டும் சிரித்தான்.

''நீங்கள் கவனமில்லாமல் நடந்து கல்லிலே போய் மோதிவிட்டு இப்போ கல் மீது பழி போடுகிறீர்களே? ஏன் மாமா? கல் உங்கள்காலைத்தேடி வந்ததா என்ன?''

''டேய்! நீ பெரிய வாய்சாலக்குக்காரனடா! பத்துவயதுப் பிள்ளை மாதிரியாகவா பேசுகிருய்? உனக்கு அளவு மீறிய...''

''மாமா! அறிவுக்கும் வயதுக்கும் சம்பந்தமில்லை, தெரியுமா உங்களுக்கு?''

''அட! எனக்கெப்படித் தெரியும்! உனக்குத்தான் அந்தப் பெரிய தத்துவார்த்தங்கள் எல்லாம் தெரியும். நீ பெரிய அறிவுலக மேதையில்லையா?''

''கேட்டால் .. என்னமாமா கேலி பேசுறீங்க? நான் போகிறேன், அம்மா தேடுவாங்க.''

அவன்சிட்டாய்ப்பறந்துவிட்டான்.

''அடேயப்பா! என்னபேச்சுப் பேசுகிருன்! பத்துவயதிலே...... தாங்காது போ!''

முணுமுணுத்தவாறுமாணிக்கம் நடக்கிருன். அவன் மட்டுமா இப்படி வியக்கிருன்? அறிந்தவர் எல்லோருமே...

''சீராளா...ஆ...!''

''ஒலிபெருக்கி கெட்டது...!'' சீராளன் வந்தான்.

''ஏன் அக்கா?''

சுந்தரி கணக்கு நோட்டை மூடிவிட்டுப் புத்தகத்தைத் திறந்தாள்.

''சீராளா! இதோ இந்த மீட்டல் பயிற்சியிலே பன்னிரெண்டாவது கணக்கு எனக்குப் புரியலே...''

''எங்கே? இதுவா?''

தன் பக்கம் புத்தகத்தைத் திருப்பினுன் சீராளன். அடுத்த

சில நிமிடங்களில் சுந்தரிக்கு ஏற்பட்ட சந்தேகம்தவிடுபொடி!

''நன்றி சீராளா! தயவு செய்து இந்த இலக்கியப் பாட்டிற்கு நயம் எழுதச் சொன்னாரே சேர்... அதையும் கொஞ்சம்..." அதுவும் கொஞ்ச நேரம்தான்.

''அப்போ, நான் போகட்டுமா?''

''ரொம்ப நன்றி! போய் வா.''

சீராளன் வாசலைத் தாண்டியதும் கமலம்—சுந்தரியின்தாய்—கேட்டாள்.

'ஏண்டி, உன்னைவிட மூணு வயசு சின்னவன். அவனுக்கு இவ்வளவு மூளையிருக்கு, நீ அவன்கிட்டே சந்தேகம் கேட்கிற அளவு அசடாயிருக்கிறியே?''

''நான் மட்டுமில்லேம்மா! எங்க வகுப்பிலே உள்ள எல்லோருமே அவனுக்குக் குறைஞ்சவங்க தான்! அவனுக்கு 'மார்க்'குப் போட ஆசிரியர்களே திண்டாடுறுங்கண்ணு பார்த்துக்கொள்ளுங்களேன்!''

"அப்படியா? அது வாழுறதுக்கு இல்லே... இந்த வயசிலே இப்படி ஒரு வேகமா?''

கமலம் பெருமூச்சுவிட்டாள்.

''இங்கே வா, இங்கே வா" காதைப் பிடித்துச் செல்லமாகத் திருகியபடி தன் அருகில் இழுத்தார் வகுப்பு ஆசிரியர் மகாலிங்கம்.

'ஆ... வலிக்கிறது ஸார்... விடுங்க......'' வளைந்து நெளிந்து நின்றுன் சீராளன்.

''நீ சாகப் போகிருயடா!"

சிரித்தபடி அவன் கன்னத்தில் தட்டுகிருர் ஆசிரியர். வகுப்பிலேயே மிகவும் வயது குறைந்த சிறுவனை சீராளனிடம் அவருக்குத் தனியான பாசம். அத்துடன் அவனது நுட்பமான அறிவாற்றலில ஒரு வியப்பு கலந்த பெருமை. அவனைச் சீண்டி வேடிக்கை பார்ப்பதில் அவருக்கு எப்போதுமே ஒரு தனி விருப்பம். அவர் மீண்டும் அதே குறும்புச் சிரிப்புடன் கூறினுர்.

''நிச்சயமாய்...... நீ சாகப் போகிருயடா!''

''உண்மைதான் ஸார்! நான் மட்டுமா? பிறந்திருக்கிற எல்லோருமே, என்ருவது ஒரு நாள் சாகத்தானே...''

''பார், பார்! வாயைப் பார்!''

ஆசிரியர் மகாலிங்கம் அவன் கன்னத்தைப் பிடித்துக் கிள்ளினுர். அவன் துள்ளிக்குதித்தான்.

'ஓ ஸார் வலிக்கிறது!''

''ஏன் மிஸ்டர், மாலி! நீங்கள் ஏன் அவனுக்கு யமலோக டிக்கட் கொடுக்க ஆசைப்படுறியள்?''

மற்ருெரு ஆசிரியர் புஷ்பநாதன் கேட்டார்.

''பின்னே பாருங்களேன்; இந்த முறையும் வகுப்பேற்றப் பரீட்சையில் இவனுடைய விடைத்தாள்களை... ஏன் நீங்கள் கூட இலக்கியம், சமயம் எடுத்தீர்கள்தானே?"

''ஓமோம் இவனுக்குத்தான் அதிக புள்ளிகள். ஒன்றில் தொன்னூற்றி ஒன்பது... மற்றதிலேயும் அந்தக் கணக்குதானுக்கும்... ஒரு எழுத்துப்பிழை, சொற்பிழை...

ஊஹ்ஹூம் கிடையாது! நூற்றுக்கு நூறுதான் கொடுக்கவேண்டும்.."

''அதைத்தான் நானும் சொல்கிறேன். ஏழாம் வகுப்புக் கேள்விகளைக் கேளுங்கள் டக் டக் கென்று பதில் சொல்வான்."

''இப்படித்தான் பாருங் கோ...''

ஆசிரியர்களின் பேச்சுத்திசை திரும்பியது.

சீராளன் வகுப்பறைக்கு நடந்தான்.

விடுமுறை முடிந்து பாட சாலை திறந்தாயிற்று. ஆறும் வகுப்பில் ஒரே அமைதி. சித்தி பெற்றவர்களிடத்தில் மகிழ்ச் சியைக்காணோம். எல்லோருமே ஒருவித ஊமைச் சோகத்துள் ஆழ்ந்தவர்களாய்த்தான் இருக் கின்றனர். ஏன்? வகுப்பில் நுழைந்த ஆசிரியர் மகாலிங்கம் அதேகேள்வியுடன் வகுப்பை நோட்டம் விடுகிறார். எல்லோ ரும் எழுந்து நின்று மரியாதை செலுத்தும்போது, கண்ணிலும், உதட்டிலும் கபடமற்ற புன் னகை ஒளி பிரகாசிக்க நிற்கும் அவன் எங்கே?

''சீராளன் இறந்து போய் விட்டான் ஸார்!''

ராசமணி கண்கலங்கியபடி கூறுகின்றான்.

''என்ன?" ஆசிரியர் அதிர்ந்து விட்டார்.

"ஆம் ஸார்! லீவுக்கு அவன் பெரியப்பா வீட்டிற்குப் போய் இருந்தான். திரும்பிவந்த இரண்டு நாளிலே திடீர்க் காய்ச்சலில் படுத்தவன்தான், மூன்று நாள் தான்ஆகிறது. நான் உங்களுக்கு, ஊருக்குக் கடிதம் போட்டேன் நேற்றுத்தான்........." ராசமணி தொடர்ந்து பேசியது ஆசிரியர் காதில் விழவில்லை. அவர் மேசை யில் முகம் புதைத்து அழுது கொண்டிருந்தார். மனம் 'ஓ' வென்று அலறியது..

''பாவி நான் போட்ட சாபம்தான். என் வாக்குத்தான் பலித்து விட்டது! ஐயோ, சீராளா......"

அவர் மட்டுமா அழுதார்? சுந்தரியின் அம்மா கூடத்தான் ஆற்றாமையுடன் பிரலாபித்தாள்.

''நாசமாப்போன காலனுக் குக் கண்ணே கிடையாதா! அட! ஆண்டவனே! அந்த மாதிரிப் பிள்ளை யாருக்குக் கிடைக்கும்? அது அறிவும் அழகும், அடடா, யாரு கண்ணு பட்டுச்சோ!''

மாணிக்கம் தன் சக நண்ப னிடம் கூறிக் கண் கலங்கினான்;

''அந்தப் பையன் அற்புத மானவன் மணி. இப்படி அநி யாயமாகப் போவதற்குத்தானோ என்னவோ அவன் அப்படி நுண் ணறிவாளனாக விளங்கினான். அப்பப்பா! என்ன துடிப்பு! என்ன தெளிவு! அவன் பேச்சும்! நடையும்......... எல்லாமே போ யிற்று...ம்... பெரிய கொடுமை, இந்த இழப்பின் அதிர்ச்சியி லிருந்து அவனைப் பெற்றவர்கள் மீள்வதே கடினம்தான்......''

ஓ! என்ன மனங்கள்! சதை யும், இரத்தமும், உயிரும் உணர் வுமாய் இருந்த போது வியப்பு என்றும், வேடிக்கை என்றும் கூறிய அந்த வார்த்தைகள் உண் மையாகிய போது மாத்திரம் ஏன் அதையும் விளையாட்டாக இர சிக்க முடியவில்லை?

மனிதருக்குப் பேசுவதுதான் எவ்வளவு எளிதாக இருக்கிறது! ஆனால் அவை செயலுருவம் பெறும்போதோ... அதனால்தான் 'உண்மை சுடும்' என்று அறிந்த வர்கள் கூறினர் போலும்!

## ஓடி வாடா கண்ணு!

அல்வை கோ. தர்மகுலசிங்கம்

ஓடிவாடா கண்ணு! ஓடிவாடா! — என்
உள்ளம் களிக்க இங்கே ஓடிவாடா!
பாடிவாடா கண்ணு! பாடிவாடா! — பசுப்
பாலும் புளிக்க இங்கே பாடிவாடா!
ஆடிவாடா கண்ணு! ஆடிவாடா! — நன்று
ஆடும் மயிலும் தோற்க ஆடிவாடா!
கூடிவாடா கண்ணு! கூடிவாடா — உந்தன்
கூட்டுடனே கண்ணு! இங்கே கூடிவாடா!
தேடிவாடா கண்ணு! தேடிவாடா! — இனிய
தமிழ் மொழிந்தே இங்கு தேடிவாடா!
நாடிவாடா கண்ணு! நாடிவாடா! — எந்தன்
நாளம் துடிக்கி திங்கே நாடிவாடா!
மூடிவாடா கண்ணு! மூடிவாடா! — செய்த
முனகு எல்லாம் கண்ணு! மூடிவாடா
சூடிவாடா கண்ணு! சூடிவாடா! — நல்ல
சூடும் குணங்க ளெல்லாம் சூடிவாடா.

---

## பருவமும் பார்வையும்

'சேந்தன்'

கூழைச் சுருண்முடிக்கக் கூடா திளம்பேதை
ஏழைப் பருவத்தா ளினி தாட அப் பார்வை
கொலையூறுங் கண்ணுடையாள் கொண்டை மலர் சூடி
அலைவு கொளப் பெதும்பையெனு மவள் பார்த்தா ளப்பார்வை
வரிக்கண் நெடு நோக்கி வனமுலை விம்மலுற
கருங்குழலி மங்கை யுயிர் கருக்கிடுமா மப் பார்வை
தாளை யரவிந்தந் தான் வணங்கு மவ்வரிவை
காளை தலைவணங்கக் கண்வீசு மப் பார்வை
கொம்மை வருமுலையாள் குழை நோக்குக் கண்ணுடையாள்
செம்மல் உயிருண்ணுந் தெரிவையளா மப் பார்வை
வாரி முடிகோதி வாகா யணி பூண்ட
பேரிளம் பெண்ணுள் பெருநோயா மப் பார்வை.

# கனவுகள் மாறும்

திருமணம் சொர்க்கத்திலே, நிச்சயிக்கப்படுகிறது எனச் சொன்னால், காதல் எங்கே நிச்சயிக்கப்படுகிறது ?

கனவுப் பூக்கள் மண்டிய இனிய இளமையின் சுந்தர இதயங்களிலே என்கின்றீர்களா? காதல் நிச்சயிக்கப்படுவதும் கூட சொர்க்கத்திலேதான் என்றூர்கள் அவர்கள்.

மோகன் -- ஆனந்தி.

காதலுக்கு எத்தனை வித மான இனிய அர்த்தங்களுண்டோ அத்தனைக்கும் கர்த்தாக்கள் தாங்களேதானென்று அவர்களிருவரும் நினைத்தார்கள்.

அழகழகான தங்களின் ஆயிரமாயிரம் நினைவுகளே அற்புதக் காதலின் ஜீவனாக நம்பினார்கள்.

முடிவற்ற கனவுகளின் விளிம்பற்ற விஸ்தீரணத்தையே கூட தமது காதல் சாம்ராஜ்யத்தின் ஒரு சிறு பகுதியாகத்தான் கொண்டார்கள்.

அந்த நாளின் சுந்தரம். அந்த நாளின் யௌவனம். அந்த நாளின் சிங்காரம். அப்பப்பா...!

வாசமில்லாத மலர் ஒன்றையாவது அவர்கள் அன்று கண்டதில்லை; காண விரும்பவுமில்லை.

அவர்கள் தேடியது, உணர்ந்தது, பூரித்தது எல்லாமே மென்மை கனிந்த காந்தர்வ இதழ்கள் தான்.

வண்ண வண்ணப் பூக்கள். அழகழகான நினைவுகள். முத்து முத்தான காலங்கள். அத்தனையும் எழிலார்ந்த காதலின் நாட்கள்.

அந்தச் சுகானந்த நினைவுகள்............

''ஆனந்தி நமக்கு இரண்டிரண்டு இதயங்களிருந்தால் எவ்வளவு நல்லது?"

''ஏன் மோகன், அதனால் தானே நம் இதயங்கள் எப்போதும் சேர்ந்தே இருக்கின்றன.''

''அதற்கில்லை ஆனந்தி...... உன்னை நான் நினைத்து நினைத்து இருப்பதற்கு ஒரு இதயம் மட்டும் எனக்குப் போதவில்லை."– இதைக் கேட்டுத் தன் இதயத்தையே கொய்து மோகனின் நெஞ்சுக்குள் வைத்து விடுவதைப் போல ஆனந்தி அவனின் தோள்களைத் தழுவிப் பூரிப்பாள்.

''பகல் நேரத்தில் இந்தக் கடல் இருக்கின்றது என்ற உணர்வே இல்லையே ஏன்......?''

''அப்போதெல்லாம் நீ தனியே வந்திருப்பாய்; நம்மைக் கை கோத்துக் காணும் மாலை வேளையில்தான் கடலும் கை கொட்டி மகிழ்கிறது" – மோகனின் இந்தச் சுந்தர நினைவை அணைத்துக் கொள்வதைப் போல அவனின் நெஞ்சில் விழுந்து சிரிப்பாள் ஆனந்தி.

''......மோகன். இந்தப் பூஞ்சோலையில் நிறைந்திருக்கும் இனிய தென்றலிலெல்லாம் நம் நினைவுகள் கரையும்வரை நம் காதலைப்பற்றி உரக்கப் பாடிக் கொண்டேயிருக்க வேண்டும் போலிருக்கிறது........"

அவளின் குறுகுறுத்த கண்களுக்குள் தன் பார்வையை

மு. கனகராசன்

செலுத்தி பதிலாக ஒரு 'உம்' கொட்டி அவளின் 'மெத்'தென்ற கன்னத்தில் செல்லமாகக் கிள்ளு வான்.

அவளோ தொடர்ந்து "......அப்போது அந்த இன்பக் காற்றில் கலந்து நம் காதல் இந்த உலகத்தையே சுற்றிப் பவனி வருமல்லவா?" என்பாள். — இந் தக் காந்தர்வ நினைவுக்குத் தன் னையே அர்ப்பணித்து விடுவதைப் போல ஆனந்தியின் மடியிற் புரண்டு மோகன் ஆனந்திப்பான்.

ஓ!......... கவிதை மயமான காதலின் நாட்களே......!

எல்லாம்.........?

ஒரு நிமிடம் கண்களை மூடு கிறாள் ஆனந்தி. மூடிய அவளின் இமைகளை ஒரு சூடான நெடு மூச்சு திறக்கிறது.

எல்லாமே வெறும் கானல் தானா?

"ப்ளப்"-ஒரு சின்னவெடிப்பு இதயத்தில்தான்.

அந்த இதயத்தில் அன்றைக் கிருந்த வண்ணங்கள் இப்போது இல்லைத்தானா ?

எல்லாம் ஒரே வெள்ளை.


வெள்ளையும் ஒரு வண்ணம் தானே ?

ஆமாம்! எல்லா வண்ணங் களையும் தன்னுள் ஐக்கியப்படுத் திக் கொண்ட வெள்ளை நிறம் தான்.

அவள் எழும்புகின்றாள். அப் போது அருகிலிருந்த கோட். ஸ்டான்டி'ன் முனை 'ணங்' என அவளின் தலையில் அடித்து விடுகி றது. நெற்றியின் அந்த வலது ஓரத்தில் ஏற்கனவே இருந்த தழும்பின் மீதே இப்போதும் காயம்பட்டு விட்டதால் இரத் தம் கசிகிறது.

அந்தத் தழும்பு......ம்! புண் ஆறிவிட்டாலும் தழும்பு என்றும் மாறுவதில்லைத்தான்.

தழும்பிலேயே மீண்டும் புண்ணா ?



அந்தத் தழும்பு?.........

'ஐயோ மோகன், நீங்கள் ஏன்தான் என்னை மீண்டும் சந்தித்தீர்கள் ?..............'

ஒரு நாள், கால்பேஸ் கரையில்; மோகனும் ஆனந்தியும்... ஹா! ஆஹஹா...

தந்தத்தின் செழிப்பொத்த தளிர் மேனித் துடிப்புகளையெல்லாம்

காந்தர்வ நெஞ்சங்களின் கவின்மிகுகற்பனைகளையெல்லாம்,

இளமையின் கனவுகளிற் தோய்த்தெடுத்த பூமணக் கவிதைகளாக்கி,

அத்தமிக்கும் ஞாயிறும் அழகைச் சிந்தும் திங்களும் இணைந்து பரப்பும் சந்தன ஒளியில்,

நீலக்கடல் விசிறியடிக்கும் வெள்ளலைகளின் மெல்லியப் பூந்தூறலில்,

கண்கள் மயங்க, கரங்கள் பிணங்க, கால்கள் தயங்க, கனவுகளையே நினைந்து நினைந்து,

வானில் நடந்து, தென்றலிற் தவழ்ந்து, நினைவில்அமிழ்ந்து பையப் பைய நகர்ந்து வருகின்றார்கள்.

"ஆனந்தி,! கடலும், அலையும், நிலவும், நினைவும் எவ்வளவு ரம்மியமாகிறது......"

"ஆமாம் மோகன், இளமைக்கும், கனவுக்கும் துணையாகத்தான் மாலையும் தென்றலும் வருகிறது போலும்......"

"ஆ...னந்தி"

"ம்......மோகன்"

"மோகன், வாங்க அந்தப் பாறைக்குப் போவோம்."

இருவரும் இறங்கிக் கடலோடு புரளும் மணலில் நடக்கின்றார்கள். ஆனந்தி அந்தப் பாறையில் ஏறுகிறாள். எழிலார்ந்த அவளின் மேனியை தழுவிக் கொள்ளவென்று பொங்கி வருகிறது ஒரு பெரிய அலை. அது அந்தப் பாறையில் மோதிச் சிதறும்போது ஆனந்தி கால் வழுக்கி விழுகிறாள். தலையில் ரத்தம் கசிகிறது. பதறிப்போன மோகன் தன் கைக்குட்டையால் அவளின் தலையில் ஒரு கட்டுப் போடுகிறான்.

"மோகன், இந்தக் கட்டும் காயமும் என்னவென்று தெரியுமா உங்களுக்கு......"

"ஏய் உனக்கென்ன இந்த நேரத்திலுமா விளையாட்டு ?"

"மோகன் இதுதான் நம் இளமைக் கனவின் சின்னம்" — சொல்லிவிட்டுநிலவோடுபோட்டியிட்டுச் சிரிக்கிறாள் ஆனந்தி.

அன்று ஏற்பட்ட தழும்பிலேதான் இன்று மீண்டும் காயம்... ஐயோ... மோகன் நீங்கள் ஏன்தான் என்னைச் சந்தித்தீர்களோ!

அந்த நாட்களில் மோகனை நினைக்க நினைக்க தன் இதயத்தில் தேனில் தீட்டிய சித்திரங்கள் ஆயிரமாயிரமாயிருக்குமே. இன்றோ மோகனை நினைக்கும் போது அந்த இதயத்தில் எத்தனை விதமான பயங்கரங்கள்......... ?

'மோகன் என்னை நீங்கள் அழித்துவிடுவீர்களா? என் வாழ்வையே பொசுக்கி விடுவீர்களா?'

'மோகன், உங்களை ஏமாற்ற வேண்டும் என்று கனவிலும் நான் நினைத்ததில்லை மோகன்.'

'உண்மைதான் மோகன். அந்த யாழ்ப்பாண ரயிலில் நீங்கள் பிரயாணம் செய்வீர்கள் என்பது எப்படி எனக்குத் தெரியாதோ, அந்த ரயில் மதவாச்சியில் விபத்துக்குள்ளாகும் என்பது எப்படி எனக்குத் தெரியாதோ அப்படியேதான் உங்களை ஏமாற்றவும் எனக்குத் தெரியவே தெரியாது மோகன்.'

'ஆனல் நான் உங்களை வஞ்சித்துவிட்டதாக எத்தனையோ பேரிடம் கூறிவிட்டீர்கள். உங்களை நம்பச் செய்து துரோகம் இழைத்துவிட்டதாகச்சொல்லிச் சொல்லி வேதனைப்பட்டீர்களாம்.'

'இப்படியெல்லாம் கேள்விப்பட்டபோது, அந்த ஆக்ரோசப் பேச்சுக்களையெல்லாம் கேட்டபோது,உண்மையாகவேமோகன், நான் ஆத்திரப்பட்டதேயில்லை. அதிலிருந்து உங்களுடைய காதலைத்தான் நான் புரிந்து கொண்டேன். உங்களின் அந்த ஆவேசப் பேச்சுக்களில் என் மீது உங்களுக்கிருந்த அன்புதான் வெளிப்பட்டது. அந்த உங்களுடைய புனிதமான அன்பைநான் இழந்து விட்டதால் அந்த மகத்தான இழப்புக்காக எத்தனை தடவை நான் என் இதயத்தையே பொசுக்கிச் சொண்டிருக்கிறேன் தெரியுமா......?'

'அந்தத் தீயில்தான் நாம் வேருனோம்.'

'மோகன் நாம் பிரிந்த பாபத்துக்காக என் நெஞ்சத்தையே நான் பொசுக்கிக்கொண்டேன். உங்களை இழந்ததற்காக என்னையே நான் பொசுக்கிக் கொண்டு விட்டபோது என் வாழ்க்கையையே நீங்கள் பொசுக்க நினைப்பது சரியா மோகன்? உங்களால் அப்படி நினைக்க எப்படிமுடிந்தது மோகன்?'

'நினைவுகள்...... அந்தநாட்களில் அவர்களின் காதல் மொழிகளுக்கெல்லாம் கூட தெகிவளையிலுள்ள வண்ண வண்ணப்பட்சியினங்கள் பொருள் சொல்லுமே. மோகனும் ஆனந்தியும் மீண்டும் மீண்டும் சொல்லிக் கொடுக்கும் இனிக்கும் வார்த்தைகளை அந்த மைனுக்களும், கிளிகளும் திரும்பத் திரும்பச் சொல்லுமே. எத்தனை இன்பமான பொழுது போக்கு.'பார்க்'குகளின் மந்தமா

---

## ஏழையும் காரும்

ஒரு பிரான்சியனும் ஆங்கிலேயனும் தங்கள் நாட்டைப் பற்றிப் பெருமையடித்துக் கொண்டனர்.

பிரான்சியன் சொன்ஞன் : எங்கள் நாட்டில் ஏழைகள் கூட கார் வைத்திருக்கிருர்கள்.

அதற்கு ஆங்கிலேயன் : 'எங்கள் நாட்டில் கார் வைதிருப்பவர்களே ஏழைகள் தான் என்று பதிலிறுத்தான்.

— ரமணு

ருதம் எவ்வளவு பசுமையான நினைவுகளையெல்லாம் சுமந்து வந்திருக்கும்? தியேட்டரின் ஸீட்டுகளெல்லாம் இளமையின் ஆசைகளைக் காணப்பொரு மல் எத்தனை ஆயிரம் தடவை தம் கண்களை மூடிக் கொண்டிருக்கும்? அப்பப்பா... அவை எல்லாமே...'

எல்லாமே பிரமை! பிரமை!

'ஆமாம்மோகன். எல்லாமே பிரமைதான். இளமையின் நினைவுகளே பிரமைதான் மோகன். இளமையின் நினைவுகள் மட்டுமா? காதலில் தோற்றவர்களின் வாழ்வே அப்பட்டமான பிரமை தான்.'

'நான் உங்களை வஞ்சித்து விட்டதாகவும், ஏமாற்றிவிட்ட தாகவும் நினைத்துவிட்டீர்களே அதெல்லாம் பிரமையில்லாமல் வேறென்ன?'

'இல்லாவிட்டால் அந்த ரயில் விபத்தில் நீங்கள் இறந்து விட்டதாகத்தான் செய்தி வந்திருக்குமா? நானும் அதை நம்பத்தான் நேர்ந்திருக்குமா? இல்லை நீங்கள்தான் தெய்வாதீனமாகத் தப்பி வந்திருப்பீர்களா?'

'சேச்சே! – அதன் பிறகு நடந்துவிட்டவை............?'

'எனக்குத் தியாகரர்ஜன் கணவராய் வந்ததற்கெல்லாம் லோகாதாயமான சம்பிரதாயம் என்பதைத்தவிர வேறு காரணமே இல்லை மோகன்.'

'எனக்குத் தியாகராஜன் கணவர் என்று சொல்வதிற் கூட பிரமை தட்டுப்படலாம். அது

## அயல்நாட்டுக் ஹாஷ்யம்

பிரான்சியக் கணவன் மிகவும் உணர்ச்சிவசப்படுபவர். ''அவர் தனது மனைவியை முதலில் கைகளில், பின் கழுத்தில் தேளில் முத்தமிட்டுவிட்டு ...........''

''அதேநேரத்தில் அமெரிக்க கணவன் தனது தேனிலவை முடித்துக் கொண்டு திரும்பி விடுவான்'' என்றாள். ஓர் அமெரிக்கப் பெண்.

---

தவறு. தியாகராஜனுக்கு நான் மனைவி எனக் கூறுவதும் ஒன்று தான். ஆமாம் என் வாழ்க்கைக்கு இனி ஒரே அர்த்தம் தான்.'

ஆனந்தி இன்னமும் குழம்பிப்போய்த்தானிருக்கின்றாள். தன் காதலன் மோகனைப் பல வருடங்களுக்குப் பிறகு ஒரு நாள் கண்டதிலிருந்து ஏற்பட்ட அதிர்ச்சி தெளியவே இல்லை.

தியாகராஜனுக்கும் அவளுக்கும் திருமணம் நடந்த பின் ஒரு நாள் ரயில் விபத்தில் மோகன் தப்பி உயிரோடேயே இருப்பதாகக் கேள்விப்பட்டாளே அன்று முதல் அவள் தன் நினைவுகளையே சித்திரவதைப்படுத்திக் கொண்டிருக்கின்றாள். அவற்றையெல்லாம் சிறிது சிறிதாகப் பொசுக்கிச் சாம்பலாக்கி விட்ட பின் – எத்தனையோ வருடங்களின் பின் அவனைகண்டிருக்கிறாள். மோகனை மீண்டும் காணுவதன் சாயலைக் கூட அவள் கற்பனை பண்ணியதும் கிடையாது.

(தொடரும்)




## காட்சி 4

[உரோகிணி ஆற்றங்கரை. ஓங்கி வளர்ந்த தேவதாருவின் நிழலில் அறவாழி அந்தணர் – புத்தர் அபயகர முத்திரையுடன் நிற்கிறார். சாக்கிய மக்களும், கோலிய மக்களும் நிலப் பிரபுக்களும் நிற்கின்றனர்.]

**புத்தர் :** ஓ!... இயற்கையின் புதல்வர்களே!...... நீங்கள் அனைவரும் எல்லாவற்றிற்குமே உரியவர்கள்......... நீங்கள் எல்லாரும் சகோதரர்கள்... உங்களுக்குள் பாகப்பிரிவினையா... இல்லை... இல்லை... அது பாசப்பிரிவினையாகும்...... அன்னையின் கருப்பையில் இருக்கும் இரட்டைக் குழந்தைகள் ஒரே கொப்புள் கொடி வழியே உணவருந்தி உயிர் வாழ்வதுபோல் வாழ்ந்த உங்களிடையே இன்று எதற்காகப் பகைமை... ஏன் இந்தச் சீற்றம்......?

**சாக்கிய பிரபு :** புனிதரே!... உரோகிணியாற்றை நம்பி வாழ்பவர்கள் நாம். ஆனால் அதன் நீர் தற்போதுள்ள காலநிலை வேறுபாட்டால் குறைந்து விட்டது. ஆனால் தேவையோ மிகப் பெரிதாகி விட்டது... அதனால்...

**புத்தர் :** அதனால் உங்களிடையே போர் மூளுவதா?... இதைக் கூற உங்களுக்கே வெட்கமாக இல்லை......... உங்கள் பகுத்தறிவு எங்கே போய் விட்டது?...

**கோலிய பிரபு :** (தயக்க, மௌனம் குலைய) சினேந்திரா......

**புத்தர் :** குழந்தைகளே!...... உங்களை விட்டு இன்னமும் அறியாமை நீங்கவில்லையா...... ஆற்று நீர் குறைந்தால் அதனை உங்கள் விகிதாசாரப்படி பிரித்துக் கொள்வதுதானே!......

**சாக்கிய பிரபு :** (தயக்கத்துடன்) நீரில்லை என்றவுடன் ஏற்பட்ட பரபரப்பில்......

புத்தர் : அதற்காக உங்களிடையே அடித்துக்கொள்வதா? மனிதனின் வாழ்க்கையில் நல்லதும் கெட்டதும் கலந்தே வரும்... நல்ல தைக் கண்டு மகிழும் நீங்கள், கெட்டதைக்கண்டு கலங்கிவிடக் கூடாது... அறிவைப் பறிகொடுத்துவிடக் கூடாது...

கோலிய பிரபு : பகவானே!... எங்களை மன்னித்துக் கொள்ளுங்கள்... நாங்கள் உயிர் வாழுவதற்கு வேறென்ன செய்ய முடியும்?...

புத்தர் : உயிர் உங்கள் ஒரு சிலருக்கு மட்டுமே உரியதல்ல. எல்லா ருக்குமே உரியதல்லவா?... அப்படியிருக்க ஒருவரை ஒருவர் வஞ்சித்து வாழ எண்ணலாமா ?......

சாக்கிய பிரபு : பிரபு... ஒன்றையழித்து ஒன்று வாழ்வதும் உலக நியதி தானே!

புத்தர் : அது நியதியல்ல. அநீதி. அழுக்கில் உழலும் புழுக்கள் கூட, தம் வயிற்றுக்கு எஞ்சியதை விட்டு விடுகின்றன. நாளை என்பதும் எல்லாருக்கும் பொதுவாக இருக்கும்போது, ஒருவருணவைத் தட்டிப் பறிக்கும் நீங்கள் கொள்ளைக்காரர் களா ?

கோலிய பிரபு : சினேந்திரா!... நீங்கள் என்னதான் கூறுகிறீர்கள்?...

புத்தர் : உங்களை அற்பப் புழுவிலும் கேவலமாகக் கூறினால் பொறுப் பீர்களா ?......

கோலியபிரபு : இல்லை.

புத்தர் : அற்பப் புழுவிலும் கீழான குணங்களை விரும்புகிறீர்களா ?...

சாக்கிய பிரபு : இல்லை...... இல்லை......

புத்தர் : அப்படியானால் எதற்குச் சண்டை? வானெங்கும் நிறைந் திருக்கும் கொண்டல், மலையென ஓங்கி நிற்கும் தரை,– இரண் டின் பிணைப்பால் உதிக்கும் அருவியெனும் நீர் – எல்லாமே உலகிற்கே பொதுவெனக் காட்டி நிற்க, பகுத்தறிவு வாதி களான நீங்கள் அதனைக் கூட புரிந்து கொள்ளாமல் போராடு கிறீர்களே ?

கோலிய பிரபு : உயிரின் மேல் உள்ள பேராசைதான் காரணம் பிரபு...

புத்தர் : (சிரித்து) உயிர்... ஆசை... பலவீனங்கள் நிறைந்த மாளிகை யிலே உலவி வரும் உயிர் மூச்சுக்கு ஒன்பது வாசல்கள். எந்தக் கணம்... எந்த வாசலினால் வெளியேறி, மனிதனைப் பிரேதமாக்குமோ யாருக்குத் தெரியும் ? நிலையற்ற உயிரை காக்க முற்பட்டு, உயிரடங்கும் வேளையையே துரிதமாக்கு கின்றீர்களா ?...

சாக்கிய பிரபு : (தயக்கத்துடன்) பிரபு......

புத்தர் : ஆமாம். உயிர் வாழ வேண்டும். அதற்காக உயிரையே பணயம் வைப்பதா ?... ரோகிணியின் தண்ணீருக்கு உங்கள்

உடலில் ஓடும் செந்நீரா பணயம்?... இதனால் தண்ணீரின் தூய்மை கூட களங்கப்பட்டு விடுமே ... ஏழைகளின் உணவைத் தட்டிப் பறிக்கும் எத்தர்களா நீங்கள்......

கோலிய பிரபு : இல்லை.........

புத்தர் : பிறர் நலத்தைச் சுரண்டி வாழும் கயவர்களா நீங்கள்......

சாக்கிய பிரபு : இல்லை.........

புத்தர் : நீங்கள் பெற்ற அன்பான செல்வங்களை நேசிக்கத் தெரியாத இதயமற்றவர்களா நீங்கள் ?

கோலிய பிரபு : சினேந்திரா...... நீங்கள் சொல்வது......

புத்தர் : இன்னுமா உண்மை புரியவில்லை... நீங்கள் ஒவ்வொருவரும் இப்படியே அடிபட்டு இறந்துவிட்டால்... நீங்கள் யாருக்காக... யாருடைய நலனுக்காக போராடுகிறீர்களோ... அவர்கள் நிலை என்னவாகும் என எண்ணிப் பார்த்தீர்களா?...

சாக்கிய பிரபு : பகவானே!.........

புத்தர் : என்னருமைச் செல்வங்களே!... எப்போதும் உங்கள் உள்ளங்களை தூய்மையாக வைத்திருங்கள்......... அகம் காட்டும் பளிங்காக உங்கள் முகமலர்கள் விளங்கட்டும்... அன்பெனும் மகரந்தம் சிந்தட்டும். அப்போது நாட்டில் விளைவது கலகமல்ல... அழுக்காறு அல்ல... மகிழ்வும்... இன்பமுமே நிலவாகச் சிந்தும்.........

கோலியபிரபு : புனிதரே! நாங்கள் அஞ்ஞானத்தால் அறிவிழந்த பாவிகள்......

புத்தர் : குடிமக்களே!... நீங்கள் ஒருவருமே பாவிகளல்லர். உங்கள் மனங்களிலே மயக்க விகாரங்களுக்கு இடங்கொடாதீர்!...... அதற்கு இரையாகி விட்டால் வெயில், பனி, மழைக்கு ஆளான பாறையாக உங்கள் மனம் மாறிவிடும். விகாரப்பட்ட மனதிலிருந்து அன்பெனும் ஒளி பிறக்காது. அதனால் தான்... தூய நீருக்காகப்போராடும் நீங்கள் உடலெங்கும் புண்பெற்று, சீழ் பிடித்து துன்புறுகிறீர்கள். உடலைக் கழுவ வேண்டிய நீருக்காக, உங்கள் உடலில் வழியும் சீழின் நாற்றத்தை மறந்தேவிட்டீர்களா ?

எல்லோரும் : (வணங்கி) பகவானே! எம்மை மன்னித்து ஆசீர்வதியுங்கள்.

புத்தர் : (மகிழ்வுடன்) பகைமையொழிந்து பண்பட்ட நெஞ்சங்களே... நீங்கள் யாபேரும் சகோதரரன்றோ... உங்களிடையே வேற்றுமைகளே எழக் கூடாது. எழுந்தாலும் அவை நிலைக்கக்கூடாது. நிலையற்ற உலகில் இந்த வேற்றுமைகள் மட்டும் எப்படியோ

நிலைத்து விடுகின்றன. என் குழந்தைகளே... நெஞ்சங்களில் அன்பை வளருங்கள். விகாரத்தை அழியுங்கள். இன்பத்தை அடையுங்கள்!... இதுதான் நான் உங்கட்கு வழங்கும் அறிவுரை!.........

எல்லாரும் : அப்படியே ஐயனே!... உங்கள் வாக்கினால் அருள் பெற்றோம். தூய்மையடைந்தோம். துயர் துடைத்தோம்... எங்களையும் உங்களின் புனித தடத்தின் வழியிலே அழைத்த உங்கள் கருணையே கருணை!......

[அப்போது அநுருத்தன், பத்திரிகன், பகு, பிம்பிலன்-முதலான சாக்கியகுல குறு மன்னர்கள் ஆடம்பர தோற்றத்துடன் வருகின்றனர். கூடவே அரண்மனை நாவிதன் — உபாலியும் பணிவுடன், பின்னால் எளிய உடையில் வருகின்றான்]

எல்லாரும் : (பணிவுடன்) சாக்கிய குல தீபமே!... எம்மையும் தங்கள் யாத்திரையில் சேர்த்துக் கொள்ளுங்கள்...

புத்தர் : யாரது?... (திரும்பி) நீங்களா...வருக... இந்தத் துறவியைத் தேடி வந்த நோக்கம்?

அநுருத்தன் : சாக்கிய குலக் கொழுந்தே!... உம் பெருமையையும் உமது யாத்திரையின் தன்மையையும் கண்டு, உலக வாழ்விலே மயங்கிக் கிடந்த எங்களுக்கே உலகின் நிலையாமை புலனாகி விட்டது... ஆகவே தங்கள் பணியில் பங்கு பெறவே வந்துள்ளோம்...

புத்தர் : (சிரிப்புடன்) இன்ப வாழ்வின் நுகர்ச்சியிலே அனவரதமும் ஈடுபட்டுக் கிடந்த நீங்கள், துறவை மேற்கொள்ள விழையும் போதும் உங்கள் ஆடைகளைத் துறக்க மனம் வரவில்லையே, நீங்கள் எங்ஙனம் ஆசையைத் துறந்தவர்களாக முடியும்?

பத்திரிகன் : (நாணித் தலை குனிந்து) அண்ணலே... எங்களைக் கைவிட்டுவிடக்கூடாது. அறியாமை நீங்கி அருளொளி பெறவே வந்தோமன்றி, அருளொளிபெற்று வரவில்லை...

புத்தர் : (சிரித்து) உண்மைதான். ஆனால் எனது பாதை கரடுமுரடானது. கல்லும் முள்ளும் நிரம்பியது. அது நடப்பதற்கு சகிப்புத்தன்மை, பொறுமை, ஐம்பொறிகளின் அடக்கம் அனைத்தும் அவசியமே...

பிம்பிலன் : உண்மைதான். அவற்றையும் பயிற்சியால் ஏற்றுவிடமுடியாதா?...

புத்தர் : பயிற்சி உடலை வருத்தும்... துன்பம் விளைக்கும்.

பகு: நாமறிவோம். எங்களையும் அண்ணல் ஆட்கொள்ள வேண்டும்.

புத்தர் : சரி உங்கள் விருப்பமதுவானால் நாம் மறுக்கவில்லை... போய்... உங்கள் ஆடையை அகற்றி சீவர ஆடை பூண்டு, தலையையும் முண்டிதம் செய்து வாருங்கள்,

நால்வரும் : அப்படியே ஐயனே...!

[போகிறார்கள் பின்னால் நாவிதன் உபாலி போய்த் திரும்பி வந்து புத்தர் முன்னால் நிற்கிறான்]

புத்தர் : (கனிவுடன்) அப்பா!... நீயார்?...

உபாலி : ஐயனே!... நான் தொழிலால் நாவிதன். நாமம் உபாலி...

புத்தர் : அப்படியா? நீ எங்கு வந்தாய்...?

உபாலி : ஐயனே!... சாக்கிய மன்னர்கள் அறவழியேக, அவர்கள் தலையை முண்டிதம் செய்ய என்னை அழைத்து வந்தார்கள்

புத்தர் : இப்போது அவர்கள் எங்கே...?

உபாலி : உடற் சுத்தி செய்ய நீராடப் போயிருக்கிறார்கள்.

புத்தர் : அது சரி... நீ என்னிடம் வந்த நோக்கம்...?

உபாலி : ஐயனே... நானோ குலத்தால் இழிந்தவன்... கடையவன்... பெரிய பெரிய அரசகுமாரர்களெல்லாம் ஐயன் பாதையில் தர்ம நடைபோட, எல்லாவற்றையும் துறந்து வந்துள்ளார் கள்... ஆனால்... நானோ ... எளியவன்......எதனையுமே துறக்க எதுவுமே இல்லாதவன். ஆனால் தங்கள் யாத்திரையில் தொண்டரில் ஒருவனாக வரவேண்டுமென்ற ஆவல் மிக்கவனாக இருக்கின்றேன்...

புத்தர் : (சிரித்து) மகனே!... உலகில் சாதி என்பதே இரண்டுதான் ஒன்று ஆண். மற்றது பெண். மற்றப் பிரிவுகள் மனிதனின் பிரிவுகளல்ல. அவை தொழிலின் பிரிவுகள். தொழில்களில் ஏற்றத் தாழ்வுகளே கிடையாது. ஒவ்வொரு தொழிலும் ஒவ்வொரு நிலையில் மானிட வாழ்க்கையில் இன்றியமையா தன...... தொழில்களில் உயர்வு தாழ்வு பாராட்டுபவர்கள் தொழிலின் பெருமையை, மக்கட் சமுதாயத்தின் கடமையை உணராதவர்கள்......

உபாலி : ஐயனே!... நான் இழிவான தொழிலை மேற்கொள்பவனல் லவா ? அதற்கேற்ற தூய்மைதானே என்னிடம் இருக்கும்...

புத்தர் : மனிதனின் தேவையற்ற முடிகளை அகற்றுகின்ற நீ - இதில் எந்த இழிவைக் கண்டாய்? உன் தொண்டு இல்லாவிட் டால் வாசனைத் தைலங்கள் பூசி அலங்காரம் செய்யும் இவர்கள் தலை முடி சிக்குப்பிடித்து நாறி விடாதா?...... அலங்காரத்துக்கு அலங்காரம் செய்யும் நீ ஒப்பனைக் கலைஞனல் லவா ? தொழிலுடன் கலை இணைந்த உன் சேவை - அழகா னது; ஒப்பற்றது. தூய்மையானது.

உபாலி : ஐயனே!... உங்கள் வாக்கால் உண்மையை உணர்ந்தேன்... ஆனால்... ஆனால்...

புத்தர் : என்ன ஆனால் உபாலி? என்னிடம் உனக்கு அச்சமா?...

உபாலி : இல்லை ஐயனே!... நான் படிப்பு வாசனையே அற்றவன். ஆனால்... தங்கள் தத்துவமும் போதனைகளும் என் வாழ்வின்

பயனை எனக்கு உணர்த்திவிட்டன. என்னையும் தங்கள் கூட்டத்தில் ஒருவனாகச் சேர்த்துக் கொள்வீர்களா?...... எனக்கு இந்த மாயாவாத உலக வாழ்க்கையில் பற்றே ஏற்படவில்லை... ஐயனே!......

**புத்தர் :** (மகிழ்ந்து) உபாலி......... உனது சொற்கள் ஒவ்வொன்றும் உன் உதட்டிலிருந்து வெளியாகவில்லை...... உன் உள்ளத்திலிருந்தே வெளியாகின்றன. உன்னை நான் புரிந்து கொண்டேன். என் போதனைகளையும், கொள்கைகளையும் எனக்குப் பின்னால் போற்றிப் பாதுகாக்க உன்போன்றவர்களாலேயே முடியும்... உபாலி... இன்றிலிருந்து நீயும் என் கூட்டத்தவருள் ஒருவனே?...

**உபாலி :** ஐயனே...

**புத்தர் :** ஆமாம் உபாலி. சென்று உன் உடைகளைக் களைந்து சீவர ஆடை பூண்டு, பிக்குவாகத் திரும்பி வா!...

[உபாலி பிக்குக் கோலத்தில் திரும்ப-அரசர்களும் பிக்குக் கோலத்தில் திரும்புகிறார்கள்]

**பகு :** யாரது இந்தத் துறவி?...

**புத்தர் :** இவர்தான் பிக்கு உபாலி...

**அநுருத்தன் :** (திடுக்கிட்டு) என்ன உபாலியா?...

**புத்தர் :** ஆமாம் ஏன்...?

**பத்திரிகன் :** புனிதரே... அவன்... அவன்...

**புத்தர் :** துறவிகள்... முதலில் வார்த்தைகளை அன்பாகப் பேசப் பழக வேண்டும். நம் கூட்டத்தில் சின்னவன் – பெரியவன் என்ற பேதத்திற்கே இங்கு இடமில்லை. பூர்வாசிரமத்தில் அவர்கள் எப்படியிருந்தாலும், நம் சங்கத்தில் சேர்ந்ததும் எல்லாரும் ஒரு தரத்தினரே. ஒருவரை ஒருவர் மரியாதையாக அழைக்கப் பழக வேண்டும்.

**பிம்பிலன் :** (சமாளித்து) புனிதரே!... இவர் நாவிதனாக...

**புத்தர் :** ஆமாம். அது பூர்வாசிரமத்தில். இப்போது நானும் அவரும் ஒரே தன்மையினர். துறவிகள்......

**பகு :** எங்களை மன்னிக்க வேண்டும் ஐயனே...... எங்களுக்கு இது முதல் பாடம்...

**புத்தர் :** பிக்குகளே!......... நீங்கள் இனி எல்லாரும் இயற்கையின் புதல்வர்கள். உங்களின் வேறுபாட்டிற்கே இடமில்லை.

**நால்வரும் :** (பயபக்தியுடன்) புத்தி ஐயனே!......

[அப்போது இராகுலன் வெகு வேகமாக வருகின்றான்]

**இராகுலன் :** (வணங்கி) ததாகதரே! நின் தாழிணைகட்கு என் அஞ்சலிகள்.

**புத்தர் :** இளைஞனே!... நீ யார்?...

**இராகுலன் :** பூர்வாசிராமத்தில் தங்கள் மைந்தன் இராகுலன்!......

**புத்தர் :** (மகிழ்ந்து) இராகுலனா?... எங்கு வந்தாய். அரண்மனையில் அனைவரும் நலமா ?

**இராகுலன் :** என் அன்னை நலம். தங்கள் தந்தையர் காலமாகிவிட்டனர்.

**புத்தர் :** (சற்று மௌனமாக இருந்து) ஓ! அதுவும் அப்படியா? நீ வந்த நோக்கம்?

**இராகுலன் :** தங்களை அரண்மனை ஆவலுடன் எதிர்பார்க்கிறது புனிதரே!

**புத்தர் :** புத்தருக்கு அது ஏற்ற இடமில்லையே! கட்டுத் தறியற்ற யானை கண்ணிருந்தும் நிலப் பொறியில் விழுமா?...... நான் எதற்காக அங்கு வரவேண்டும். நான் துறவியப்பா... துறவி?

**இராகுலன் :** தங்கள் ஆசியாவது எனக்குக் கிட்டுமா புனிதரே...

**புத்தர் :** நிச்சயம் உண்டு. நீ வேண்டுவது யாது ?

**இராகுலன் :** ததாகதரே! தாங்கள் அரண்மனையிலிருந்தபோது இருந்த பொக்கிஷம் தாங்கள் அரண்மனையை நீங்கியதும் மறைந்து விட்டது. தங்கள் பொருள், தங்கள் செல்வம், மகன் என்ற நிலையில் எனக்குச் சொந்தமல்லவா? அதை எனக்கு வழங்க வேண்டும்.

**புத்தர் :** அவை என் பொருள் அல்லவே ? அநித்தியமான அவை மறைந்ததில் ஆச்சரியமுமில்லை... ஆனால் உன் கேள்விக்கு பொருள் உண்டு. எனது சொத்துக்களில் உனக்கும் பங்குண்டு. என் ஞானச் செல்வத்தில் உனக்கும் பங்குண்டு இராகுலா ?

**இராகுலன் :** கூறுங்கள் ததாகரே!

**புத்தர் :** உனக்கு நான் தரும் செல்வம் இந்த வார்த்தைகளே! நீ மனங்கவரும் ஐந்து காம போகங்களைத் துறந்து சிரத்தையோடு இல்லறத்தினின்றும் வெளியேறு! துன்பத்தின் இறுதியைக் காண்பவனாவாய்.

**இராகுலன் :** நான் இப்போது எந்தவித துன்பத்தையும் அனுபவிக்கவில்லையே...?

**புத்தர் :** நாளை உன்னிடம் எஞ்சுவது இன்றைய இன்பத்தின் எச்சங்களான துன்பங்களே! அவையே மலையாகி உன்மேல் சாயும். நீ உன்னையே நிலைப்படுத்திக்கொள்.

**இராகுலன் :** நான் பிறவிப்பயனை அடையாமல் உலகின் தன்மையை அறியாமல் எப்படித் துறவு ஏற்கமுடியும் ?

**புத்தர் :** காமபோகங்களில் அழுந்துவதுதான் பிறவிப் பயன் என்று கருதுகிறாயா? அவை உன்னை அழித்துவிடும். நீ இளைஞனைதால் நீ உலக இன்பங்களில் அவாவுறுகின்றாய்? அந்த அவாவினை அடக்கு. நீ உயர் நிலை அடைவாய். கணநேர இன்பத்திற்காக நித்திய இன்பத்தைத் துறக்க விரும்புகிறாயா?

**இராகுலன் :** (சிறிது மனமாற்றத்துடன்) விளக்கமாகக் கூறுங்கள் ததாகதரே!

புத்தர் : இளைஞனே நீ உன்னைக் கண்ணாடியில் பார்த்திருக்கின்றாயா?

இராகுலன் : ஆம் புத்தரே!

புத்தர்: அதன் பயனென்ன?

இராகுலன் : தன்னையே தனக்குக் காட்டுவது.

புத்தர் : அதே போல உன்னையே நீ பார்த்ததுண்டா? உன் ஆத்மா பற்றிக் சிந்தித்ததுண்டா. அப்படிச் சிந்தித்திருந்தால் நீயும் நித்திய இன்பத்தையே நாட விழைவாய்!...... நீ செய்யும் செயல் ஒவ்வொன்றையும் இதன் முடிவு என்ன என்று எண்ணிப்பார். உனக்கு உண்மை புலனாகும்.

இராகுலன் : இது உலக வாழ்வை... இயற்கையையே பழிப்பதாகாதா உலகில் பிறக்கும் அறுபத்திநான்குகோடி உயிர்களும் பிறந்து வளர்ந்து தமக்குரிய பணியினை மேற்கொண்டு உலக இயக்கத்திற்குத் துணை புரிகின்றன. அதற்கு மாறாக நாம் செல்வதில் ஏதாவது அர்த்தமுண்டா புனிதரே...

புத்தர் : ஆனால் அவற்றின் முடிவென்ன என்பதனை அறியாயா?

இராகுலன் : மரணம்? இதிலென்ன ஆச்சரியம்.

புத்தர் : இந்த மரணத்தையும் வென்ற வாழ்வில் உனக்குப் பற்றுத லில்லையா?

இராகுலன் : இல்லை... நிச்சயமாக இல்லை... கையிலே வெண்ணையை வைத்துக்கொண்டு நெய்க்கு அலையும் முயற்சியில் எனக்கு வெறுப்பே எஞ்சுகின்றது... இளமையின் போது அனுபவித்து காலத்தே பயிர் செய்து அறுவடை செய்வதே இன்பம்...... அறுவடை செய்ய ஆற்றலற்ற போது... மரணமே இன்பம்...

புத்தர் : (மகிழ்ந்து) இராகுலா... உன் சிந்தனை வளமானது. ஆனாலும் கேள்... இந்த இன்பங்களெல்லாம் அற்பமானவை... நிலையற்றவை...... இவற்றைவிட மேலானதும் ஒப்பற்றதுமான நிலை உனக்கு வேண்டாமா...?

இராகுலன் : அது என்ன இன்பம், புரியும்படி கூறுங்கள்?...

புத்தர் : இராகுலா... நீ ஒரு நாட்டைக் கைப்பற்றியதும்... என்ன செய்வாய்?

இராகுலன் : இன்னொரு நாட்டைக் கைப்பற்ற முயல்வேன்?

புத்தர் : இப்படியே கைப்பற்றிக் கொண்டு போய் எதிலே முடியும்...

இராகுலன் : ஏக சக்ராதிபதியாவதில் முடியும்...

புத்தர் : அதன்பின்...?

இராகுலன் : ஒன்றுமேயில்லை...

புத்தர் : அதன்பின் தான் எல்லாமே இருக்கிறது. உடலுக்கு தேடிய இன்பங்கள் அநித்தியம் என்றுணர்வாய்... மேலான இன்பத்தைத் தேடியலைவாய்......... ஆனால் அதற்கான காலங்கள் கழிந்து விட்டதே எனக் கவலைப்படுவாய்?... அந்தக் கவலையே உன்னை மாறாத் துன்பத்தில் நரகக் குழிக்குள் அமிழ்த்திவிடும்...

இராகுலன் : உண்மைதான் புனிதரே!......

புத்தர் : ஆகவே நீ என்னிடம் தேடி வந்த செல்வம்... இந்த ஞான செல்வம் ஒன்றைத்தான் நானளிக்க முடியும்... நான் தரும் செல்வம்... இந்த வார்த்தை ஒன்றுதான் – 'ஆசையை அவி!'

இராகுலன் : (காலடியில் விழுந்து) ஞான சூரியனே!... இனி நீங்களே என்னை ஆள வேண்டும். எனக்கும் உங்கள் காலடியில் இடம் தாருங்கள். என் கண்களைத் திறந்த கதிரவனே எனக்கு ஞான ஒளி காட்டுங்கள்...

புத்தர் : சரி... இராகுலா எழுந்திரு... நான் வந்த கடமை முடிந்தது என் யாத்திரை தொடங்குகின்றது. நாம் வைசாலி நோக்கிப் போகிறோம்... நீயும் இனி நம் சங்கத்தில் ஒருவனே...

[புத்தர் நடக்க, யாவரும் பின் தொடர்கிறார்கள்]

திரை

## காட்சி 5

[குசீ நகருக்குச் செல்லும் வழியில் உள்ள பாவா நகரில் ஒரு மாஞ்சோலையில் புத்தரும் சீடரும் தங்கியுள்ளனர். அப்போது சந்தன் என்பான் வந்து வணங்குகின்றான். மதிய நேரம்.]

சந்தன் : புத்தரே!... தங்கள் புனித அடிகளுக்கு வணக்கம். தங்களை நேரிலே காணும் பாக்கியம் பெற்ற நானும் உங்கள் அடியவனே

புத்தர் : தாங்கள் யார்?

சந்தன் : நான் இந்த மாஞ்சோலைக்குரியவன். தாங்கள் என் மாஞ் சோலையில் தங்கியிருப்பதும் என் பாக்கியமே; என் பெயர் சந்தன்.

புத்தர் : அப்படியா?... தங்கள் அன்புக்கு என் நன்றி.

சந்தன் : இன்னொரு விண்ணப்பம் அண்ணலே!

புத்தர் : என்ன?... தயங்காமல் கூறும் சந்தரே!...

சந்தன் : தாங்கள் இன்றைய மதிய உணவை என் இல்லத்தில் கொள்ள வேண்டும்.

புத்தர் : (சிறிது சிந்தனையின் பின்) அப்படியே ஆகட்டும். ஆனால் அவ் விருந்தை இந்த மாஞ்சோலையிலேயே வைத்துக் கொள்ளலாமே. நாம் துறவிகள். இல்லறத்தானின் இல்லங்களில் செல்வது வழக்கமல்ல.

சந்தன் : நல்லது. தங்கள் விருப்பப்படியே.

[விருந்து நடை பெறுகின்றது. சர்க்கரைப் பொங்கல், பணியாரங்கள் முதலியன பரிமாறப்படுகின்றன]

புத்தர் : (உண்டவாறு) நண்பரே! தயவு செய்து மற்றவர்களுக்கு இந்த மென்மையான * ஸூகரமத்தவ உணவைப் பரிமாறாதீர்கள்.

---

* இது காளான் என்றும் பன்றி இறைச்சி என்றும் பொருள்படும்

சந்தன் : (விளங்கா வியப்புடன்) அப்படியே ததாகதரே!

[புத்தரை மற்றவர்களும் வியப்புடன் நோக்குகிறார்கள். அவர் உணவை உட்கொள்வதில் மூழ்கிவிடுகிறார்]

புத்தர் : (எழுந்தபடி) சந்தரே?... தங்கள் விருப்பப்படியே விருந்துண்டோம். விடைபெறலாமா?

சந்தன் : இன்னொரு விண்ணப்பம் புனிதரே...

புத்தர் : என்ன?

சந்தன் : தாங்கள் தங்கிய இந்த மாஞ்சோலையை தங்கள் சங்கத்திற்கே அளிக்க விரும்புகிறேன். ஏற்றுக்கொள்வீர் அண்ணலே.

புத்தர் : அப்படியே ஆகட்டும். நாம் வரட்டுமா?

[சந்தன் தலையசைக்க நடக்கின்றனர்.]

திரை

## காட்சி 6

[குசி நகரின் - உபவர்த்தனம் என்னும் சால மரச்சோலை இரட்டைச் சால மரத்தினிடையே அமைந்த கட்டிலில், வட திசையில் சிரம் வைத்து, வலப் பக்கமாகச் சாய்ந்து, வலக் கையை மடக்கி தலைக்கு அணையாக வைத்தவாறு சயனித்திருக்கின்றார் பகவான். அன்று இயற்கை தனது தாய்மையின் கனிவை எங்கும் சொரிகின்றது. காலமல்லாக் காலத்தே சாலமரம் தனது பொன்னிறப் பூக்களைச் சொரிந்து கொண்டிருக்க, மலைச்சாரலின் வெண்பனித் துகள்களும், பூந்தாதுக்களும் பின்னிய மென் திரை வானையும் பூமியையும் இணைக்கின்றன. முகில் கூட்டத்தில் அசைவில்லை. முழு நிலவின் யாத்திரை வானத்திலேயே ஓரிடத்திலேயே நிலைத்து, தன் தண்ணொளிகளை பகவான் மீது சொரிகின்றது. பாலிற் குளித்த பளிங்காக அவர் மேனி என்றுமில்லாவாறு ஒளிருகின்றது. அருகே ஆனந்தர், உபாலி முதலிய சீடர்கள் நிற்க, தூரத்தே மக்கள் கூட்டம் திரளாக கூடியிருக்கின்றது]

புத்தர் : ஆனந்தா!... என் யாத்திரை இன்றுடன் முடிவு பெறப் போகிறது... இனி என் அடிச்சுவட்டில் நீங்களே என் யாத்திரையை நிறைவு செய்ய வேண்டும்.

ஆனந்தர் : ஐயனே!... அப்படிக் கூறாதீர்கள்...

புத்தர் : ஆனந்தா... உனக்கும் சாதாரண மக்களைப் போன்ற அஞ்ஞானமா...... மனிதக் காட்டிலே நானும் ஒரு மரம். அது

வெறும் மரமானால் விறகாகியோ, சந்தன மரமானால் அது தேய்ந்து மணம் கொடுத்தோ அழிந்து போகின்றன. அவை போன்றவர்கள் தாம் நாம்......

ஆனந்தர் : பகவானே! உங்களுக்கு ஏன் இந்த நோய் வந்தது. என்னால் பொறுக்க முடியவில்லையே.

புத்தர் : சந்தனின் உணவில் உள்ள சிறு தவறே எனது நோய்க்குக் காரணம்... ஆனந்தா?

ஆனந்தர் : (ஆச்சரியத்துடன்) இதனை நீங்கள் முன்னமே அறிவீர்களா?

புத்தர் : நன்கறிவேன். ஆதலால் தான் அவனிட்ட ஸூகரமத்தவத்தை உங்களுக்குப் பரிமாறவேண்டாம் என்று கூறினேன்.

ஆனந்தர் : அப்படியானால் தாங்கள் ஏன் அதனைப் புசித்தீர்கள் ஐயனே?

புத்தர் : அவன் என்னையிட்டே விருந்து வைத்தான். நான் உண்ணு விட்டால் அவன் மனம் வருந்துமல்லவா?

ஆனந்தர் : ததாகதரே! தங்கள் உயர் அன்பு உங்களை எங்களிடமிருந்து அல்லவா பிரிக்கப் போகிறது.

புத்தர் : அல்ல ஆனந்தா! நான் நிர்வாணமடையும் நாள் கிட்டிவிட்டது... அதனை நன்கறிவேன்...

ஆனந்தர் : தாங்கள் எங்களுக்குக் கூறும் இறுதி அறிவுரை என்ன புத்த பெருமானே!...... புத்த சங்கத்திற்கு தாங்கள் விடுக்கும் செய்தி என்ன பகவானே!

புத்தர் : ஆனந்தா! பிட்சு சங்கம் என்னிடமிருந்து எவற்றை அறிய விரும்புகின்றது. என் தருமத்தை நான் வெளிப்படையாகவே சொல்லியிருக்கிறேன். அதில் மூடு மந்திரம் எதுவுமே இல்லை...... இனி நீங்கள் உங்களையே சார்ந்து இருங்கள்...... ஆன்மாவைத் தீபமாக்கிக் கொள்ளுங்கள். தருமத்தையே தீபமாகக் கொள்ளுங்கள். ஆன்மாவை......... தருமத்தைப் புகலடையுங்கள்.

ஆனந்தர் : ததாகதரே!...... தாங்கள் பரிநிர்வாணம் அடைந்தும் நாங்கள் செய்யவேண்டியதென்ன ?

புத்தர் : ஆனந்தா! ததாகதரின் சடலத்திற்கு மரியாதை செய்வதைப் பற்றி நீ இடர்ப்பட வேண்டியதில்லை. ஆனால் ஆனந்தா ஒன்று மட்டும் கூறுவேன் உங்கள் நன்மைகளுக்காக நீங்களே பாடுபட வேண்டும். ஆர்வத்தோடு இருக்க வேண்டும். விழிப்போடு இருக்க வேண்டும்.

ஆனந்தர் : ஐயனே!... தாங்கள் தற்போது கூறும் அறிவுரைகள்

எங்களுக்கு மிக முக்கியமானது. தாங்கள் அருகில்லாவிட்டாலும் தங்களின் வாக்கியங்களில் நீங்கள் எங்கள் அருகிலேயே இருக்கிறீர்கள் என்பதை உணர்வோம்.

புத்தர் : ஓ! எனதருமைச் சீடர்களே! ஆனந்தன் கூறிய வார்த்தைகள் சத்தியமானவை. உங்களுக்கு நான் கூறும் இறுதி வார்த்தைகள் இவைதான்... நேர்மையான ஒழுக்கத்தை ஆதாரமாகக் கொண்டு சிந்தையை ஒரு நிலைப்படுத்தும் சமாதி நிலையின் பயனே மிகப் பெரியது. அதிலிருந்து பிறக்கும் ஞானவொளியால், ஐம்புலன்களிலிருந்து எழும் மாயக் கவர்ச்சிகளும், நான் என்கின்ற அகங்காரமும் விலகி ஓடும்!...

ஆனந்தர் : ஐயனே!... சற்று அமைதியாக இருங்கள்!...

புத்தர் : ஆம்!... நான் அமைதியடையும் நேரம் நெருங்கிவிட்டது... உலகிற்கு உண்மையொளியைத் துலக்கும் சூரியன்... மேற்கு மலை வாசலை அடைவதுபோல் நானும் என் தருமச்சாலையை அடையும் நேரம் அண்மித்துவிட்டது... ஓ! புனிதர்களே... பகவான் என்ன சொல்லவில்லை... எவற்றைச் சொல்லவில்லை. என்ற வீண் சிந்தனைகளில் ஈடுபடாதீர்கள்... பகவான் என்ன சொன்னார்......... ஏன் சொன்னார் என்ற சிந்தனைகளில் மட்டுமே மனதைச் செலுத்துங்கள்... ஓ... பிக்குகளே!... கருத்தோடு இருங்கள்!... புதையலாயிருங்கள்... சிந்தனை நிறைந்திருங்கள்... நான்போய் வருகிறேன்...

[பகவான் மௌனத்தில் ஆழ்ந்து நான்கு வகையான தியானங்களைக் கடந்து, இறுதியான பேரின்பத்தில் – நிலையான நிர்வாணத்தில் இலயித்து விடுகின்றார்.]

மக்கள் : (எல்லாரும்) ஐயனே!...... அருள் நெறி காட்டிய அண்ணலே!...... போய் விட்டீர்களா...... (ஒரே குரலில்)

புத்தம் சரணங் கச்சாமி
தம்மம் சரணங் கச்சாமி
சங்கம் சரணங் கச்சாமி
[வானை முழு நிலா நிறைக்கிறது.]

திரை



# தனியார் துறை நசுக்கப்பட விடக்கூடாது

யாழ்ப்பாணம 12-8-67 தனியார் துறை நசுக்கப்பட்டு வருவதை நாம் உணரக் கூடியதாக இருக்கின்றது. இதனுல் தனியார் துறைகளை மேற்கொண்டுள்ள ஆயிரக்கணக்கான முதலாளிகளும், அவர்களின் கீழ் ஊழியஞ் செய்யும் பல்லாயிரக் கணக்கான ஊழியர்களும் நட்டமடைந்து துன்பப்படக்கூடிய சூழ்நிலை உருவாகுவதினுல் நாம் ''தனியார்துறை நசுக்கப்பட விடக்கூடாது'' இவ்வாறு கடந்த 12-8-67-ல் நடைபெற்ற வட மாகாண அச்சிடுவோர் சங்க வருடாந்த பொதுக்கூட்டத்தின் போது தலைமை வகித்த ஸ்ரீ சண்முகநாத அச்சக அதிபர் எஸ். எஸ். குமாரசுவாமி அவர்கள் தெரிவித்தார்கள்.

தொடர்ந்து அவர் பேசுகையில் அச்சகத் தொழில் புரியும் நாம் எமக்குள்ள குறைகளை ஒரு முகமாக அரசாங்கத்துக்கு எடுத்துக் காட்டி எமக்கு ஆதரவு தர வேண்டுமென்று கேட்க வேண்டுமென்றும் இதனிமித்தம் சங்கத்தில் அங்கத்துவம் பெருமல் இருப்பவர்கள் யாவரும் சங்கத்திற் சேர்ந்து கொள்ள வேண்டுமென்றும் குறிப்பிட்டார்.

காரியதரிசி, தனுதிகாரி என்பவர்களின் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப் பட்டபின், அச்சக ஊழியர்களின் சம்பள விகிதங்களைத் திருத்த வேண்டிய அவசியத்தைப்பற்றியும், வாழைச்சேனை கடதாசிக் கூட்டுத்தாபனத்தார் கடதாசிகளின் விலைகளைக் கூட்டி விற்பதைச் சுட்டிக் காட்டி, அவ்விலைகளைக் குறைத்து உதவி செய்யும்படி அவர்களிடம் கேட்டுக் கொள்வது பற்றிய அவசியத்தைப் பற்றியும் காரியதரிசி எம். வி. ஆசீர்வாதம் ஜே. பி. அவர்கள் விளக்கிக் கூறினுர்.

மாதம் ஒரு வெளியீடு அச்சகச் சார்பில் வெளியிடுவது எனவும் தீர்மானிக்கப்பட்டது. புது வருட உத்தியோகத்தர் பின்வருமாறு ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

## வட மாகாண அச்சிடுவோர் சங்கம்

### நிருவாக சபையினர் 1967/68

1. தலைவர்: திரு. சி. ச. குமாரசுவாமி
   ஸ்ரீ சண்முகநாத அச்சகம், யாழ்ப்பாணம்
2. உப தலைவர்: திரு எம் சபாரட்டினம்
   திருமகள் அழுத்தம், சுன்னுகம்
3. காரியதரிசி: திரு. எம். வி ஆசீர்வாதம் ஜே. பி.
   ஆசீர்வாதம் அச்சகம், யாழ்ப்பாணம்

4. உப காரியதரிசி: திரு. தி. ச. வரதராசன்
ஆனந்தா அச்சகம், யாழ்ப்பாணம்

5. தனாதிகாரி : திரு. ஆ. சுப்பிரமணியம்
ஸ்ரீ சுப்பிரமணிய அச்சகம், யாழ்ப்பாணம்

6. உறுப்பினர்: திரு. வே. கந்தசாமி
விவேகானந்த அச்சகம், யாழ்ப்பாணம்

7. ,, திரு. மு. கணபதிப்பிள்ளை
ஸ்ரீ காந்தா அச்சகம், யாழ்ப்பாணம்

8. ,, திரு. எஸ். பி. சந்திரா
கொமேஷல் அச்சகம், யாழ்ப்பாணம்

9. ,, திரு. ஏ. பி. அப்பாப்பிள்ளை
ஸ்ரீ முருகன் அச்சகம், யாழ்ப்பாணம்

10. ,, திரு. வ. சி. மாணிக்கம்
மொழியரசி அச்சகம், அளவெட்டி

11. ,, திரு. சி. நவரத்தினம்
குகன் அச்சகம், தெல்லிப்பழை

---

# துன்பம்

இளமையிலே அன்னையை இழப்பது துன்பம்
இல்லாளே இல்லாமை அதிலுந் துன்பம்
வாழைக்குத் தன்குலையால் வருவது துன்பம்
வஞ்சியர்க்குக் கற்பினிலே களங்கம் துன்பம்
தாளாத நோயினிலே தவிப்பது துன்பம்
தவளைக்குப் பாம்பிடத்தில் தாளாத் துன்பம்
பண்புக்கும் நேர்மைக்கும் பணியும் துன்பம்
பக்தர்க்கு ஈசனார் அறுப்பது துன்பம்

கள்வர்க்குக் காவலரிடம் துன்பம் துன்பம்
கல்லுக்கு உளியினிடம் துன்பம் துன்பம்
ஈயுக்குச் சிலந்தியிடம் துன்பம் துன்பம்
ஏழைக்குப் பசியினால் துன்பம் துன்பம்
அரசர்க்குப் பகைவரால் துன்பம் துன்பம்
பாமரர்க்கு அறியாமை துன்பம் துன்பம்
குடிசைக்குப் புயலினாற் துன்பம் துன்பம்
யேசுவுக்கும் சிலுவையிலே துன்பம் துன்பம்

துன்பத்தின் எல்லையிலே இன்பம்! இன்பம்!
இன்பத்தை அடைவதற்கே துன்பம் துன்பம்

—சு. சிவபாலன்

Registered at the G. P O. as a Newspaper in Ceylon


வெளிவந்துவிட்டது ! வெளிவந்துவிட்டது !!




**உயர் வகுப்புகளில் தாவரவியலை ஒரு பாடமாகக் கற்கும் மாணவர்களுக்கு உகந்தது.**

**எல்லாப் பிரபல புத்தகசாலையிலும் கிடைக்கும்.**

**விலை : ரூபா 16/=**


இப்பத்திரிகை 'விவேகி' சொந்தக்காரருக்காக யாழ்ப்பாணம் 32, கண்டிவீதியிலுள்ள ஆசீர்வாதம் அச்சகத்தில் 27-8-67 இல் பதிக்கப்பெற்று வெளியிடப்பெற்றது.